கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# திரிமூர்த்தி மலைப்புராணம்

பாயிரம்

## சாற்றுக்கவிகள்

குமாரலிங்கம் மதுரைத் தமிழ்ச் சங்கமெம்பர்

மகா-ள-ள-ஸ்ரீ,

பழநிச்சாமிக் கவுண்டர் அவர்களால்

இயற்றிய

எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

மணியவிர்சூட்டுப்பாப்பணைப்பானுமறையோனிர்கரதலத்தேவும்
பணியவிர்தொங்கற்சங்கரன்றானும்பரிவுறுதானுவின்பெருமை.
திணியவிர்சேடனுரைத்திடவருந்திருக்கடமுனிசொலநடுவங்கு
மணியவிர்வாணிமனக்கொளத்தானுங்குமவ்வரையாவரேபுகல்வார்.

அச்சயிலத்தாகமந்தனைப்பகர்ந்தானனந்தனும்வாணியுமுனியு
மிச்சகமதனிலோருருவெடுத்தனெனநனிபுலமைசான்றுள்ளான்
கச்சகமுலையார்கலவியினீத்தகாசொளிபரப்பியமணிகண்
டுச்சகம்விளக்கும்விராடமாபுரத்தின்மொய்யவிர்காதையைச்சொற்றே

களமலிகண்டனடியவர்தமக்கோர்கருணையின்சொம்பெனத்தழைந்தங்
குளமலிகொள்ளுஞ்சைவமாறாலையுலகினிலூட்டியுள்ளினர்சூழ்
தளமலிகாவினணியுறுகுமரன்றனிதனைப்புரக்கியதட்ப
வளமலிவேலாயுதனென்னுநாமம்வயங்கிடுமுண்மையோன்றானே.

# சாத்துகவிகள்.

குமாரலிங்கம் குமுணைபுரிவாசி மகா-ா-ா-ஸ்ரீ

## கோ. வி. தி. இராமாநுஜையர் அவர்கள்

இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

எத்தலத்தோர்வியக்குமொருவிராடநகர்ப்புராணமதையிசைத்தான்
[முற்கண்
கைத்தலத்தோன்புராணமுரைத்தகவிருளைக்களைந்துநலக்கதிருய்ப்
[பித்தா
னித்தலத்தோரெவருமொவ்வாக்கருப்பணனீன்றருள்வேலாயுதவிற்
[பன்னன்
முத்தலத்தோர்களிக்குமும்மூர்த்தித்தலப்புராணமதைமொழிந்திட்
[டானே.

ஜெல்லிபட்டி மகா-ா-ா-ஸ்ரீ

## சின்னக்குருசாமி நாயுடு அவர்களால்

இயற்றியது

விஞ்சுபுகழ்வஞ்சிநகர்மஞ்ஞைவாகனக்கடவுளருளைமேவி
மஞ்சுதவழ்கஞ்சிமலைபஞ்சலிங்கதீர்த்தமகத்துவமுமாண்ணோர்
துஞ்சுதலெனும்பிறவிக்கடல்கடக்கவுமொருமுத்தொழிலடாத்து
கஞ்சினரியாணிவர்கள்சிறுவர்களாகியவெழில்சால்கதையுமன்றே.

அமரர்கள்வந்தனுதினமுமடிபணியுமமணேசர்கதையுமெல்லாச்
சமயிகளுஞ்சரிசரியென்றகமகிழ்வுதழுவவுஞ்சாற்றினர்கடம்பாற்
சுமனனுகான்பவமனுகாதாலெனற்குமையமறத்தாணிமீதிற்
குமரன்மகாகழறெழுவேலாயுதனுங்கவிவலவன்கூறினனே.

ஆயபுரி மகா-ா-ா-ஸ்ரீ

## தொப்பபிள்ளை அவர்களால்

இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

ஆதவனுமம்புலியுங்கண்ணூறுறாதற்கியலாதவசலமீதிற்
போதவனுமாதவனும்புராரியுமுற்றிலங்குதலப்புராணந்தன்னை
போதவனிமீதெவருப்புத்தமுதமெனவருந்தவுவந்துதந்தான்
வேதநிகமாகமங்களுணர்ந்துளவேலாயுதனும்வித்துவானே.

# சாத்துகவிகள்.

தஞ்சை மகா-ள-ள-ஸ்ரீ

## பெ. சிங்காரவடிவேலு பிள்ளை அவர்களால்

இயற்றிய

### இணைக்குறளாசிரியப்பா.

மணிநீரோடை மலர்ப்பொழிற்கூடற்
றிணைமருங்குப் பயின்ற செம்பொருள்வாழ்கை
வாடையுயிர்ப்பின் மாநிலமடைந்த
பீடுதகத்தந்த பெற்றிமுதுவருட்
சிலரேமுப்புரம் புலரக்கோன்றிய
முறுவலர்ப்போற்றுநர் பெறாஉம்பதவியு
முறையுளுமொன்றேயானை வென்றிச்
சிலரேமும்மை யுலகாந்தோங்கிய
மூவாப்போருண் முகிலைத்தாழுநர்
பேறுறுபதவியு மெய்ம்மையுறையுளு
மொன்றேயான வென்றிச்சிலரே
யாக்குமரியைந்த பூக்கெழுகிழமைத்
தேக்குறித் திறைஞ்சுநர்க்கமு
மற்றேயான மற்றிகண்புறத்து
மூவருமொருவயின் முடிந்தநிலைக்காட்சி
யாவரும்பெற்றில ரோவருநிலைய
வொன்றொன்றொன்று வொன்றியபதவியு
மொன்றுமொருங்குதா மெய்நிலவதனை
வொத்துத்தலைநிறுத்த வொருமுக்கடவுள
ரொருங்கு திகழிருங்கை
முருந்துதருமுறுவற் கருநெடுவாட்கட்
சிறுமியர்குழீஇ மறந்தவில்லாண்மை
வேடரொடுமகிழ்பு வெறியாட்டயர்ந்து
பாடுமலியோதைக் குரவைபெயரக்
குறுஞ்சுனைகுடைந்து நறுந்தாதுபடிதரு
பல்வளைகவிரிபூ பல்கத்தூஉய்க்
கவரிகை நடுக்கி
நிவர்தலம்பிணைக்கு

வேலர்ப்பரவுநர்ச் சிலத்துவாழ்க்கைக்
குறிஞ்சிவளம்பொற்பச் செறிந்தவின்னொட்ட
புகட்டி நெடுமுடம் கூர்த்தித்திருவரை
யொன்றேயதனைச் சென்றுதொழுந
ரொன்றுறுபதவியு நன்றுவிளக்குபு
வின்றமிழ்ப்புராண மிசைத்தனனன்றி
சைபாநெய்தா மாரியிற்கண்டன்
றெழுக்கப்புலமை விருப்பஞ்சிறந்தோ
ரெள்ளியன்கூர்ந்த வுளத்தன்றெள்ளிய
வறிவினனூக்கஞ் செறிவினன்றுரை
நகரானல்புள நகரான்சீரிய
நாலருங்கேள்வி நுணங்கியான்போந்த
வேலாயுதப்பெயர் விளங்கியோனே.

---

சாத்துகவிகள் முற்றிற்று.

சிவமயம்.

உலகிலென்றுமேநின்றிடுமுயர்புகழுடையோ
ரிலகிலக்ககோத்திரத்திரத்தவதரித்தவேளிறைவர்
பொலிகொள்பூமகனுயனன்றிருவடிப்பூசை
விலகலாதுமுப்போதுமேபுரியுமேதகவோர்.

ஆகமாதிநூலாய்ந்தறத்தாறகலாதார்
மாகநாதனோராகவொண்விபவங்கைவாய்ந்தா
ரீகைபூதலத்தெவரிவர்நிகரெனப்புலவர்க்
கிகையாதரத்தாரிரண்டாம்வருணத்தார்.

தெலுங்கதேயப்பொன்னேரிசிங்கீசுரியாந்தேயந்
துலங்கவாண்டவர்சொற்றவருகநற்றாயோ
ரிலங்குவாணரகேதனரினைபேரிகையார்
வலங்கொள்பாங்குகட்டியப்பட்டுவிருதுகள்வளர்த்தார்

இரவிகோத்திரத்திலீபச்சக்கிரவர்த்தியென்பேண்
றருகுமாரின்சந்ததிவந்தசற்குணத்தார்
வரிவிலாண்மையமரிற்சத்துருச்செயம்வகித்தார்
தரையின்மேம்படுசெல்விமாநகருறைதகையார்.

அன்னமாடையாவவணிசற்பாத்திரத்தழகாம்
பொன்னும்வைத்துநாடொறுந்தருபுண்ணியப்பூணோர்
வன்னமேவுநாராயணசாமிசுப்பயமால்
கன்னனென்னுஞ்சின்னக்குருசாமியாங்காளை.

என்னுமூவருமொழித்திரிமூர்த்திவெற்பேற்றந்
தன்னையோதுமாகமத்தையச்சிற்பொறித்தற்கங்
கென்னவேண்டியபொருளருள்புரிந்திசையிசையை
மன்னுமாநிலநாட்டிவைத்தனர்மனமகிழ்ந்தே.

முற்றிற்று.



உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# திரிமூர்த்திமலைப்புராணம்

உலகின்மேன்மை மிக்குயர் திரிமூர்த்தி கணுறையு
மலையின்மான் மியம்வழுத்திட வரமருளென்னக்
குழைபோர் மருப் பைங்கரக் குஞ்சரமுகவன்
சலசதாண் மலர்த்தாட்டுணை தலைமிசை யணிவாம் (௧)

சிவதுதி.

கங்கையுங் கமழ் கொன்றையு மழுவுமைக்காமு
மங்கை பங்குமுக்கண்ணு மாதங்க வத்திரமுந்
துங்கவங்க வொண்டொடங் கலுஞ்சூடிய சிவன்றட்
பங்கயங்களைப் பணிந்து பல்சுகம்படைத் துய்வாம். (௨)

உமைதுதி

உலகமுழுவது முதவியுஞ் சிறிதுந்தளராத வுகளக்கொங்கை
யிலகுமழகொழுகு மதியின்வதநமௌவன் முகையென்னு மூரற்
றிலகநுதலறம் வளர்க்குஞ் செங்கைதிருவடித் துணையைத்தினமும் போற்றிப்
பொலிபலசொல்வ ரப்பூத்துப்புன்மை யெலாநீத்து மகிழ்வொருந்த வாழ்வாம். (௩)

### நடேசர் துதி,

அம்புயனம் பரத்தமருகின்றவ
னும்பர்வெள்ளரும் பலானுரகமொண்புலி
யம்பிகைமகிழ வம்பலத்துளாடிய
செம்பதுமப்பதஞ் சிந்தைசேர்த்துவாம். (௬)

### விண்டுதுதி.

சங்குவாட்டண்டு சக்கரஞ்சார்ங்கத் தடக்கையன் றாமரைத்தவிசின்
மங்கைமார்பகத்தான் பாற்கடல்வதிவான் மங்குலினிடை யிடை
பதுமந்
தங்குகோமளத்தா னுலகெலாங்காக்குந் தன்மையானுபய தாட்டுணை
தாழ்ந்
திங்கியாஞ்செல்வங்கல்விநல்லாயுளெய்தலாயினிதுவாழ்ந்திருப்பாம்

### இலக்குமிதுதி.

இருநிதிமதிபூவெழில் கலைவலிமை யெண்ணறுதானிய விளங்கண்
மருமலர்மஞ்சமணி பணிமேன்மை வாகனம்வான் பொழில்வெற்றி
கரிபரியாட்களாதி சம்பத்துக் களித்தளித்தினிது காப்பாற்றுந்
திருமகளுபய கமலமாலடியைத் தினம்பணிந்துவகைசேர்தருவோம்.

### பிரமதுதி.

வானப்வானவர் மண்டலமானுடர் மாக்கள்
கானங்கார்வரை கண்ணியப் புண்ணியநதிகள்
மீனமாகிய வெழுவகைத் தோற்றமும்பிறங்க
வீனுமாபிரமா பதத்திணை பணிந்திடுவாம். (௭)

### சரஸ்வதிதுதி.

புரவலரும்புகழ்புலவர்புந்தியிலேந்திலக்கணச்சொற்பொருத்தமாகத்
திருவருள்செய்பவ டவளத்தேகத்தாளுயேன் செய்பணிசேர்கிற்
பாள்
பிரமனுளமகிழமகாள் பிறங்குபுத்தகக்கரத்தாளெனப் பேசுஞ்சொற்
சரசுவதிகமலமலர்த் தாட்டுணைதாழ்ந்திட்ட மெலாஞ்சார்ந்துய்வா
மால். (௮

## சமயங்காத்த விநாயகர் துதி.

இக்குமொழிச்சித்திபுத்திக்கிறைமகுணனிமையவரா திபர்களேத்திற்
றெக்கவிக்கினந் தொலைப்போன்றுறவர் கணம்பணிதூயன் சுபமெ
ன்றொரு
மிக்குதனியெற்காப்போன் வேழமுகன்றுரைநகரின்பான்மேவுந்
தக்கசமயங்காத்த தாளுவடிதாழ்ந்து நலமெல்லாஞ் சார்வாம். (௧)

## சுப்பிரமணியர் துதி.

அப்பிரமனைச் சிறையாக்கி யாக்கியும்
வப்பிரர் விண்ணவரைத்தன் மேனியு
மொப்பரு விராடமாபுரத்து வந்தும்வாழ்
சுப்பிரமண்ணியற் றொழுது போற்றுவாம் (௨)

## நந்திதேவர் துதி.

கயிலைமால்வரைக் கண்ணுதற் சந்நிதிக்காவற்
செயலிற்றேவரைத் துறவரைத்திருக்கை வேத்திரத்தா
லயலிலாதென வடித்துமுட்செல் லெனவிடுத்து
மியல்வாறுசெய் நந்திதேவனைப் பணிந்திருப்பாம். (௩)

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் துதி.

தேவதேவனிடத் துறைசெம்மலைப்
பாவைமேவுமோதரப் பாலையுண்
டாவலாயருட் பெற்றரும்பாசுரப்
பாவுசாற்று சம்பந்தற்பணிகுவாம். (௪)

## திருநாவுக்கரசு நாயனார் துதி.

சாக்கியர்பிணித்த கற்றுணைஞ்சாகர
மீக்கொளுந் தெப்பமாய் மேவிநான்மறைப்
பாக்கொடுபரமனைப் பாடிப்பாடுசேர்
வாக்குவாகீசர் தாள்வணங்கி வாழ்குவாம். (௫)

## சுந்தரமூர்த்தி நாயனார் துதி.

மணிமுத்தாநதி வெள்ளத்திட்ட வோரையினை
மணமிக்கார் திருவாரூர் மாகுளத்திற்கட்
டுளிவுற்றுதரத் தெடுத்தருள் சுந்தரமூர்த்தி
யிணைகற்றுதொழு தின்பமென்மேலு மெய்துவோம். (௬)

### மாணிக்கவாசகசுவாமிகள் துதி.

ஆரணமீரொன்பானுமாகமமோதுநீதி
மாமறையினக்கப் புத்தர்பாற்றருக்கம் பாராட்டிச்
சீருறச்செயித்த வாதவூரர் செந்தாமரைத்தா
ளேருறப்பணிந்து பாவமெல்லையும் வல்லைநீப்பாம். (௰௫)

### சண்டியடிகளை மற்றையநாயன்மார் துதி.

தாதைபுரிதவறறுத்தா டுண்டஞ்செய்த சண்டியடிகளடியிணையைத் துத்தாங்கித்
தீதுதெறுமைந்தெழுத்துச் சரிதாவராய்ச்சிவனடியார்க்கடியவராய்த் திகழுவார
யோதுபலபவமுழுவது மொருவினராயுள்ள திருத்தொண்டரொளிருபயமான
பாதபதுமங்குறைகளைந்துமோடப்பல கபமுறனி பாவப்பணிகுவாமால். (௰௬)

### குரு துதி.

அறிவிலாவெனை யகற்றிடாதருகினி லிருத்தி
மறுவிலாதிலைமெய்ப்புன்னெறிதனை வகுத்துச்
சிறியனென்றனை நல்வழியிற் செலச்செலுத்திப்
பிறிதிலாத நல்லயகுருவடிகள் பேணுவமால். (௰௭)

### அவையடக்கம்.

உம்பர்துதி திரிமூர்த்தி யோங்கன் மான்மியஞ்சிறியே னுரைக்கப் போத
லிட்டமொரு சிறுவிட்டி லெழுகடலுங் குப்புற்றப்பாற்றிரத்தே
ரப்பாஞ்செலவிடையாழ்ப வளிமைச்சிகரநி லடைதற்காகப்
பப்பிவிலச் சக்குரு சிறைமையப்பறப்பனவொப்பாம் புலவர்பான்முன்
மன்னே. (௰௮)

முத்தொழிற் சீர்மும்மூர்த்தி முளரியந்தாட் கட்டேவர்
தத்திராளரழுத்தொண் மனுவினுற் சாற்றும்போதோ
டிக்குலத்தோர் பூசித்தவெருக்கழகிலேயுமேற
லொத்தடியேன் புன்சொல்லு மொழுங்கினிலேறுமாதோ. (௰௯)

முதனூல்வழி வேறு.

ஈசனம்பிகைக் கியம்பவன்ன வனந்திக்கிசைப்பப்
பேசவன்னவன்ச னற்குமாரப்பெருந் தவனுந்
காசையாயவன் வேதவியாசனுக் கறைய
மாசில்சூத மாமுனிவனுக்கவன் வழங்கினனால். (௨௰)

எட்டின் முற்றசமிட்டவாக மங்களிமேலற்றப்
பட்டசைவவாக மத்தினின்ஞான சங்கிதைப்பா
லிட்டமெட்ட மும்மூர்த்திகடி கிரிபெரிமைக்கப்
பட்டதப்படியாந் தமிழ்ப்பாவினிற் பகர்வாம். (௨௧)

மறைவழாமன் மாதந்தொறு மும்முறைவழங்கத்
தழைகபாரெலாம் பற்பலதானிய சம்பத்
தெழுகநல்லற மிறைவன் பாட்டெழிலினைசெங்கோற்
குழைவுதீருக மாமறைக்கூட்ட மோங்குகவே. (௨௨)

வேறு.

காசினிப்பாலைன் கங்கைவங்கிசன்
மாசிலாமாட கோத்திரத்துவந்தவன்
றேசுசேர் குவளையங் கண்ணித்திண்புய
றிசையெட்டும் புகழுடையவாக்கினேன். (௨௩

தளிநகாதிபதிசாமியப்பனென்
றுளநனிக்கருமவாறெழுகுழுத்தம
னிளநகிலரிவைபரிச்சைகொண்மதன்
வளமிகுநாவலர்மெய்ச்சுவண்மையான். (௨௪)

ஆனரிய யணிவ ரமர்வதாகிய
வரையெழிலாகமம்வழங்குவாமென
விருதயத் தன்புகொண்டெற் கிசைத்தலாற்
றமைமிசை விரிவுறச்சாற்றலாயிற்றே. (௨௫)

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# நாட்டுப்படலம்.

எழுகடற் புடவியிலுள்ளோ ரெவருமெய்த்திடினுந்
தழுவியொண்வளஞ் சார்தரத்தக் கபாலூர்ந்
தெழிலியைந்தவாகிய கொங்குநாட் டணியெல்லா
மொழிகுவாமினி மேலியாமறிதரு முறையே. (௧)

வரையின்மாடவதரித்த லான்மாமணி யணியாற்
பொருவில்சீவனைப் புரத்தலாற் பூங்கொடியிடையா
லரவமேகலை யம்பிகையா மெனவழகு
தருவதாய் விளங்குற்றது தக்கபாலூரே. (௨)

மாலைமேவலான் மாவறணிறைத்த லாற்கமல
மேலுலாவலால் விண்டுவினடி தொடுவித்தாற்
சேலைமன்னலாற்றிரை முனர்ச்செறித லாற்றிகழும்
பாலின்மாநதி பங்கயப்பாவை யொப்பாமே. (௩)

திசைமுகன்றனைத் தழுவலாற் சங்கஞ்சேர்தலால்
வசையிகந்த பல்கலைகளான் மலர்வதிதரலா
லிசையகன்றிடு மறைகளாற் புலவர்களேத்து
மிசைமடந்தை யொத்திலங்கின தெழில்கொடென்றே. (௪)

திருந்தகத்தியற் செய்தலான் மருந்தை யொத்திட்டே
யருந்திற்புன் கணையாற்றலாற் பதமருள்வதனாற்
பொருந்து பற்பலபுலவரும் போற்றலாற் பொருவி
லருந்தமிழ்க் கிணையானது தோணியாமாறே. (௫)

சந்துபொன்மணி சாமரந்தந்திவன் றடங்கோ
டுந்துவேய் மணிகாரகிற்றிரைக் காத்துருட்டி
வந்தபா னதிதாயகமா மலைவளங்கொண்
டந்தநாயக னாகமடையரிவை யொப்பாமே. (௬)

மலைநிலைப்படு சந்தகிற்குங்கும வண்டன்
டலைத்தலைப்படு மிருகமையமறையமற பட்டுப்
புலவுலப்பறு புணரியைப் பரிமளம்பொருத்து
மலர்தலைப்படு மாட்சிசால்பா னதிமாதோ. (௭)

சங்கலைக்காத்தால் விசைத்தெரி தரத்தாக்குண்
டெங்கலைப்படப்பாளை விண்டுதிர்தரல் செகுஞ்சூ
பூங்கடற் பதிமணவினைக் கடையுட்பாலாரு
மங்களைக்கு மங்கலப்பொறி சிதறலொத்ததுவே. (௮)

அளவில்வெள்வளையார்ப்ப வாராம வண்டினங்கள்
விளரிபாடிட மயில்சிறைக்கரம் விரித்தாட
விளையும்பூக வண்பாளை வெண்சாமரைவீச
வளையும்பானதி மணமகள் கடற்றலைவனையே. (௯)

இன்னதன்மைய வானபாலா றெனுமெழிற்றே
னுன்னுபல் லுயிரோம்பலி னொடொழுகுயர்வாய்
மன்னுமொண் வளமல்கியவாம் வளநாடு
பன்னுசெல்வமெலாம் பரவிய கொங்குநாடு. (௰)

அறத்திறைகலாத வாடவாமை கற்புத்
திறத்திற்றீர லாத்தேவியர் திப்பியப் புதல்வர்
நிறைத்தவாயுளர் நீணிதிநேர்பவர் நீதிப்
புறத்துப்போக லாராற்பொலிவது கொங்குநாடு. (௰௧)

வேதமோதிய விதிவழியினில் விலகாத
கோதையாகிய கொங்களுலாண்டது குளிர்சொற்
போதமேவிய புலவராற்பொலியும் பொன்னுடே
யிதெனுப்பொலிந்தி லங்கியதெழிற் கொங்குநாடு. (௰௨)

தண்ணுலாஞ்சல சம்பத்துத்தாங்கியு மொருவ
குண்ணற்காடுதற் குதவலாவுலோபத் தாவிதன்பா
னண்ணறீதெனவார் கலியகன்று நாளுளும்
வண்ணமாவளம் வழங்கிடுவது கொங்குநாடு. (௰௩)

எழில்கொள் வண்டினமிசைசெயுங் கமலநாறேரி
வழியபட்டுமிழ் கட்டவிழ்குவளைவாய் தடங்கள்

கொழுமடற்கொளுங்கு முகத்தின்கொள்ளை கொள்கிடங்கு
பொழுதெலாம் பிழிபொழிதரு நெய்தலம்பொய்கை. (௧௪)

பச்செனச் சுருட்பாப்பிய பற்பலசாலி
மிச்சமுத்தினங்கட் கடைவெடி வியன்கன்ன
விச்சைபெய்திடக் குலையிலங்கிய விளங்கமுகா
ரச்சமுற்றிடு தாக்கடியனைய காயரம்பை. (௧௫)

மாகமெட்டிய நெட்டிலைக்குலை வளர்தாழை
மேகமூட்டிய புன்னை தீங்களைவிளைவருக்கை
யோகைமட்டறவுகவு மாமரங்களு முடைய
வாகிபெட்டினை வெற்றிட மற்றந்நாடு. (௧௬)

சொல்லின்சொற்குலை கன்னலிற்றுன்ன வக்கன்னன்
மல்லல்வாழையிற்சாய் தாவாழை வெண்குலைபோய்ப்
புல்லவான் கமுகைக்கமுகுக் குலைபுகுந்தெங்
கெல்லைவான்றரு வெறிநீர் தாழையின்குலையே. (௧௭)

சேலும்வாளையுந் தாவிடப்பலாப் பழந்தெறிக்
காலுந்தேனொடு கழைவழிசாறனாய்க் கடுகிக்
கோலமாகிய குளம்புகுந்து கும்பலகால்போய்
வேலைமேவிமேவுவ வெலாம் விலக்கிடுமாதோ. (௧௮)

வேறு.

வனமெலாமழையுலாவ வயலெலாங் கயல்கள்வாவப்
புனலெலாங்கயங்களெல்லாம் பொறிவரி யரியுலாவ
வனமெலாமுத்தந்தத்தும் வரம்பெலாம் வளையுலாவ
வனமெலாம் புளினக்குன்றி னயலெலா முலாவுமன்றே. (௧௯)

இருமருப்பெருமை செந்நெலின் கதிர்மேய்ந்தின்பெய்தி
யருகுழுமருதநீழ லடைந்தயா வுயிர்த்தப்பாற்போய்ப்
பெருகுறுகுளத்துளாடப் பிறிதுசேர்வாளை தாவித்
தருநிரைசாரவண்டு தாமரைசாரு பன்றே. (௨௰)

கழையொடித்துரப்பி மள்ளர்கடாக்களை யடிப்பக்கட்பா
விழியெழின்முத்துஞ் செந்நெலிறுத்துழி யிரைந்தமுத்து
முழவுழுமுனையிற் றுக்குற்றுடைந்துதிர் வளையொண்முத்துங்
குழவிவெண்டிங்கட் கோடுகுத்த வீழ்கமுகின்முத்தும். (௨௧)

வாளிவாய்வரால்கள் வாவமறைகிழிந் துதிர் மாமுத்தும்
பாவியபாம்பின்வாயிற் படுவளையுடை பன்முத்து
மேவுபாலாறுபற்பல் விரிதிரைக்கரத்தால் வாரித்
தூவியமுத்து மூங்கிற் சொரிதருதூய முத்தும். (௨௨)

குடமெனமடிகொண் மேதிகோடுறு கோடிகாக்க
வடிபடுபரம்பை முத்துமருப்பணி முறுவற்செவ்வாய்
வடபடுகொங்கை மள்ளர்மங்கையர்களை கைவாங்கந்
தடப்பணையுடைந்தபற்பருமறைதருதண் முத்தும். (௨௩)

அரிஞிமிராராமத் தாரணிநிழன்முளைத்து மீப்போய்
விரிதருபவளவல்லி விசித்திடவிட் செல்வெய்யோன்
பரிகுரப்பாதம் வேகப்படத்திடிக் கெனப்பாய்போது
சொரிதருபுன்னைப் போதுமயங்க வெங்கெங்குந்துன்னும்.

ஆலைவாய்ச்சாறு காய்ச்சடர் புகைகாரென்றுடுஞ்
சோலைவாய்மயிலுமாதர் தொகுதியுமவர் சொல்சொல்லுங்
கோல்பாங்குயிலுங் கிள்ளைக்குலமும் மேற்றுமைமேதாற்றுநெடப்
பாலும்பார்த்தோர்கேட்டோர்கண்மயங்கிடும்பான்மைத்தாமால்

பன்னும்வெண் கமலப்போதும் பால்வளைக்குலமும்பற்ப
லன்னமுமெய்தற் பூவுமரத்தவம் புயத்தம்போது
மன்னிநீராடு மாதர்வதநமுங் கரியகண்ணும்
மின்னநீதென்றே ராமற்கயமெலா மிலங்குமாதோ. (௨௬)

தேனிமிர்சோலை சேருஞ்செற் றெனிமுழவம்பேரி
தானிறைபோதை யாலைதானடத் தாரவாரம்.
வானிறவளையினார்ப் புவளையரிவாளா னெல்லைத்
தானறுத்தடித்துப் போர்செய்தருவதாற் சாருமாலல். (௨௭)

பள்ளநீர்வெள்ளச் சும்மைபடையுழப் படவாங்கவ்வை
யள்ளல்வாய் நாறுநாட்டுமமலை வண்டறையும்பாடற்
கொள்ளைபாங்கு முறன்மள்ளர் கோதையர்குதலைநாதந்
தெள்ளுநீர்ப்புள் விள்ளோசை செறுவெலா மயங்குமன்றே.

இரைத்தமிழ்தாறு வீசுமிபமருப் பெண்ணின்முத்துந்
தரைத்தலைவயிர நீலந்தக்கசெம்மணியுஞ் சோதி

# நாட்டுப்படலம்.

விரித்தொளிர் மருதமிந்துமீன்கதிர் மங்குன்மேவத்
தரித்தவம்பரத்தை யொத்துத்தான் பொலிதருதன்மைத்தே.

புன்கணென்பன புகாமற்போக்கிப் பல்வளனுநல்கி
யின்பமென்மேனு மீயுமெறிதிரைப்பாலா றென்னுங்
கன்னிகாப்பாற்றுஞ் செல்வக்கண்ணியக் கொங்குநாடு
பொன்னுலாம்போக தெய்வபூமியிற் பொலிந்தமாதோ. (௰)

ஆரணாகமபாராயணத்திணமாரவாரம்
பூரணாகுதிசெய் வெள்விப்பொங்கொலி திருவிழாவாற்
சாருமார்ப்பாடம் வீணைதண்ணுமை தழங்குபம்ம
லுரெலாமென்றுந் துன்றியுள்ளது கொங்குநாடு. (௰௧)

அகழ்மதிலண்ட பெட்டுமணி மலிமாடகூட
மகிழ்மிகுநடனசாலை மகளிர்வாழ் செய்குன்றங்க
டிகழ்திருக்கோபுரங்கள் செவ்விசேர் சாளரங்க
டொகைதொகா வூரிக்கொங்கு நாட்டின்கட்சொல்லினின்றே.

வேதமாறங்கமோதும் விதிவழா தெழுத்தைந்தோதிச்
சோதிநீறணிந்து கண்டித்தொடை தொடையென்னச்சூடி
யாதியாஞ்சிவனை யன்னானடியரைக் குருவைநாளும்
போதுதூய்ப்போற்றி வாழும்புண்ணியரிட மெங்கெங்கும்.

நெறிபிறழுவதந்நாட் டினேரிழையார் நீள்கண்ணே
வெறியனவிடையே வாய்விட்டரற்றுவ சிலம்பேமாட்சி
யறலவர்குழலேவா டலவரணிதொடையே யல்லா
னறியபாலாற்றுக் கொங்குநாட்டொரு குறையுமின்றே. (௰௪)

பங்கமாவன வன்னாட்டுப் பழனமேபார்க்கினெங்குஞ்
சிங்கல்சேருவது பாவச்செய்கையே செழிப்பிலாமன்
மங்குவபொய்யே கோபமாதராரிதழே யல்லாற்
கொங்குநாடெங்குங் கூறிற்குறைசிறிதில்லை மாதோ. (௰௫)

குன்றினதென்னவிம் முங்கோதையர் கொங்கைகொண்கர்
வன்றிறன்மார்பத்தூடி யலர்ப்பதத்துதைப்ப வாடிக்
கன்றுமிதன்றி யொன்றுங்கன்றுவ தின்றுகங்கை
யென்றுசொல்கின்ற பாலாறெய்திய கொங்குநாடு. (௰௬)

நாட்டுப்படல முற்றிற்று.

# நகரப்படலம்.

அலகில்பல்கலத்தார் கலிவருமையன்றிடினு
மிலகும்பல்வள மீயும்பாலாற்றினை யெய்திப்
பொலியுங் கொங்குநாட்டணி புகன்றனம் பொருவற்றுக்
குலவுநற்றளி நகரணிசிறிது கூறிடுவாம். (க)

திகழுமூவரிற் சிவபெருமான் றிருந்தொளியிற்
கதனமாமணி வரைகளிற்கனக வெற்பெவரும்
புகழுமாமனுவிற் பஞ்சாக்கர மெனப்புகல்பன்
னகரினமேன்மை நண்ணிய துநற்றளியெனு நகரம். (உ)

வேறு.

உரகரூபரெல்லாம் வேருறவூன்றி யூரியினகமிடைத்தொளிசெ
யிரவியூரிர்த்து மதியினை மதியாதேறி நாளிடமிசையேகி
யரமடமகளிரம்பனை கமழ்ங்கோடமுகிய பக்கெறிந்தாடத்
திருநிமறரு நற்றருநிரைசோலை செவ்விதுசூழ்ந்துளதன்றே.

மாரகதமயப்பச்சிலைத் தலைக்கமுக மரங்களின் மலர்விளப்பாளை
யிரவியினிரதப்பரி மருங்கசைக்கு மெழில்கொள் சாமரத்தினோடு
பொருவறுதெங்கின் சிரம்விரிபாளை பொன்முடிபுனைபுருகூத [சையப்
னரசவை மருவியமட மாதரசைக்குறைக்க வரியோடாடும். (ச)

இலைபொழிவியாதாயரும் பினநாளா மிலங்கலரிந்து விஞ்சகப்
பொலிபொழிற்கினை பெண்டிசைதொறும் போகிப்புகர் முகமதமலை [மருப்பின்
றலையுறைமதடவமத முறுமரியத்தண்டடங்க வட்டிடைத்தாவி
மலர்களின் மதுவுண்டொல்லென வொலித்துவண்டொடுவண்டம
ராடும். (ரு)

இத்தடஞ்சோலைப் புதுமணத்தென்றலின் மையாலெழிற்கரும்பெரு
தத்தநற்றலக்கற்பகமிசை யேறியரம்பையராணி மலர்கொய்தாங்
குத்தமத்தணிந் தொண்கனிபறித் தருந்தியொப்பரு மகமகிழ்வுளரா
யத்தருமலருங் கனிகளும்வெறுத்தா ராய்க்கரத்தினுந்தொடாரன்றே.

அரிகுயிற் சுகப்பூகத்தணிபாளையாம் பிரத்தளிர்மலயமலை
வருசிறுதென்றன்மதனனைங்கணைப் பூமாதர்தங்குழாம்வந்திதரலா
லெரிமணியிலைஞ்சிகுழ்பொழின்மாரனிரதியோடினிதுவீற்றிருக்குந்
திருநகரிதுவாமெனத்தெரிதரலாய்த்திசைதிசைவிளங்குசெல்வித்தே

மேகமேற்கட்டாய் மாதவிமுன்னேவிடுமெழிலெழினியாய்விளங்கத்
தோகையாசசரியந்தனை நடமாடச்சுரும்பினம் பாடக்கோகிலங்க
ளோகையாய்க்குழலிசைத்திடநோக்கியுளமகிழ்ந்தாரமும்பொ
ராகமுங்கொங்கு நல்கமன் மதனுமிரதியுநன்குவீற்றிருப்பார். [ன்று

வேறு.

நற்றுறைதொறுப்படி நங்கைமார்முலை
யிற்றலைசந்தனநானமெல்லவும்
பற்றியோசனை சுதம்பரிமளம்பர
வுற்றநற்றடவளம்போது வாமரோ. (௯)

பற்பலர்முகத்தலாற் குறைவுபட்டிடாப்
பொற்பினினிறைவுறீ இயுவகைபூத்தலா
லெற்பணிசிவபிரானிசையைப்பாடுந
ரற்புறுகல்விபோலாருந் தன்மைத்தே. (௰)

மலிபலமலரணிபணிந்துமாறறப்
பொலிபுதுமணமிகப் பொருந்துபான்மையா
லுலவியவலையுடை யோடையாவையு
மிலகியமணமட மாதரேய்ந்தவே. (௰௧)

வெண்ணிறக்கைரவமலர்விராயதில்
வண்ணமாகிய பிரவாளவல்லிதா
னண்ணியதடங்கமலாலயத்தவ
ணெண்ணுபாற்கடலென நன்குதோன்றுமே. (௰௨)

அமிழ்தெனச்சுவைசெறீஇ யியறல்வருதவாய்க்
கமைகொளுமோதி மங்களிக்குந்தண்டட
மிமையவர்நகரிடை யிலங்கியோர்மிகச்
சமைதருமானத தடாகமொத்தவே. (௰௩)

சிறையறுபதமுரால் செவ்விசேர்தரூஉ
நிறைதருகைரவம் பூத்தநீர்த்தடங்

கறைமுழுவது மறலாகிக்கங்குல்வாய்
நின்றமதிபலவெழுந்து வருநீர்மைத்தே. (௰௪)

மத்தமாவோடி கன்மாதர்வெம்முலை
தத்தைபோன்மொழிமட மாதர்சக்கெனக்
கொத்தலர்குவளையங்குண்டு நீர்த்தட
மொத்ததங்குவரிலாவு வரிதன்னையே. (௰௫)

ஏழிசையரிமுரன்றினி துண்டண்ணற
வீழிசைச்சோலையும் விடாமணங்கமழ்
வாழியவாவியின்வளமுங்கூறினு
மாழியவகழியினணி சொல்வாமரோ. (௰௬)

அனந்தனம்பணவரைபாழ்வதாகிநல்
வனந்தனுமகழ்மதிவைத்தவெம்பிரா
னனந்ததிபாதலத்தொருவிச்சூழ்வா
மனுந்திரைவானதி மானுமாண்பிற்றே. (௰௭)

அரிவையாகன்புனலாடவற்றுவீழ்
தருமணிமாலையச்சலத்திட்டாழ்ந்துபோ
யரவர்தங்குபைதி மகுடத்தண்மிய
விரிமணிமாலையோ டிலங்கிமேவுமே. (௰௮)

வரைமறைதருப்படிவயங்ககழ்க்கணி
னிரையாக்காம்பல்கணி மிர்ந்துதோற்றுத
லுரகநாயகன்படத்தொளிருஞ்செம்மணி
தருசுடர்க்கொழுந்தெனத்தயங்குந் தன்மைத்தே. (௰௯)

அம்புயத்தம்மலரளிகள் கள்ளையுண்
டும்பரினுற்றுவீழுற்றதன்மைதான்
கம்பறழ்கந்தரக்காவில்கன்னிய
ரம்பரகத்தகழுங்காடலன்னதே. (௨௰)

நீண்மதிற்சூழகழ்நின்றுமேலெழீஇ
வாண்மலியிந்நகர்வளங்களெல்லவுங்
காண்வருநாகர்கள் கன்னிமார்கணேற்
றுண்மிகு குவளைகடைந்துதோற்றுமே (௨௧)

காரினக்கர்ச்சனை கேட்டுக்கஞ்சமிக்
கார்கழச்சேலினமச்சுற்றண்டந்தாஅய்ச்
சீருறுமங்கையிற்சேர்ந்துதிவ்விய
நாரமுண்டிவ்வகழ்க்கட்பினன்றுமே. (௨௨)

வேறு.

திகழ்தருவயிரவகழியைமருவிச்செவ்வியமணியொளிதழைத்தாங்
கிகன்மிகுகபடக்கூன்முதுகிடையினைறிடவிமையவரெல்லாந்
தொகுபடவடல்வாசுகிதனைச்சுற்றித்தோளிறக்கடைந்தமந்தரமா
கிரியையொத்தெண்டிசையெலாம்வளைந்தசெவ்வியமதிற்சிறப்பு
ரைப்பாம். (௨௫)

மணிமயமுழுதச்சுவையறன்மாறு வண்படிகப்படிவாய்ந்த
வணியகழ்க்கிடங்கி னடிநிமிர்ந்தண்டத்தண்டியவாடகவாரை
யிணையிரிசம்புநாவனன்னதிசூழ்ந்தெங்கணுமெழின்மிகவிமை
கணமலியோராயிரசிகரஞ்சேர்கனகவெற்பெனமணிக்கவினும். [யோர்

அயனகலண்டப்பித்திகையமைத்தப்பாலுதயாசலமாக்கி
யினையகரம்படிந்தபின்னர் பாதலம்வாளெல்லவுங்கடந்தசையாது
வயமுறவடிவுநிறைதராவின்மாறறவருந்திப்பல்காலஞ்
செயவாலுற்றதெனவுலகனைத்துஞ்செப்பநின்றதுசெழும்புரிசை.

சுடர்மணிமதிலின்றலைதொறுமசைந்துதுலங்கியதுகிற் கொடியெல்
நெடியவல்லுலவைபறைதரவெழுந்துநிமிர்மதிற்றலையடிபடுதல் [லா
படர்மணிக்கனகமுடியணியணியும்பண்ணவர்பரவுபொன்முட்டுப்
புடையடர்ந்திலங்கும்வானதிபொருந்தும்பூந்திரையறைந்தெனப்
பொலியும். (௨௬)

மரகதன்றனதாரிருநிதிநிறையும்வான்மணிப்போக்கிசமதற்கே
ரிரணியத்திபற்றூறற்கவரின்வாயிலேத்திறந்தாலெனவிலங்கும்
பரிசையிற்புரிபொற்கோபுரமாலும் பூமனுந்தேடமுன்போந்த
வெரிகிரியையொத்திருந்தவெண்கொடிகளெங்கணுமெழுந் தெழு
ந்தாடும். (௨௭)

வேறு.

பொலியுமாதாரர்புருவமொத்திடுதனுவளைத்தங்
கிலகுபர்த்தசந்திரக்கணைகளைமிகவிறைக்கு

மலசிலைக்கினியாத்திரத்தடைபலர்த்தடுத்து
வில்கவெப்படைதாமிரநீரைமேல்வீசும். (உஅ)

கட்கங்கேடகம் பிடித்திடியாமெனக்கர்ச்சித்
துட்கவொண்மழுச்சூலமு மிடைவிடாதோச்சு
மட்கமாற்றலர் மார்பிடைப் பலபடைவழங்கும்
வெட்கவக்கினி காய்மணனெய்மிசைவீசும். (உகூ)

வெப்பமிக்குறு சக்கரந்தோமரம்வீசு
மொப்பிலப்பொரு கோடி நூறுமெனவுமிழுங்
கப்பணங்கரதலங் கொடுகருகலர்க்காதுஞ்
செப்பருந்தகர்ப்பொறி திடுதிடுமெனப்பாயும். (௩௰)

பம்பைபல்லியந் தண்ணுமைபலப்பட வடிக்குங்
கொம்புகம்புகளூதும் பல்கவண்கலைக்கொட்டு
மிம்பரெண்டிசையெட்டி மட்டற்றுமேமேலறி
யும்பரொண்ணகருறுபுரிசைப்பொறியுருவே. (௩௧)

செப்புநூல்வழிசென்றலங்காரங்கடிரண்டு
தப்பிலாமலர்மணிமுதன்மங்கலந்தழுவிப்
பப்புகாரிகைசீர்தொடர்தொடைபலபரவி
யொப்பிலாக்கவியொத்த வீதிச்சிறப்புரைப்பாம். (௩௨)

ஆறருஞ்சுவை யேழிசையெண்குணமமையக்
கூறுமொண்மறையோதை முத்தழல்குமுறோசை
யெமாறுஞ்சிவதோத்திரஞ் செய்யெழிலிரைச்ச
லாறெனுந்தொழிலந்தணர் தெருவருதன்றே. (௩௩)

வேறு.

பரகதமணிவண் சோதிவாய்ந்த கிற்றூபம்வாரிப்
பரிமளச்சேறளாவிப் பகர்தருநாளந்தன்னைக்
கரைபடுத்தெழிற்கைமாவின் மும்மதக்கலுழியாறு
திரைசெறியமுனையென்னத்திகழுமாலரசர்வீதி. (௩௪)

சொன்னத்தொண்சோதிமல்கித் தோகையர்கையாற்றூவும்
வன்னப்பொற்சுண்ணம் வாய்ந்துமலயச்சேறுதீற்றி

மின்னைப்பின்மணிகளாதி மேம்படுபொருள் விற்குஞ்சொற்
பன்னப்பட்டரசர் பின்னோர்வீதியின் பண்பிற்றுமே. (௰௫)

மகிழும்பாலனத்தினு மாண்டுறைவழாநீரானு
மிகவிலாத்தமிழ்த்தேர்வானும் புலவரேத்திசையினானுந்
திகைசெயார்கலிசேராத செய்கையானும்வேளாளர்
தொகுமகாவீதிவையைத்தூ நதிபோன்றதன்றே. (௰௬)

வேதவத்தியயனவோதை மெய்ச்சுமாகமவீறோசை
தீதறுமூவர்செப்புந் திப்பியப்பாவின்சத்த
மோதுறுசேரமான் சோனுலாவொலிவாதவூரர்
மாதிருவாசகச்சீர்பலி தருமாரவாரம் (௰௭)

இடம்புரிவலம்புரிப்பாலெழில்வளை யினிலாங்கவ்வை
நடம்புரிமாதர் பாதச்சிலம்பெழுநல்லநாத
மிடம்படுமிரலையெய்து மிடிகுறுந்தடியாலெற்றத்
திடம்படவதிரும்பேரி தண்ணுமைதிமிலைச்சும்மை. (௰௮)

வேறு.

ஏழிசைக்குழலிரட்டியாழின்னிசைகங்கை
வாழிசைச்சடையான் மகோற்சவமலிதுழனி
பாழிமைக்கரிபரிகளின்கர்ச்சனைபடிசூ
ழாழியைத்தொனியடக்கி மேலாரவாரிக்கும். (௰௯)

இந்திரன் முதலாகிய வெண்டிசைப்பாலர்
நந்திநற்கண நாதர்கணவி றிருவிழாவின்
சந்தங்கண்ணுற வைகலாற் சம்புவிண்டயனு
மிந்தமூவர்க ளெழிலுலகே யெனவிலங்கும். (௨௰)

வேதன்மால் சிவனிவர்கண்மா திருவிழாவிழைவாற்
சூதனத்திரி காசிபன்சுகன்ச நற்குமார
னாதரத்திறவர்க ளளவற வமர்வதனா
லோதுமுத்தமனை மிசம்வதரி யொத்துளதே. (௨௧)

ஓரடிக்கோராயிரம் பசும்பொற் பரிசுதவுஞ்
சீரடிச்சிவனாதி முத்தேவரைப் போற்றி

நாளுறப்பலநாகர்கள் வாசஞ்செய் நலத்தா
லேருறத்திகழ் நாகர்களுலகென விலங்கும். (சஉ)

களங்கமற்றபல் பசுங்கதிர்த் தெவியல்சுடிப்ப
விளங்குமுத்தணி வெண்குடை விரவுமாவணங்க
டுளங்குசந்திர ரெண்ணறு கோடிகடொக்கு
விளங்குவெண்மதி மேவியநகர் நிகர்மேவும். (சஙு)

குற்றமற்ற மாணிக்கரத்தினம் பலகுயிற்றி
விற்றயங்கு சத்திரமிட மறமிடைதருக
லொற்றைறயந்திகிரிச் சயந்தனத்தி னிலுவந்தே
றுற்றசெங்கதி ருறைவெழிலுலகை யொப்பாமே. (சச)

மாழைவண் கயிற் றிடைமரகத விலைவணொய்த்
தாழைதண் கமுகரம்பைபைந்தம் பங்கடமுவித்
தாழல்விண் டொட றங்கியதுகிற் கொடிவீதி
மாழைமின்னொடு மருவியவுலகென வயங்கும். (சரு)

குதிக்குய்வெண் பொரிக்குட் பையுங் குவைகுவையாக
விதைக்கும் பாவிதைகமுகுகளும் விளங்கியவீதி
மதிக்குந்தாரகை பற்பலகோடிகள் வயங்க
வுதிக்குஞ் சுக்கைகளுறைதருமூரை யொப்பாமே. (சசா)

அன்னமா நடையஞ்சுகமா மொழிதோகை
பொன்னவாகிய காமரளரேழு கன்னியர்கள்
மன்னுமாமகள் பங்கயமாதவிராணி
துன்னலான்மலர்ச்சோலை கொலாமெனத் துலங்கும். (சஎ)

எழில்கொள் சட்சதைபோதன யினியநீராஞ்
செழியகற்புரம் பாகுவெள்ளிலை தினமீந்து
தழுவிளைப்பநச செய்தலாற் சயிலைதின்மகளா
மெழுமெனம்மையி னறப்புறத்திலங்குமவ்வீதி. (சஅ)

தேவர்பூசையர்ச்சனை செயுஞ்செல்வர் முத்தீயி
னவலாதயாகம் புரிபவரஞ்செட் டெழுத்தின்
மேவுமாமனு வுச்சரிப்பவர் வியன்புராண
மோவிலா மறையோர தொலியுடையதவ்வீதி. (சகூ)

சார்துதித்திடு காழியிற்பிள்ளை நாவரசு
பாரசுந்தரனுதி பற்பலதிருத் தொண்ட
ராமையனற்றிருமால் விழாவனுதின நோக்கி
யுமைசெயுந் துதி வாழ்த்தொலி யுடையதுவீதி. (ருo)

வானதிச் சடையான் முதன் மூவரு மகிழத்
தாண்டகத்துலா வீதியிலரம்பையர் சார்ந்து
மாணமன்னிய பாடலுநால்வழி வழாமற்
றூண்டித்திடு மொலியும்வான் முகடுறத்தழுவும். (ருக)

வேறு.

ஆயிரானனேரசணைவிடையிடியுமயனனவாகனத்தார்ப்புங்
கருடன்மேற் கரியோன்வரவருகலிப்புங்க கனகாவலன் களிற்றொ
[லியும்
பாகவானைடவானவர்கண்மேற்கொண்டபற்பலவாகனத் ததிர்ப்புந்
திருவுலாவவீதி முழுவதும்பரவித்திசைசெறிந்தண்டமீச்செல்லும்.

அயனரியரனென்னவர்மனைவியர்களனுதினமுலாவாற்சமூகா
யிமையருவீதியிடையரமகளிரெண்ணிலர்கடகமேற்றிடுகை
வயமுறவிசிறுசாமரையாலவட்டத்தின்வாய்வருவளியு
முயர்தருமலயத்துவாவிலங்காலுமொருங்குநாடொறுமயங்குறுமே.

மடந்தையர்மகிழ்நர்மகிழ்விறைற்றூற்றுஞ்சிவிறிவண்டிவலையுமாட
மிடைந்திடுகொடிகள்விண்ணதிவீழ்ந்துமேமெலமுந்தொறுவிழு
[துளியு
மிடந்தொறுமிமையோர்சொரிதருபூவினிழிபிழித்திவலையுநீங்கா
தடந்திரைவரைதாமரையுறையிறைவர்சாறுபோதருதிருவீதி. (ருஉ)

நாடொறுமூவர் விழாவணிகாண்பானண்ணுறு பண்ணவர்மணிமகுட
மூடுறத்தாக்கவுதிர் சுவணத்துாளுயர்மலையசனனுனத்தா
வீடுறுவீதிமெழுகலான்மீதுநிறைந்தொளிநிலவுதனிகரி
லாடகத்தானங்கிழைத்துதொத்திலங்குமலகெல்கடிலங்கசுல்வீதி.

வானவர்மகளிர்வார்நறுங்கூந்தல்வனத்துதிர்மலருமன்னவர்க
டானவணியமணியுமிளைஞர்பற்பலர்கடைத்தலாற்சரிந்ததண்முத்துங்
கானுறுமணியசண்ணமுமாசர்கதிர்முடியுதிர்கனகாசுந்
தானணியணியாயணியணிமாடத்தண்மறுகெங்கணுந்தயங்கும்.

ஈசரனடியாரிருடிகேசன்சீரிணையடியிடைவிடாதேத்துந்
தாசரும்பதுமதவிசுறைபிரமன்றாட்டுதித்தக்கவிப்பிரரும்
பேசரும்பெருமைப்பண்ணவரன்றார்பேதையர்பெரிதுமேத்தத்திரிக்க
தேசருமூவர்திருவுலாநீங்காச்செவ்விசேர்வது திகழ்வீதி. [த்

அமலமாயறிஞரகமெனவிளங்கியம்பொனுன்மணியினூற்றலங்கித்
தமையொவ்வாவடியார்தங்குழாந்தனைசந்ததக்கமலங்களமெலாஞ்சார்ந்து
சமைகொளும்விண்ணோர்கணங்களாணிரைந்துசண்ணியவாசனைகமழ்ந்து
தமரவண்பேரிமுழவதிர்வீதித்தகைசாற்றுவதரிதாமே. (ருஅ)

வேறு.

இரவியிந்திடையிடைவிரவுற்றெறிழிலுடுக்கள்
பரவுதன்மைசாரவணமருங்குபண்பாக
விரவுபற்பலவீதியின்வியன்சிறப்பதனை
யுரைசெயற்கரிதெனினுந்தேர்தருவகையுரைப்பாம். (ருகூ)

எழில்கொள் செவ்விவளநீரொடு பொற்குடமியையத்
தழுவிச்சந்தனக் கோலநன் முத்தணிதாங்கி
விழுமிதாகிய வாசனைவீசி யன்னவர்கள்
செழியகொங்கை யொத்திருந்தது பரத்தையர்தெருவே.

மலரின்மாலை வேய்ந்துயர்ந்த கத்தூரிதைவரலா
யிலகுகாரகிற்றூப மிட்டிலங்கிய வெழிலாற்
பொலியும் வேசையர்பூங்குழலா மெனப்பொற்பு
மலியவாயின கணிகையர்வாழ் மணிமறுகு. (சுக)

கணிகைமார்குழற்காடணி தொடையுங் காளையர்கள்
பணியுங்காற் பறிபூக்களும் பயோதரத்திணையி
லணியுஞ்சாந்தமுஞ் சுண்ணமுமாசையெட்டிறுதி
யணையும்வாசனை வீசுவதருதவர்வீதி. (சுஉ)

வேறு.

ஒருசுவர்க்கத்தை வேண்டியுயாறம் விரதம்பன்றைட்
புரிதருப்புருடர்காளென் பொற்புமென்மேலும்பூத்த்
திருசுவர்க்கத்தை நங்கையீதுமென்றீந்தன்றார்தை
வருபெருவளங்கடைகவாங்கி யுண்மகிழுவாரால். (சுந)

வனமலிகூந்தற்காட்டின்வளமுலைமலையின்மாட்டா
மனமகிழ்மல்லனன்னீர்வருபுலத்தல்குலாழி
யினதிறுமின்பச்செல்வமெல்லைமீந்தன்னோர்கைந்
தினையெலாந்தன்னைத்தாக்கியினிதுவாழ்ந்திருப்பான்றே.

அல்குல்பாலாழியாமந்தரகிரியம்மமேயா
யொல்குநூலிடைபாம்பேயாயோடதிபுருடர்தானாய்
மல்குமாக்கடைந்துவந்தவான்சுதையூட்டிவாறோ
நல்கமேலாக்குமன்னோரமுதகறைதருந்தன்மைத்தோ. (௬௫)

வெள்ளைவாரணமுத்தாரமேவிய கொங்கையாக
வொள்ளிதாஞ்சங்கமென்னு முயர்நிதிகழுத்ததாக
வின்ளுதாமரையென்றே துவியனிதிவதனமாகக்
கொள்ளவீந்தும்பர்கோமானிகர்குமரரைச்செய்வாரால் (௬௬)

சலசலோசனன்றனாரிற்சநமகனுலகந்தன்னி
லிலகுபோகங்களெல்லாமிவரெழின்மறுகிலெய்து
முலைவில்போகத்தினாற்றிவொன்றுமொப்பாகாதென்னி
னலமெலாமோதவேதனுமாகாதுமாதோ. (௬௭)

வேறு.

உலகினினிறைந்துயர்வுற்றெறப்பற்றபற்
பலபொருள்களு நிறைவுற்றபான்மையா
லிலகளிருநிதிநிறைத்தபொக்கிசத்
திலகியமறுகுகளிருந்ததெனபவே. (௬௮)

வளைகளும்பவளமுமணிக்குவால்களு
மிளமதியெனவொளியினுமுத்தமு
மளவறநிறைதலாலலையுலாவலாய்
வளைபடுகடலெனவயங்குமாட்சித்தே (௬௯)

ஆரநற்குப்பையுமகிலினீட்டமும்
வாரணக்கோடுங்க வரியின்கற்றையு
மேருறுசுவணமுமிலங்குதன்மையாற்
காருறுபொருப்பெனக்கவினுங்காட்சித்தே. (௭௰)

பையராச்செய் மணிப்பருக்கைகற்சிலம்
கைபசாய்பூநகத்தாரமேர்முடி
துய்பவர்வணப்பணிசுரர்பொற்கொல்லனுஞ்
செய்யவேண்டிடின் மனநினைப்பச்செய்பவே. (௭௧)

அழகமைபிம்மறுகளவிறீஞ்சுவைப்
பழவகையுபதம் பரவுபன்மலர்
விழுமியவிண்ணகராமேனிய
வெழிலிவாகனன்பொழிலிடத்துமில்லையே. (௭௨)

தேசுறில்வீதியின்செல்வநன்னிதி
யீசனன்பன்றிரவியம்வையிலினும்
வாசவன்பொருணிறைமாடமாட்டினும்
வீசமுநிகர்கசாலமேவண்டினில்லையே. (௭௩)

வெள்ளியினடுப்பிற்பொன்விழுக்கலந்திறீஇத்
தெள்ளியசிற்றுணாச்செய்யத்தீவயி
னுள்ளகிலுயர்புகையும்பர்மங்கையர்
கள்ளியற்கூந்தலிற்கமழுங்கண்ணியே. (௭௪)

பரிமளவுயிர்ப்பைக்கோங்கலாக்கட்பாய்ப்புறுத்
தரிவையர்விலைபகரணிபின்வாசனை
குருமணிவயிரவாட்கோவின்றேவிதன்
கரிகுழற்கற்பகத்தொடையிலில்லையே. (௭௫)

மங்கையர் விலைக்குவாங்கிய மணிக்கழங்
கிங்கிதவொளியரியெழில் கொள்கௌத்துவந்
தங்கியமணிவயிற்சாற்றிலில்லையேற்
றங்கவீதியின்சிறப்பெங்ஙன்சொல்வதே. (௭௬)

எழில்கொள்யாழ்குழன்முதலியற்றுகின்றவர்
முழவியம்புரிபவராணைவமுற்றுநர்
தழுவெழுக்கறமணிகழுவுந்தன்மைய
ரெழுவகையுலோகநுண்டொழிலியற்றுவோர். (௭௭)

படைக்கலம்புரிபவர்பற்பலோவியம்
வடிப்பவர்வாரணம்வையமாக்களை

நடத்துநரிடர்தனிநவிலநாமனத்
திடத்தெணைப்படிலுநாளெண்ணற்றேறுமே. (எஅ)

வெள்ளிபொன்மணிபளிங்கிவற்றினுல்விளைத்
தள்ளியமண்டபமாடஞ்சாளர
மொள்ளியகோபுரமுயர்செய்குன்றமும்
விள்ளுவமினியறிவெட்டுமெட்டுமே. (எகூ)

வேறு.

பாவையர்படிவிற்றிட்டுசித்திரங்கைப்பற்றியதுருத்தியின்வாச
மேவியவயத்தைமென்மெலவீசவெண்மதியமுதநீர்தெறிப்பப்
பூவியல்பொடிதென்கால்புகுந்துகுப்பப்புருடருமகளிருங்கலந்தி
துவியன்மாடமல்லிகைப்பந்தர்துங்கவெங்கசனுலகொக்கும். (அ0)

விண்ணதிநீர்விட்டாரமுப்புமுருகும்விரவியசேறகல்வித்துப்
பண்ணியல்பாகநூல்வழிவழாதுபாவையராடயாழ்பாட
வெண்ணில்சித்திரஞ்சாந்தாற்றிகைபெற்றங்கிருபுறத்தினுமினிதிரட்ட
வண்ணலங்குமரரமரெழின்மாடமமரர்காவலனகரனைய. (அக)

நாகர்களுலகநாரியர்சுரர்கணங்கையர்நன்முனிவரர்க
ளோகையராசுரர்சுந்தரமகளிர்பதங்குயிருகைதுவன்னம்
வாகைசேரிவுளிமறிகரிதரக்குமடங்கல்வான்றருவுருத்தீட்டி
யோகையையுதவுமாடமம்மயன்வாழுலகமொத்திருந்ததுமாதோ.

வேறு.

பளிக்குகொடியற்று மணிமாடநடுவின்பாற்
றுளங்குவயிரத்தளிசெய்தூயதவிசின்மேல்
விளங்குமடவார்தவளமென்கமலமீது
கொளுங்கலைமடந்தைநிகர்கொண்டுபொலிவாரே. (அ௩)

அம்பரமிசைச்செலணிமண்டபமதன்பாற்
செம்பருதியொத்தமணிசெய்தவிசிற்சேர்
கம்புறழ்களத்துமடவார்கணமாக்கத்
தம்புயமமர்ந்ததிருமாதைநிகர்வாரால். (அ௪)

மன்னர்மடவார்களுயர்மாடைபுரிமாடத்
தின்னிகுளையாரொடு மிருந்தினிதினுடற்

சொன்னநகராளியெழிறன்னுடனைதேவர்
கன்னியர்களோடுவிளையாடுசெயல்காட்டும். (௮௫)

வேறு.

மழையுலாவுமாடமீதுவானிலாவுகற்பகக்
குழையுலாவுபோதுகொய்துகொழுநரோடுகோதைமார்
விழையுமவ்வுடல்லெழுவிற்கைவேடனிரதியொ
டழகிதாகவாகரத்துலாவியாடலன்னதே. (௮௬)

மணமலைபந்தகவடுநீடிவானமெட்டுசந்தனத்
தழையிலைபந்தசோலைதென்றலைசையமந்தியத்திலா
மலரிசெய்குன்றின்மாதராடல்சூர்மடந்தைமார்கடா
மிலையிறென்மலைக்கணெய்தியினிதுறைடலேறுமே. (௮௭)

ஆசைகொண்டியற்றியண்டமண்டலானமேனிலத்
தோசைகொண்டமதுரகீதமொப்பயாழ்நரப்புளர்ந்
தாசைகொண்டுபாடுபாடல்யாழ்வலோர்களரிவைமார்
தேசுகொண்டவிசைகளேழுசிதைவில்பாடலன்னதே. (௮௮)

தாரமாடமீதுமேவுதையலார்கடாளிடைச்
சாருநேரில்செய்யபஞ்சுதைவதானவிடமெலாம்
வாரமேவுவானதிக்கண்மருவுசெய்யதாமரைச்
சீரைமேவிநோக்கிறோர்திகைக்குமாறுசெய்யுமே. (௮௯)

வண்ணமேவுசுண்ணநீவுமாடமீதுமகிழ்வொடு
மெண்ணிலாதமாதர்பண்ணையினிதுசெய்துலாவுதல்
விண்ணலாவுகங்கையாற்றின்மேன்மைமேவுமிருகரைக்
கண்ணுலாவுமெண்ணிலாவிகங்ககாட்சிகாட்டுமே. (௯௰)

இரதினத்தினங்குயிற்றியெழில்கொண்மாளிகையினிடத்
திருத்தகத்தைபொழியின்மாதர்தம்விலோதமெய்தவீ
விரைத்தவுத்தமத்ததூபமணிநிறத்தினொடுவிராவுங்க
கருத்தமேகமின்னிரைத்துவந்தபான்மைகாட்டுமே (௯௧)

மகிழ்விறேடுமகிழ்நரோடுமகளிராடமாடமீத்
திகழ்வதானவளையிறானவளைமுறிந்துசிந்தியங்

கெழ்விலாதிலங்கலிந்துணிணைவகிர்ந்தவெண்ணிறண்
டுகள்பராவினின்றதென்றுந்தோன்றுவானமொத்ததே. (௯௨)

நண்பரோடுநங்கைமார்கணன்கிருடுகாலையற்
றெண்கொளாதவிரணியத்தொணிமைழசித்தார்ந்திலங்கிடங்
கண்கொளாதநாவலங்கனிக்களாற்றினிருகரைக்
கண்விடாதுகனகராசிகளினுபூமிகண்ணுமே. (௯௩)

வேறு.

இந்துகாந்தக்கல்லாற்செய்யெழுநிலைமாடத்தின்கட்
சந்திரன்சாரக்காலுந்தண்ணெனீர்தவழுந்தோற்ற
மந்தரமேருவெள்ளியசலமீதருவியாறு
வந்துவீழ்தன்மைத்தாகவயங்கியங்கிலங்குமாதோ. (௯௪)

சோதிசேர்மாடத்துப்பார்ச்சுரநதித்துய்தாந்தோயத்
தாதரத்தரிவைமாரோடாடவராடுந்தோற்றம்
போதகம்பிடிகளோடுபொருப்புறுசுனைக்கட்புக்குச்
சீதநீர்குடைந்துலாவித்திரிதருஞ்செவ்வித்தன்றே. (௯௫)

அண்டர்கற்பகமீதேறுமழகியகொடியுமுல்லைத்
தண்டளிர்க்கொடியுநீலந்தாமரைகுமிழ்விலிந்து
கொண்டுவேள்கொடியாமாதர்கொடியுமேழ்குதிரைத்தேரிற்
கொண்டவாங்கொடியுமாடக்குலமெலாங்குலாவுமன்றே.

வேறு.

மடந்தையர்கூந்தன்மாலையின்றுகளுமணிக்கலனொடுகலனுரசி
யிடுந்தொறுமுதிருமிரணியத்துகளுமிரதிநாயகன்றனைத்துகளுந்
தடங்கொடிவாளைத்தருந்தொறுந்தாக்கத்தாலுதிர்கருமலர்த்துகளு
மடைந்தரமியநற்றலந்தொறுங்குப்பையாக்கிடுமடிக்கடியம்மா.

ஆரங்கிளரிடைஞ்செயரிவையாடியினஞ்சிலைப்பொலியுமேகலையின்
வருங்கலகலப்புமளிவிளையார்ப்பும்வார்குழற்காட்டுவண்டிசையு
மருங்குழல்யாழ்மிர்தங்கதுங்கப்பேரவமுஞ்சரிகமபதநி
யொருங்கெழுந்தழனியிலந்தொறுமடைந்தோருளங்குதுகலங்கொ
ளவுஞற்றும். (௯௮)

விண்டொடுசிகரவரமியத்திடத்தில்வெள்ளியிற்பளிங்கினிற்படிசெய்
தொண்டிரைக்கஙகனகயுயரயநிறைவித்தொளிருமைந்தருமலருறத் [தூஉய்
வண்டணிமகளிர்மைந்தருமாடிவருமிரவிடைமடமாதர்
தண்டாளத்தாரத்தனதடத்திற்றுன்படிந்துவகைசார்தருவார். (௯௯)

வானுழுசிகரமாடமேவுதிகையின்வைகிவண்மணியணியாடி
தாமெனதிர்திருவிப்பற்பலாபரணந்தனையணிதையலர்தமைத்தாழ்ந்
தீனமிலமரர்மாதர்கற்பகக்காவீந்தபற்பலகலனெல்லாந்
தானகல்வித்தன்றூர்தராபரணந்தனைத்தரித்தழகமைதருவார். (௱)

அண்டமட்டெட்டுமரமியத்தமருமரிவையராங்கைபங்கிளிக்கு
விண்டலர்கற்பத்தருக்கனியருத்திவெண்பதிமண்டலவிழுநீ
ருண்டிடவுதவியுழைக்குருகினங்களுக்குப்பரினிரைத்தினிதுலவும்
வெண்டிரைக்கங்கைநீர்படிவித்தும்விடாயறவூட்டியும்வளர்ப்பார்.

வேறு.

ஏடவிழ்ந்ததார்மைந்தருமெழிலரிவையருங்
கூடுவண்கொடிமாடமுங்குலவுபல்சிறப்பும்
பீடுஞ்செப்பிடிற்கோடிநாள்பிறகிடும்பேசக்
கூடிலப்பதிமேலகமுழுமுடிபுகூடாவே. (௱௨)

அலகிலாதபல்வளங்களுநிறைதரலாகி
யிலகுமேர்நகரின்பலசிறப்பினையினிமேற்
சொலவியாந்துணிவுற்றதுள்ளத்துளுந்தோறும்
புலவர்பானகையெய்ற்குறுபாயினும்புகல்வாம். (௱௩)

படிகத்தாகியவடிப்பின்பாற்பசும்பொனப்பானை
தொடணைத்தாரழன்மாணிக்கமணிகொடுதுலக்கி
வடிவிற்றீர்தராளத்துச்சோறுக்குபுமகிழ்வு
தடையிற்றீர்சிறுமியர்குழாந்தங்குவதொருபால். (௱௪)

மரகதச்சிறைப்பவளவாய்க்கிளிக்கெழின்மடவா
ரிரதநற்கரும்பியாழ்குழறேனமுதெனவயு
மருவருப்புறுமாமரியனுதினமன்பாற்
றெரிவுறாத்துபுசிந்தையின்மகிழுவதொருபால். (௱௫)

வயிரவாட்பிடிமன்னவன்கற்பகவனத்தின்
மயிலுலாவுவபோன்மலைமுலைவனத்தாட
வயிலுலாவுகையாடவரகமசைந்தாட
வுபருமூசலாடொண்டொடியார்குழாமோர்பால். (௱௬)

வரைகடந்தபல்பொருள்கொடுவருமமிழ்தாற்றின்
றிரைகடந்தமுத்தம்மனைகழங்குதிப்பியப்பந்
திருகுடங்கொலென்றிடுங்கிலசைந்திறுமாப்பத்
தரைபடும்படியாடுதையலர்திரளொருபால். (௱௭)

பொன்னிழைத்துவச்சிரப்புனைசக்கரம்பூட்டி
மன்னுமாரவச்சாத்துந்தாரத்தொடர்மாட்டி
மின்னுபச்சைசெம்மணிபதித்தொளிவிளங்கிரதம்
பன்னுபாலரீர்த்தேகிடப்படுசிறப்பொருபால். (௱௮)

செய்யசூட்டுமுட்டாட்பொறிமயிர்திகழ்வளைவாய்
வையமேற்பகையின்றியொன்றொடொன்றுமாற்
றுய்யவேண்டுமென்றுள்கலாச்சேவற்போருடற்றச்
செய்யும்வேணிகர்செல்வர்கள்செறிதிரளொருபால். (௱௯)

பின்னர்ப்பேர்ந்துமுற்பாய்ந்திருகட்கனற்பிறக்கத்
துன்னிப்போர்டியிடித்தெனத்துணைக்குறத்தாக்கும்
வன்னத்தார்த்தகர்ப்போர்புரிவித்துளமகிழ்வு
மன்னப்பார்த்திடுமைந்தர்கண்மாதிரளொருபால். (௱௰)

ஆடகங்கொடுசெய்தவம்பலகையிலழகார்
வீடகந்தொறும்விழுமணிவண்ணிரைவிரித்து
நீடகம்படுபுள்ளிகொள்கவறுநேருருட்டி
யாடிடும்பலவிடலையாரணியணியொருபால். (௱௰௧)

தடப்படிந்தணிசம்படம்புதியனதாங்கி
யிடம்பொலிந்தபூஞ்சோலையிலாடியேர்மாத
ருடன்றடம்புயமதனனுமிரதியுமொத்தங்
கடர்ந்திடுஞ்சிவிகையில்வருபவரழகொருபால். (௱௰௨)

வெவ்விதாஞ்சிலைமின்னியற்கூரியவேல்வாட்
கொவ்வைவாய்ச்சியர்கோதிகர்கூறியவேக்கள்

செவ்விதாகியதோமருஞ்சூலமொண்டிகிரி
யிவ்வெலாமியற்றுந்தொழிலினர்குழுவொருபால் (௱௰௩)

எட்டுப்பத்திருவிரற்கடையியையுயர்வெய்தி
நெட்டுவத்திரஞ்சிறந்நிலக்கணமெலாநிரப்பப்
பட்டுப்பஞ்சமகநிவழுவாப்பரியேறி
விட்டுவந்திடுவீரரால்விளையெழிலொருபால். (௱௰௪)

பத்திலொன்றுபோகியமுழநீண்டுபார்படிய
வொத்தகையொடுவாலுறீஇயெழுமுழவுயரம்
வைத்துக்கானசுமதியெனமதியொளிவாய்ந்த
மத்தமாவுகைமன்னவர்மைந்தர்களொருபால். (௱௰௫)

திங்கண்முப்மழைபொழிதரத்தீமைதேய்ந்தோட
வங்கண்மாநிலமுய்தரவறங்குதுகலிப்பப்
பொங்குமுத்தழற்பூமனுவாகுதிபொருத்தி
யெங்குமந்தணரியற்றுவேள்வியினெழிலொருபால். (௱௰௬)

அரனருச்சனையைந்தெழுத்துச்சரியடியார்
கரியவற்குறுமெட்டெழுத்தோதுகண்ணியர்கள்
பிரமன்றொடொழுதேகதிபெரிதுசெய்பெரியோர்
திரளெலாந்தினந்தினந்திரிதருசிறப்போர்பால். (௱௰௭)

தேவர்தேயமுமொப்பறச்சிறந்தபல்வளங்கண்
மேவுமாநகர்மேன்மைகண்முழுவதும்விரித்துப்
பாவில்யாம்பகரப்புகிற்பற்பலவருட
மோவினுஞ்சரிவரவுரைத்திடுவதொல்லாதே. (௱௰௮)

வேறு.

இப்பதிமைந்தர்மாதரினிதணிந்தெரியப்பட்ட
வப்பொனும்பரணநாப்பணணிமணியாதிசேடன்
செப்பரும்படத்தின்மாட்டுமிலேபொளிற்றிருவின்மிக்க
விப்பெரும்பதிக்கொப்பாகவெப்பதியிசைக்கலாமே. (௱௰௯)

மணிதருசுரபிவெள்ளைவாரணமாலுமால்ர
யணியணியமுதமீபாலாழிமாதவத்தாற்பெற்ற
குணமணியானகோதைகொழுநஞ்பிச்சைசையிவ்வூர்க்
கணிகணிக்கைக்கொள்வாளேற்கணியய்யார்கழறவல்லார்.

எண்ணில்புண்ணியமொன்றாய்ச்சேர்ந்தெழு ஓருருவெடுத்தோர்
பெண்ணாய்க்
கண்ணிக்கண்ணியங்களெய்தாங்கலையெலாம்பயந்தபாவை
பண்ணில்விண்ணினினேரில்லிம்மாநகர்மருணற்பிச்சை
நண்ணிநண்ணூற்றாளென்னினிமினிநவில்வதென்னே. (௱உ.௧)

மமையெழிலெய்தக்காப்பாளறமெலாமென்றுஞ்செய்வாள்
சமைசராசரங்களின்றாடாபதர்விண்ணோர்போற்றுங்
கமையுளாள்கணவற்பிச்சைக்காதல்கொண்டிவ்வூர்க்கண்ணூற்
றமையுமேயுற்றாளென்னிலென்னியாமோதுவோமே. (௱உஉ)

ஈசனேசொளியினெல்லாவிமையவரொளியுமெஞ்சி
மூசியாங்கடங்கல்போலிம்முதுநகர்முளைத்தசோதித்
தேசிற்றேசிந்துதீயின்செழுஞ்சுடர்பழுங்குமென்னி
லாசிற்றீர்நகரின்மேன்மையாவர்தாமறையவல்லாரே. (௱உ௩)

வயிரவாட்கையான்சேடன்வாய்சஹயிரம்வாய்ந்தானுஞ்
செயிருதீர்சிறப்பைநோக்கசெப்பிடத்துணிவுசேரி
லயர்வுறீஇயனேககற்பமகலுமேலறிவிலாதே
னுயர்வெலாமோதலாவதெங்ஙனமோதின்மாதோ. (௱உ௪)

இவ்வகைச்சிறப்பெலாம்வாய்ந்திலங்குமிந்நகரத்தின்பாற்
செவ்வியமூன்றுமூர்த்திக்கிரிசேர்சிகரக்கோவி
லெவ்வியமேம்பாடெல்லாமொருசிறிதுணர்ந்தமட்டு
மிவ்வயினிசைப்பானசையினிலினியெடுத்துக்கொண்டாம்,

வேறு.

ஏழெனப்படும்பாதலக்கீழடியெய்தி
வாழிவெண்மதிவானதிமுடியினில்வனைவுற்
றாழிபேரினுமுலைவுறாதுன்னதத்துடனொண்
பாழிபற்றியமதில்பரமேசனெப்பாமே. (௱உ௬)

தேவர்யாவரும்போற்றுமும்மூர்த்திகள்சேர்ந்தங்
காவலாயமர்கோயிலினழகமைமதிலான்
மேவுமாங்கிழலாழிமால்வரையெனவிளம்பப்
பூவில்வாழ்புலவரும்புகழரும்பொலிந்திலங்கும் (௱உ௭)

செயிரிலிந்திரநீலத்திற்செய்தூலிசெம்மணிகள்
ப்பயிலப்பண்ணுறுநால்வாயிலின்பாற்படுசிகர
முயர்தலும்பரினும்பரைபொருங்குகாப்பாற்றும்
வயிரவாட்படைமன்னவனிர்பதுமானும் (௱௨௮)

பூமியிற்பொலிநகரெலாமற்றுளபொருப்பு
வாமமாந்தவிமானகரேமகமேரு
ஏமலிந்திடுசிகரநற்காமணித்தீபங்
கோமலிந்தமும்மூர்த்திகளுறைதிருக்கோயில். (௱௨௯)

அவனியாடகத்தணிமுடியல்லவாநகர
மெவையுஞ்சுற்றிலுமிழைபணியிதனடுவெய்து
மூவமமின்மணிபொண்டளியதினுமொளியா
கிவர்மும்மூர்த்திகணீங்கலாதுறைநெடுங்கோயில். (௱௩௰)

வேறு.

முன்னைமுதன்னவன்மூவுலகீன்றவெம்மொய்
தன்னாருளிற்குளிர்ந்தென்றுந்தலாதுனற்று
மன்னுளறச்சாலையொத்தின்பமளித்தென்னுளந்
துன்னுவணத்தின்வயினென்றுந்துலங்கமன்னே. (௱௩௧)

இமையோர்திரளெய்துபுநாடொறுமெல்லைநோக்கிக்
கமையார்மறையாற்பரவித்தொழுங்காட்சியாலே
தமையேநிகராகியவெள்ளிச்சயிலமொத்தங்
கமைவாயதுமாலரன்வேதனமருங்கோயில். (௱௩௨)

வேறு.

மாதர்களாடற்பாடலினொலியுமங்கலகீதமாவார்ப்பு
மோதுறுபேரிமுழவதிர்முழக்குமுதுமறையாகமமுதலா
யோதலாலெய்துமோசையுமூவருயர்துதியோதையுமுறுவர்
காதலாற்கரைபல்லாண்டெழுகலிப்புங்கடற்படுங்கலிப்படக்கிடுமே.

வலங்கொளுமைந்துபுலன்களைக்களைந்தமலரயன்மாலரனடியார்
துலங்கொருகோடிதுதைந்துதோத்திரிக்கத்தூயவாயிலின்கடைகா
[ப்போ
ரிலங்குவேத்திரக்கைநீட்டிச்சற்றிருமினேகுமினெனநெருக்கத்தா
லலங்கலாதியவாபரணமற்றுதிர்ந்தாங்கடிபெயர்ப்பரியதாலயமே.

வாரணவதநன்மூவிருமுகவன்மாகர்மற்றவர்மகராசன்
சிருறுசித்தர்வித்தியாதரர்முத்தீவளர்த்திடுசெழுமுனிவர்
பாருறுமனுடர்பார்த்திவர்பத்தர்பாவையர்பாவையரெழுவ
ரேருறுகடல்களெழுநதிமறைகளெல்லவுநல்லுருவெய்தி. (௱௩௫)

நிரந்தரமமர்ந்துவணங்கிவாழ்த்தெடுப்பநீடுலகெல்லவுமுய்ய
வரந்தருவாராய்மூவருமகிழ்வின்வைகுமாலயவருணனையச்
சிரந்தொறும்படங்கொள்சேடனோர்கற்பஞ்செப்பினுஞ்சேடமே [பட்டு
விரிந்திடும்விசேடமென்னில்யாமெனங்கன்விசேடமுற்றறவிளம்
புவமே. (௱௩௬)

ஆக திருவிருத்தம் - ௱௨௬.

நகரப்படலம் முற்றிற்று.

## நைமிசாரணியப் படலம்.

மணஞ்செய்பூமாகதக்கொடிதழுவிலொணுற்றை
யிணங்கவேமுடியெய்தலாவிமயமீன்றருளு
மணங்குபாதியனாகியவரபிரானாக
வணங்குலாவிடப்பொலிந்ததுநைமிசவண்கா. (௧)

எட்டுச்சித்திகளுடொறுமேவினவியற்றப்
பட்டுப்பத்தியாம்வேலிசூழ்ந்தருட்புனற்பாய்ந்துண்
ணட்டமுத்தியாகியபயிர்நன்குமுற்றிக்கை
யெட்டச்சித்தியையீவதுநைமிசமெனுங்கா. (௨)

பருவமின்னதின்னதுபலம்படுமென்னக்
கருதலின்றியெப்பருவத்துங்கண்மலர்கனிக
டருவதிற்றடைதானொருநாளுஞ்சாராது
பெருகுகின்றதுநைமிசமெனும்பெயர்பெறுகா. (௩)

தருமம்யாவையும்வளர்த்தலாற்றமையடைந்தவர்கண்
மருவுமாபவமாய்த்தலாவிமயபாமலையில்
வருமென்றுய்ந்திகராயதைப்புலைப்பகைமடியப்
புரியுமாதவர்வைகியநைமிசப்பொங்கர். (௪)

மந்திரத்தினன்மறையினன்மகத்தினன்மலரோன்
சந்ததங்கனகர்தையலார்திருவளர்தன்னுற்
சொந்தவிண்டுவின்றென்னகர்பவந்தொலைத்திடலா
லந்திவண்ணனாரணையதுநைமிசாரணியம். (௫)

வேதவோசையுயாகமவோசையும்விமல
போதமேவியபுராணநூலோசையும்புழைக்கை
யாழிமாதரக்கரியரிணங்கரினுலா
மோதையேழனுமுததியினொலியொருங்கோட்டும். (௬)

ஆறெனுப்பகையறுத்தவர்முப்பொருளறிந்தோர்
தேறுமெண்வகையோகியர்செழுமனுச்செபிப்போ
ராறணிந்தவனருச்சனையாற்றுநருநா
லாறுநல்வினைபுரிபவரலாரவணிலையால். (௭)

வாரிவண்வளமாறினுமழைவறந்திடினு
நேரின்முப்பருவத்தினும்வளமெலாநீட்டிச்
சீரின்வைத்திடுசெய்கையாற்றேவர்நாட்டலதிப்
பாரின்கட்பரவிருநிதிநைமிசப்பைங்கா. (௮)

மேருவில்லிதன்மெல்லடிநிழலடிவிலகாச்
சீருஞ்செய்கையுஞ்சேர்தவர்சிறுவர்கடிகழ்நா
லோருங்கல்வியஞ்சாலையினருகுறுகுயிலுஞ்
சாரும்பூவையும்வேதநூலறிதருந்தகைத்தே. (௯)

அம்புயங்குவளைகளடர்ந்தயநிறைகயமுந்
தும்பிபம்பெழிற்றடவையுஞ்சுடர்தொடர்பிறைகூ
டெப்பான்றிருப்பூசையுமெச்சமுமினிதன்
றம்புரிந்திடுமிடமுமங்கெங்குமேயொளிரும். (௰)

வெய்யவாட்புலிமுலையுண்டுமறிக்குருள்விலகா
தையமேவுழமரியுநட்பாய்விளையாடும்
பையபாம்புமேகயச்சிறைநீழலிற்படுத்துச்
செய்யுநித்திரையெனில்வனச்சிறப்பென்செப்புவதே. (௰௧)

இந்தநைமிசத்திருபத்தாறுயிரவிலக்கந்
தந்தசெய்தவர்சௌநகாதியர்தநயர்

சந்தமங்கையர்தங்குழுவின்கணக்கினைத்தென்
றெந்தனுக்குரைத்திடவிலுந்தெரிதாற்கின்றே. (௫௨)

சூதனவ்வணந்தன்னலுந்தண்ணெனத்துறவ
ராதரந்தழைத்தலெழுந்தெதிர்விரைவடைந்து
பாதபங்கயமுமுறைபணிந்துபசார
மாதியர்க்கியபாத்தியாசமனங்களாற்றி. (௫௩)

ஆசனங்கொடுத்ததிலெழுந்தருளவைத்தன்புற்
றேசில்பற்பலமுகமனன்கினிதெடுத்தியம்பி
பேசுகிற்பரொப்பருவியாசப்பெருமான்பாற்
றேசுமுற்றியநான்மறையாகமந்தேர்ந்தோய். (௫௪)

வேறு.

ஆகையாலுலகிலலசகறலைத்திலதிகமாகியதலமதனை
யோகையாயெமக்கிங்குரைத்தருளெனலுமுயர்முனிவர்முக[நோக்கி
யாகவாங்கரன்மாலயன்றிரிமூர்த்திபகமகிழ்ந்தழகுறவமரு
மேகமேவியவெற்பேயதன்மகிமைவிளம்புவங்கேண்மெனவிரி[ப்பான். (௫௫)

ஆக படலம் ௨-க்கு திருவிருத்தம் ௱௭௨.
நைமிசாரணியப்படல முற்றிற்று.

## திரிமூர்த்திமலைச்சிறப்புப்படலம்.

சிவன்றிருமால்வேதாவிவருபயதிருவடிமுடிமிசைச்சேர்த்தி
யுவந்துபர்வியாதமுனிவனைப்போற்றியுயர்தவச்சௌனகாதியரே
பவந்தெறுந்திரிமூர்த்திப்பருப்பதத்தினபாலமைசிறப்பெலாம்[பகர்வ
னிவண்டருமார்த்தகாமமோக்கங்களீயுமாற்கேட்டிரென்றிசை[ப்பான்

ஆக்கல்காக்குதல்போக்குதற்றொழிலாற்றுமவர்கண்மூவருமக[த்தாசை
மீக்கொளவொருவெற்றினிலுறைவாரேல்வெள்ளிவெற்பேபயோ[ததியோ

மாக்கள்வண்டுறைசெந்தாமரைமலரோமற்றதாமுற்றுமின்வரைபோ
நாக்கொடுநானெங்கனநவிலுவதுநைமிசாரணியநற்றலமே. (௨)

ஆரண்பிரபாவமொருதசந்திருபாலமுமொருநான்குபயன்மகிமை
யிரண்டிருடிகளுடையகனைனும்வியாசனியம்பியுமிழுதியெய்தாமேதன்
முரண்டாரவொருபுராணத்திம்மூவர்மேன்மையுமொழிகாலெங்ஙன்
றிரண்டபல்விபவச்செழுந்தவத்தவரேசிறிதறிதருவைகைதெரிப்பாம்.

எத்தலங்களினுமீசனேயன்றேலிருடிகேசனேயினிதிருப்ப
வத்தலச்சிறப்புமவர்தருவரமுமடைந்துபூசிப்பவரடைவு
மித்துணைத்தெனச்செப்பிடப்படாதிவரோடிரணியகருப்பனு
[மிருப்புற்
றுத்தமவரங்களுதவல்காப்பாற்றலொருங்கெடுத்துரைப்பரிதரிதே.

இதுவமணேசமெனவுந்தென்கயிலையென்னவுமிருபெயரியையு
மிதுவலாலுபரத்திரிமுனிபனேயோமருந்தவாசிரமமென்றிசைப்பா
ருததிருமூலகோருயர்திரிமூர்த்தியோங்கலென்றேதுவரிதன்பா
லதிகமாஞ்சிறப்புமருடையுமறியேனறிந்தவாசிறிதறைதருவாம்.

வேறு.

ஏறும்வேழமுமாவுமுலாவுமே
லேறும்வேழமுமாவுமெங்கெங்கும்வெவ்
வாறுமாலமுமாரமும்வெங்கையு
மாறுமாலமுமார்சுனைத்தவ்வரை. (௩)

ஆடுங்கோடுமணியணியானைபோ
ராடுங்கோடுமணியணியத்திரி
யாடுங்கோடுமமராரிவைப
ராடுங்கோடுமுளதவ்வசலமே.

ஆரவாரமரித்தருவித்திர
ளாரவாரத்திழியுமனேகநா
ளாரவாரத்தவணகலாமல்வேர்
வாரவாரவரம்பையராடுவார்.

மாசுணம்பரவுற்றவம்மால்வரை
மாசுணம்பரவுற்றமதகயக்

தேசுகொண்டவெள்ளாம்பலிலனத்தெரிந்
தேசுகொண்டிரிவாணிமையோரிறை. (௯)

வேறு.

அண்டர்கோனகராதிபடசமழியநாட்
கண்டுமேனகுங்காட்சியிற்றானமுங்காசு
மெண்டிசாமுகமிலங்குமும்மூர்த்திகளிருப்புக்
கொண்டுவாழ்தருமாற்றிரிமூர்த்திகோத்திரமே. (௰)

ஓதுமேழுலகத்துளவோங்கல்களுகாந்தத்
தாதரத்தொடுசரணடைதருமாசாகி
மேதகப்படுமேருவும்வெள்ளியங்கிரியும்
போதவேதுதிபுரிசிறப்புறுவதிப்பொருப்பு. (௰௧)

வேறு.

உடலிடரோடவோட்டிப்புட்கொளிற்காணிற்றீண்டிற்
றிடபவந்தீர்த்துச்செண்மசாபலியத்தைச்சேர்த்து
மிடைதருமேன்மைசெல்வமாயுளைமேவச்செய்யும்
றடமடுவிடங்களெங்குந்தங்குவதந்தத்தானு. (௰௨)

வேறு.

எண்ணுவோருளத்துன்பமிரிப்பது
விண்ணினோருமிருசிகரத்தது
புண்ணியம்வலம்போகிற்புரிவது
பண்ணைவண்டுபயில்பொழிலுள்ளது (௰௩)

காமனுக்குயர்காமரளிப்பது
பூமகட்கவில்வளம்பூப்பது
பாமகட்குக்கலைகள்பயப்பது
தீமைமுற்றத்தெரியிற்சிதைப்பது. (௰௪)

ஆலமுண்டவனென்றுமமர்வது
ஞாலமுண்டவனுளுமமர்வது
கோலமுண்டகத்தோன்குடிகொண்டது
வேலன்கண்டகலாதுவிழைவது. (௰௫)

பத்தர்ஞானியர்பற்பலயோகியர்
நித்தமேவிநிறைபுகழ்நேர்வது

சித்தர்கின்னரர்சேர்ந்துசிறப்பது
சத்தமாதர்முனிவர்தழைப்பது. (௧௬)

அனுவிஞ்ஞானற்றொழிலவணுற்றிடி
லெணவொணாமலைபோற்பயனீவது
பணவொணாதபவம்பலசெய்யினு
மணுவினைபொடியாக்குமடலது. (௧௭)

வேறு.

அரம்பையங்கனிகண்மந்தியயின்றதனருகிலும்பர்
நிரம்பிலாங்கலிமேற்றூவதீன்குலைசிதறிப்பூமி
வரம்புறவீழக்கூழைக்குரங்குகைநவாங்கிநீங்கித்
தரம்படுமுழைக்கண்ணேடிச்சார்தருந்தன்மைத்தோர்பால். (௧௮)

கொன்றைதேற்றாநற்காயாகூவிளங்கன்னிகாரந்
துன்றுபாதிரிமந்தாரைதுலங்குறுமருதுவன்னி
மன்றலாரசோகுபுன்னைமகிழகிலாரமாச்சா
நின்றுசூரியனார்செல்லாநீள்வனத்திரள்களோர்பால். (௧௯)

வேறு.

மருமலிந்தடர்மாலதிபொலவன்பாதிரிமிக்
குருமலிந்தலரலர்களின்கண்மிகவுண்ணை
வருமலிந்தபல்வண்டினச்சந்ததமாறுபா
தெருமலிந்தெணச்சிறுநத்திகழ்பொழிலோர்பால். (௨௰)

பண்ணிற்கண்ணுறுஞ்சுவாளவோசினிவாறை
நண்ணுநற்கணிநாவறைத்தையிற்பமுப்பா
பெண்ணைவின்கனிமுந்திரிகைப்பலமிசைமேயா
ருண்ணவெட்டுறுமுயர்தருச்சோலைகளோர்பால். (௨௧)

ஞாலமுற்றவுநச்சுநல்லாசனைநடாத்து
மேலம்பச்சிலையிலைவங்கங்குங்குமமாந்நசில்
கோலமிக்கதக்கோலமுமிடங்கொடாறுங்குழிச்
சாலவெங்கணுந்தங்கியவாழ்வனமோர்பால். (௨௨)

பங்கயங்கருங்குவளைசெங்குவளைகள்படரு
மங்கயத்தினீரட்டையோடுண்டயானைகடாம்

தேசுகொண்டவெள்ளாம்பலெனத்தெரிந்
தேசுகொண்டிரிவானிமையோரிறை. (௯)

வேறு.

அண்டர்கோனகராதிபசமழியநாட்
கண்டுமேனருங்காட்சியிற்றரனமுங்காசு
மெண்டிசாமுகமிலங்கமும்மூர்த்திகளிருப்புக்
கொண்டுவாழ்தருமாற்றிரிமூர்த்திகோத்திரியே. (௰)

ஓதுமேழுலகத்துளவோங்கல்களுகாந்தத்
தாதரத்தொடுசரணடைதருமாசாகி
மேதகப்படுமேருவும்வெள்ளியங்கிரியும்
போதவேதுதிபுரிசிறப்புறுமிதிப்பொருப்பு. (௰௧)

வேறு.

உடலிடரோடவோட்டிப்புட்கொளிற்காணிற்றீண்டிற்
றிடபவந்தீர்த்துச்சென்மசாபலியத்தைச்சேர்த்து
மிடைதருமேன்மைசெல்வமாயுளைமேவச்செய்யுந்
தடமடுவிடங்களெங்குந்தங்குவதந்தத்தானு. (௰௨)

வேறு.

எண்ணுவோருளத்துன்பமிரிப்பது
விண்ணினேறுமிருசிகரத்தது
புண்ணியம்வலம்போகிற்புரிவது
பண்ணைவண்டுபயில்பொழிலுள்ளது (௰௩)

காமனுக்குயர்காமரளிப்பது
பூமகட்கனவில்வளம்பூப்பது
பாமகட்குக்கலைகள்பயப்பது
தீமைமுற்றத்தெரியிற்சிதைப்பது. (௰௪)

ஆலமுண்டவனென்றுமமர்வது
ஞாலமுண்டவனுமமர்வது
கோலமுண்டகத்தோன்குடிகொண்டது
வேலன்கண்டகலாதுவிழைவது. (௰௫)

பத்தர்ஞானியர்பற்பலயோகியர்
நித்தமேவிநிறைபுகழ்நேர்வது

சித்தர்கின்னரர்சேர்ந்துசிறப்பது
சத்தமாதர்முனிவர்தழைப்பது. (௧௬)

அறுவிஞானநற்றொழிலவனொற்றிடி
லெணவொணாமலைபோற்பயனீவது
பணவொணாதபவம்பலசெய்யினு
மணுகின்மைபொடியாக்குமடலது. (௧௭)

வேறு.

அரம்பைபங்கணிகண்மந்தியயின்றகனருகிலும்பர்
நிரம்பிலாங்கலிமேற்றுவநீள்குலைசிதறிப்பூமி
வரம்பறவீழக்கூழைக்குரக்குலைநவாங்கிநீக்கித்
தரம்படுமுழைக்கணேடிச்சார்தருதன்மைத்தோர்பால். (௧௮)

கொன்றைதேற்றாநற்காயாகூவிளைகன்னிகாரந்
துன்றுபாதிரிமந்தாரைதுலங்குருமருதுவன்னி
மன்றலாரசோகுபுன்னைமகிழ்கிலாரமாச்சா
நின்றுகுரீபமெனச்செல்லாநீள்வனநிரல்களோர்பால். (௧௯)

வேறு.

மருமலிந்தடர்மாலதிவெளவனமாதவிமிக்
குருமலிந்தலரலர்களின்கண்மிகவுண்ணா
வருமலிந்தபல்வண்டினச்சந்ததமாருபா
தெருமலிந்தெணச்சிருறத்திகழ்பொழிலோர்பால். (௨௰)

பண்ணிற்கண்ணுறுவானவேராசினிவாழை
நண்ணுநற்கனிநாவலாரத்தையிற்பழுப்பா
பெண்ணிலின்கனிமுந்திரிகைப்பலமிளைமயோ
டுண்ணவெட்டுறமுயர்தருச்சோலைகளோர்பால். (௨௧)

ஞாலமுற்றவுநச்சுநல்வாசனைநடாத்து
மேலம்பச்சிலையிலைவாசங்குங்குமமாதிசில்
கோலமிக்கதக்கோலமுமிடந்தொறுங்குழீச்
சாலவெங்கணுந்தங்கியவாய்வனமோர்பால். (௨௨)

பங்கயங்கருங்குவளைசெங்குவளைகள்மடரு
மங்கயத்தினீரட்டையோடெண்டையானைகடாம்

பொங்குரோமவெண்டாருவினிலையுண்டுபுன்கண்
டங்குறுவுடலாய்த்திரிதருதகைத்தோர்பால். (௨௩)

குடிலமெட்டியேமுட்டியுங்குறைதலைகொண்டு
மடியிலுற்றவரையமுற்றென்கொலிவ்வாகம
நெடிது முற்றுமேயாதாகியுநீழல்சாயாம
லுடையவற்புதமுதவுசாயாமரமோர்பால். (௨௪)

விடையமீதிவர்ந்தோர்விழிகளிலொருவிழவு
நெடியபாலையுமிரதமுமபரிகளினிறைவு
மடைபதாதியுந்தோற்றமாயிறங்கிடலினைத்து
முடனிலாதுபோமுயர்கருத்தொகையுளதோர்பால். (௨௫)

தன்னிடத்தமைகாய்கனிதழைபறித்திடுவா
னுன்னியுற்றவர்தமைவிளார்கொண்டுடன்றெற்றிப்
பன்னகத்தினிற்சிறுபபதைத்திடக்கொல்லு
மின்னநற்றருநிரனிரவிலங்குவதோர்பால். (௨௬)

சுணங்கின்குட்டிகடுன்னினவெனப்பயந்துன்னி
யணங்குபட்டவெம்புலிப்பறழினைத்துமாங்கோடச்
சுணங்கின்குட்டியிற்காய்த்துளகண்டுளந்துளங்குஞ்
சுணங்கினற்றருவின்றிரடுலங்குவதோர்பால். (௨௭)

வனங்கொள்வேடுவர்மக்கண்மானுடமாமனுட
ரினங்கொள்காய்பலவெய்தவன்னதனருகெய்தி
பெறுங்கள்பிள்ளையையமொடுமேவிளையாட
மனங்கொண்டுய்த்திடென்றுரைதருவாசகமோர்பால். (௨௮)

தனதுவம்மிசத்தெய்தியதையலரெனத்தா
மனதினுன்னியவ்வரைதிரிதருமகண்மாரவை
யினிதுவப்பின்கலெங்குபோகின்றனிரிருமென்
றினதுசொற்றிடுவேடுவரேழையரோர்பால். (௨௯)

வேகமாகமேவிடுபுருடாமிருகத்தை
யோகையாயுயரிருடிகளாமெனவுன்னி
யேகிபாங்கவரிருபதந்தொழுதினிதேத்த
வாகிமாயயத்தகலுவதாமணியோர்பால். (௩௰)

கங்குல்வந்தவக்கானலொளிபலகடிப்பப்
பொங்குவல்லிருட்போக்குபொருளொளாப்பொலிய
வெங்குஞ்சோதியைப்பர்தருவளையிடத்தியற்றித்
தங்குசோதிநாமத்தருச்சாருவதோர்பால். (௯௧)

மும்மதம்பொழிவதுமழைபொழிவதாய்முன்னி
யம்மலைக்கணாரம்பலைபங்குல்வந்தண்பத்
தம்முரட்கைகரிற்பிடியெனப்பிடித்திடச்சார
விம்மலுற்றகன்றோடவோடிவியப்போர்பால் (௯௨)

கலையுளாவலான்முயல்பலகலந்தகாட்சியினு
விலகுமாவாவெய்தலாற்பலங்களீதரலா
லலகிலாதவம்பரமடைதருதலாலசலம்
ருருவிருவிழியானைக்கியுள்ளுடைந்தோதுவரால். (௧௩)

இங்கிவரொழிற்செவ்வேளொளிக்குவிலேந்துவேளோ
வெங்கவரிருவர்மூவராமிவராதலாலே
பொங்குபொன்னேட்டுவாழ்புத்தேளிர்ப்பூமியின்கட்
டங்கியமனுடர்தம்மிலாரிவர்கள்சஞ்சார்வார். (௧௪)

இந்திரைகல்விச்செல்விமிமையவரீன்றெடுத்தபாவை
சுந்தரமிக்குத்தோன்றித்தூறவர்தூமருமப்பாற்றரு
சந்தனைத்தூபக்கொங்கையமூர்துறக்கழுவாரென்னி
லந்தவென்மேன்மையென்கொலருந்தவமாற்றுமேயாம். (௧௫)

நங்கையமீரிந்தமூன்றுநப்பியர்தமையிந்நாண்மட்
டெங்குங்கேட்டகக்கேனக்காவிருடிகள்புலவரெல்லாந்
தாங்கமேடனைமேன்மைத்தாய்ச்சொல்லுவரிவர்நேர்தோற்றி
லங்கவரேசுழேசியகமிகநாணுவாரால். (௧௬)

என்றிவரிசைத்துமூரலெய்தித்தங்காமங்கண்வாய்த்
தான்றுறச்சொல்லித்தோயந்தோய்கரைமீதுநான்னக்
குன்றுருண்டுதெய்முற்குறுமனுமசனத்தொண்
பன்றலைங்காதமுந்தவைக்கமன்னுற்றமன்றே. (௧௭)

வரைவருதவர்கள்பாதவாரிசங்காணாநாவி
யனைதிருச்சேனையாத்தத்தந்தலையடையக்கூப்பி
புனைதருசழுந்துப்போற்றியுவகைநீர்கூவிற்றுவப்
பரசியவ்வெழுவரானபாவையரேகவப்பால். (௧௮)

சங்கரன்வெருன்றோமாதரனைனுந்தவரேடங்கொள்
புங்கவர்சிகாநின்றுபோயநுவுகையடையென்று
நங்கைதங்காசிர்ப்பாரனைன்னையுள்ளனெடுங்கிநானி
யங்கயன்பனைற்றுவாருபவவிழைந்தருன்மினென்னுள். (௧௯)

அவர்களங்கமர்ந்தேயாதுனன்பனெனக்ககன்றானன்றே
னிடமெனவன்வருவானென்னவிலங்கிலைழுமெழினீராடி
நவகுடிகைக்குளெய்துவாரெனநடுங்கியையோ
தவளவாணையையாவெங்கள்பசியதுவரைதாழாதே. (௪௰)

உடல்விலைவிலத்துச்சீவனுயங்கினதொருமுகூர்த்தப்
படிதனைபடுமோவெங்கள்பசிசகியாநத்திகாத்தி
மடமயிலெனவெங்காகவருந்தல்வேண்டுவவட்டிப்ப
லுடனுணவீந்தாவிந்தவுடையுடுப்பீரெனவேற்ச. (௪௧)

குயின்மொழியசியாறெந்தோர்குறைதவிர்த்தருள்தற்கொப்பானு
செயறுவந்தானப்பாகமிலையெனவேதுஞ்செப்பு
மயசெனின்பாற்கண்டேடுழய்ந்துனேநாஞ்சொல்சொல்லுக்
கிணைதரவியற்றிலீரேழுலகினிற்கெவர்நேராமே. (௪௨)

என்னெனிற்சதுக்கிரப்போண்டெழிற்றவஞ்செய்தீற்றிற்
கன்னனற்சொல்லுங்கற்புங்கண்ணுகாரிகையார்காமர்
மன்னியகொங்கைபொங்கைவருடிப்பாலுண்டேபம்வாய்வை
புன்னமெம்பசிதீர்பாலெம்முலைவழிவழியுமாலோ. (௪௩)

அன்றிநீர்வாணமேறாற்காரவர்நீர்வாணமன்றே
யொன்றிடிலன்றியொனறுதென்றுயர்ந்தோர்கள்சொல்வா
ரென்றினிநின்றாகாதுமிருந்தனமின்றுன்று
லன்றெனவறமன்றாகமகலினுமுடையுடேமால். (௪௪)

அந்நியர்வேண்டிற்றீதடாதகாறுலான்றோர்க்
கெந்தவிடையபோதீவாரிதையெவரிசைசெய்வல்லார்
பதிவிரதபுஞ்சொல்சொல்லுப்பழுதாறவைங்காப்பாயே
லதிவிரைவாகத்தந்தெமாவிகாத்தருளென்றேதி. (௪௫)

ஒருவனென்னுகநர்தூழித்திசொலோவற்றதென்று
மொருவரெருவனெட்டிலொன்றிலாவிருநாக்குக்கி
மறுவினைனென்றுவீழ்வாரொருவன்பொய்வன்னிலையு
மொருவிவென்வாயிற்றினுற்றதென்னப்பாவனைசெய்தோத. (௪௬)

கேட்டனராசூயைகொள்வங்கிளக்குசொற்கேட்டிருந்த
நாட்டுவைபடாத்திரித்தநாட்டவிர்தானஞ்மைத்தோ

வீட்டடைமைப்பதுந்தண்ணலிகண்டுபோற்றுவென்கங்
கோட்டினன்போலுமென்றுள்ளத்தொடுகூறுகிற்பாள். (சஎ)

ஈசனோதிருடிகேசனிரணியகருப்பனென்னப்
பேசுமாகடவுடையர்மூவருநெடியமாக
மாசிலார்சொன்னசொன்னுண்பற்றுபரம்பொருளோவாராதே
லாசிலாவிவர்களம்மையருந்துநம்பலாக. (சஅ)

வரம்பவருள்செயாசைநாயகனவன்மூவன்
மருமலரடியில்மேலார்மருமலர்தூவிப்பூசித்
திருநயத்தீந்திப்பூசைக்கிலிங்கவங்கமைந்துவைத்த
குரகநற்கமலந்தன்சீர்க்கரகமலைப்பமேலேந்தி. (சகூ)

செவ்வியகூர்ச்சக்குச்சந்திரனையத்தீர்த்தத்திற்றோய்த்
தொவ்வலவும்மூவர்மேனிமேற்புரோக்கித்தவொல்லை
யவ்வவர்பாலராகியமூவழுகார்கூர்ச்சத்தைக்
கொவ்வையங்கனிவாயந்தச்சிகரமீக்குலாவவீசி. (ருO)

அழகமைகுழலியாகியருமவர்தம்மையங்கைத்
தழுவிநல்லணையாடைக்கட்டடமுலைதன்பானின்று
பொழிதருதீம்பாலூட்டிப்பொற்றொட்டிலிட்டுப்பூநேர்
விழிதுயில்கொளத்தாலாட்டவிளங்கநற்குணமேவி. (ருக)

வேறு.

இந்திரனுஞ்சந்திரனுமிமையவருமிருடிகளுஞ்
சந்ததம்வந்தடிவணங்குந்தாமரைச்செந்தாளானே
கந்தனைப்பெற்றறைந்தனைக்காமனைத்தீக்கட்பொடித்த
சுந்தரனேயென்சுதனேஞ்சோதிதுயிலுகதுயில்க. (ருஉ)

மான்மறைநாபியம்பொகுட்டுவந்தவனேவளாகமெலாந்
தான்பரவுசராசரங்கடந்தவனேத்திசையுங்
கான்மருவுகமலமலர்க்கட்குடிகொள்கண்ணியனே
நான்முகனேயென்சுதனேநவமணியேகண்டுயில்க. (ருங)

அண்டர்துயர்தீர்த்தவனியரிவைசுமையகற்றிடுவான்
பண்டுபயவாரிதியிற்பாப்பணைப்பாற்படிதுயினீத்
தெண்டிசையும்புகழ்தசரதத்திறைவனின்றெடுத்த
கொண்டலெனவந்தருளென்குமரதுயிலுகதுயில்க. (ருச)

மாரனுடன்மாறலிழிவன்னியிற்றீத்தோர்மூன்று
நேரலர்க்கணைப்புரங்களீற்றுதிரீர்கொடுகொண்
டோரவிடமுண்டபரர்கோணையர்கடாவிகழுந்
தாமவருள்செய்தவனேறுவாரமூர்த்தா லேலேலோ. (ருரு)

கன்றுவிழ்ந்துக்கன்றெறிந்துகனியுதிர்த்தாய்க்கன்னியர்கைக்
கன்றுடைத்துக்கன்றுகண்டேய்ந்துக்குராவைக்களிநடஞ்செய்
தொன்றுமாருந்திறைமேலொருண்டிறிவைகதிவெண்ணெ
யனமுதிடடிப்போவெண்ணைப்பவழுறு லேலேலோ. (ருசு)

இந்திரைநாயகன்மகனேவெவ்வுலகுமீன்றவனே
சந்தமறையோர்பாவச்சந்தாபவைமாய்ப்பவனே
முந்துகலைமகள்களபமுலையுழுமாகத்தவனே
வெந்தவினைதீர்க்கண்மணியேயினியமுறுறு லேலேலோ. (ருஎ)

வாரணமுன்வந்தவனே வாரணமுனுரித்தவனே
வாரணங்கைக்கொண்டவனே வாரணங்கைவைத்தவனே
பாரணங்கைப்படைத்தவனே பாரணங்கையெடுத்தவனே
காரணங்காணேன்றுயில்திர்காண்பூகோகாள்கண்டுயில்திர். (ருஅ)

நானிழைத்தநற்றவமோரத்தினமோபொக்கிசமோ
வானிலுந்தில்மாநிலத்தில்வாய்க்காதவைபவமோ
கானிலைத்தகமலமலைகடல்கடந்துகாத்திடற்கென்
பானிலைத்தபுத்திரசற்பாக்கியமோராராரோ. (ருகூ)

வேறு.

இத்தகையாயநுகூலையவோரார்
புத்திரர்கண்டுயில்புக்கிடவைக
வத்திரித்தியகன்மமெலாஞ்செய்
துத்தமவாசிரமத்தினிதுற்றே. (சுO)

கண்டிவரார்பெறுகாதலராவா
வொண்டொடியேதெரிவுறவுரையென்னத்
தண்டொடவவனிருதாள்விழுந்தங்கற்
கண்டெனுமொழியுளகழறுவன்மன்னே. (சுக)

எவரிவரோவறிகிலனிருடியரி
லிவரிவணுறவருமெய்தியதாதி
யுவனையில்சிசுவுருவுறுவரைபோதத்
தவனுளவிழியவர்தமைதெரிதரலாய். (௬௨.)

வேறு.

மனந்திடுக்குற்றனந்தக்கண்கனிர்வாரரோம
வினங்கள்கூச்செறியச்செங்கையிணைதலைமேறக்கூப்பித்
தனந்தனமெனக்கூத்தாடித்தாடொழுதெழுந்துசப்பு
வனந்தகல்பாணச்செய்கையனைத்துதியறைவதானான். (௬௩)

ஆவிசெறுநந்தக்கூத்தைந்தழனுப்பண்ணைக்கிக்
காவுதலிலைசாய்கந்தங்கனியுண்டங்கனையுநீக்கி
வாவிவண்மழைகாறுய்த்துவைகிவான்றமைப்பண்ணட்செய்
தேவருந்தவருமின்னுந்தெரிதரப்படாததேவ. (௬௪)

அறம்புரியம்மைவாமத்தமர்பவாவடையலார்க
டிறந்திரிபுரமுந்தீயச்செய்தவாசிறந்தவேத
மறிந்திடற்கரியவையாவம்பொன்மேருவின்விற்கையா
விறந்திடாதெழின்மார்க்கண்டற்காத்தருளிறைவவென்றும. (௬௫)

வாரிதிவாயோராயிரப்பைவாசுகிமெத்தை
வாரிசமாகுமக்கண்வளர்பவாமலராள்பாராள்
பாரிசத்தமர்ந்துகாந்தட்பாணியின்வருடுபாதா
சீரிசைசருவசீவராசிகடிதிசெய்தேவா. (௬௬)

முதலைவாய்ப்பட்டுமொய்போய்மும்மதவெற்புமுன்னாள்
விதலையாயாதிமூலமேயெனமேவிக்காத்தோய்
குதலைவாயாயர்மாதர்விழிகளிகொளுங்கோபால
மதலையாயசோதைமாதுமாதவத்துதித்தமாலே. (௬௭)

பங்கயாசனப்பரான்மேவும்பரமனேபடைப்பியாவுந்
செங்கையான்மனத்தானேக்காற்செய்தவாபனுவலாட்டி
நங்கைதானனைசநண்ணுநாயகநவத்திரண்டாந்
துங்கவாகமங்களெல்லாந்துலங்கிடச்சொற்றசோதி. (௬௮)

தேவர்கண் முனிவர்போகர் சித்தர்கள் ஞானச்செல்வர்
யாவருமனேககோடி யாண்டருந்தவஞ்செய்திந்தத்
தேவரிலொருவர்சேவைசெய்தனரன்றியெற்போ
லேவர்கண்மூவர்சேவையினையொருங்கெய்தினாரே. (௬௯)

இரணியனயனைநோக்கிப்பெண்ணருங்கற்பவெல்லை
தரணியிற்றவஞ்செய்தெண்ணில்சம்பத்தைச்சார்ந்தான்மேனாண்
முரணியதசக்கிரீவன்முக்கணன்றன்னைநோக்கித்
திரணெடுந்தம்பத்துச்சித்திரநடுச்சேர்ந்துவைகி. (௭௰)

தலையையொவ்வொன்றாய்வாளாற்றடிந்தழறன்னிலர்ச்சித்
திலகுநற்றவத்தானேருற்றெய்தினனெண்ணில்செல்வ
மலையைவண்குடையாய்க்கொண்மால்வரத்தருவன்பண்ணுட்
பொலிதவம்புரிந்தொப்பில்லாப்பூப்பதம்புகுதப்பெற்றான். (௭௧)

அரனொருந்தருள்வேதண்டத்தணியுமைப்படைக்கையண்ண
றிருவுடன்வைகும்வைகுந்தப்பெருஞ்சிறப்பும்வேதன்
பொருவில்பூநகரப்பொற்புப்புகலவாயிரம்வாய்ச்சேடன்
வெருவுவன்மிகவுமேன்மைமிக்கவக்கோயில்விட்டு. (௭௨)

படைப்பியற்றிடுநற்கர்த்தாபாதுகாப்பாற்றுங்கர்த்தா
துடைப்புறுதொழில்செய்கர்த்தாவாகியதூயோரொன்று
யடுத்தென்புன்குடிசிற்சேயராயமர்ந்தார்களென்று
லெடுத்தியானென்சொல்வேனென்றிருதயந்திறப்பூதெய்தி. (௭௩)

மலர்வயின்மணமாயெள்ளினெண்ணெயாய்வானோராதி
யிலகுமாணிடர்பாலெண்ணிலுயிர்தொறுமிரியாதெய்திப்
பொலியிவர்புதல்வராகப்போதநாம்புரிந்தநோன்பெ
னிலகிதழீன்றளீன்றேனவர்க்குமின்னவரேயாமால். (௭௪)

அன்னவர்தமக்குத்தானிங்கன்னையாயமுதமீய
வென்னருந்தவநீசெய்ததிவ்வொதிரெய்தநீயென்
பன்னினைபாதப்போதுப்பாற்பணிந்தழுதுசொன்ன
தென்னதுசெய்திடாமலென்னவென்னியற்றிட்டாயோ. (௭௫)

அரசர்களறவர்வானோரரக்கர்களாயுள்ளோரி
லொருவருமிந்நாண்மட்டிவ்வுயர்வடைந்தோர்களின்று

லரிவையென்றார்வமேலிட்டழுகுறவலமாய்வந்தங்
கிருவன்றுமூவர்மூவாவிணையடியிறைஞ்சியேத்தி. (௭௬)

வாவுமான்றேறோன்கீழ்பால்வருபொழுதுச்சிமாலை
மேவுமப்போதுட்வேதவிதியின்றீர்த்தக்காட்டி
பாவியன்மலரான்மூவர்மாமனுவோதிப்பாதந்
தூவிவாழ்த்தெடுத்துக்கொங்கைசுரந்தபாறுய்க்கவூட்டி. (௭௭)

அகமகிழ்ந்தாகப்பூரித்தானந்தக்கண்ணீராறு
மிகவுகக்காயிலைப்பாலார்விரைதாமரைவாசம்விட்
டிகமதிலமைபாலிக்குடிசிலையிருக்கவெண்ணி
பகவுருவாகபாமெனமறுவறுதவஞ்செய்தேனே. (௭௮)

எனவறுசுவைபகேள்வனேனைத்திசைத்திருப்பவின்னோர்
தனதுருமாறவீறுதருக்கிலராகிநக்குற்
றினிதிளங்குழவிருபத்திருப்பமாரதனுங்கெய்திப்
புனிதமாலரன்வேதாவசம்புங்கவர்புதல்வராகி. (௭௯)

அழுதநறுஞ்சுவைகொங்கையமுதமுண்டமர்தரன்னோர்
விழிகளிமேவனோக்கிவியன்சரஞ்சிரமீதாக்கித்
தொழுதுசூழ்வந்தம்மூவர்துணையடிமுடியிற்சூடி
யிழுதைமேயன்பவமின்றிற்றதிற்றதென்றேத்தியப்பால். (௮0)

மாதவமணியையன்னமனைவியைமகிழ்ந்துவாழ்த்தி
யேதிவர்தமையின்றேத்தியெவர்நீகரென்னச்சாற்றித்
தீதிவர்தீர்ந்தாரென்னத்திவவியாழ்ச்செங்கைச்செல்வ
னோதுவனிதிமூவர்தேவியர்க்குற்றென்றான்னி. (௮௧)

வாண்வதியேகினோனோர்மாதவரவர்கண்மாதர்
தான்பணிதருசீராருந்தாரமாசயிலமேவிக்
கான்கமழ்கருமென்கூந்தற்களிமுன்னெய்தியன்னு
டேன்றிகழ்சரோருகப்பொற்றிருவடிமுடியிற்சேர்த்தி. (௮௨)

அன்னையுன்னன்பன்முன்சொலத்திரியிருடியில்லாங்
கின்னிதன்கற்புக்காண்பான்சென்றவள்கைக்கனோந்து
மன்னிளமகவாயன்னோர் வனமுலையமுதமாந்தி
யிந்நிலையிருந்தாரீசென்றிலங்கிருவிழியாற்காண்டி. (௮௩)

என்னவன்னதுகன்னக்கணோறாமூன்றிடுக்கிட்டென்னை
யன்னவல்கற்பின்வன்மையறிதாதகங்காரங்கொண்
டின்னதுதான்னிற்றென்செய்குவதியாழிருடியென்ன
வன்னவனன்னைகேண்மென்றடிதொழுதறைவதானான். (௮௪)

நாட்டமூன்றுடையோனானநம்பனர்தனையுயர்ந்த
வாட்டடங்கண்ணிகொங்கையூட்டியுண்மகிழ்ந்துதொட்டி-
லாட்டலங்கார்ந்தால்வன்மைபறைவதெனிரந்தனள்பாற்
கேட்டருட்கிடைத்துமீட்டுக்கொள்வதுகிழமைத்தென்றான். (௮௫)

மயிலியற்கரியகூந்தலம்பிகையப்பான்மாலின்
செயலெனபிரமதேவன்செய்கையென்றெரிவியென்னக்
கயலியற்கணிகாபாரிகாரியமிதுவேவென்று
ரியவிவணெடுத்தேன்சொல்லன்மதலையாயிருக்கின்றான். (௮௬)

என்றியாழிருடிகூறவிபாசலச்செல்விகேதன்
மன்றலார்துளபமாலைமான்மனைவியர்பாலேகி
யின்றெலாமிசைத்தென்பால்வந்தெய்தச்செய்கென்னவன்னே
நன்றெனவணங்கிப்போதினங்கைமுன்னாகநண்ணி. (௮௭)

மணிமயபாரலோகத்தில்வைகுவாய்மானுடர்தேவர்க்
கெணில்வளமெல்லாமீயுமிறைவியேயென்றங்கேத்தித்
துலைவனைவடியிற்றாழ்ந்தேதொகைசுந்தரமிக்காருன்
கணவன்றன்செயலெல்லாங்கூறவிருக்காதிற்கோடி. (௮௮)

அத்திரியிற்கற்பாற்றலறிதாற்கரேயார்கோடி
சித்தசர்வெட்குப்பொற்புச்சேர்ந்துசிங்காரசேட்டை
யெத்தனையெய்திச்செய்துமிறையுமங்கேறுதன்னா
ளுத்தமத்தத்தைத்தேர்ந்துபொருசிறுகுழவியாகி. (௮௯)

அமுதவாரிதிபைச்சீராரனந்தனென்றறைமாமெத்தை
குமுதவாயுணர்ந்தப்பாற்றுங்கொள்கையைமறந்தக்கோதை
கமதுவாரணிப்பாற்கொங்கைதங்கையால்வருடிவாய்வைத்
தமுதுபால்வழிபாலுமருந்தியாங்கயர்ந்தானகாண்டி. (௯௰)

திருமனைக்கேவியாழ்க்கைச்செல்வன்செப்பிடத்தன்சிந்தை
வெருவாத்தெரிவையோர்வியன்பதிவிரதந்தேர்வான்

கருவமுற்றதற்குத்தக்காசிவணைகூடிற்றூற்
பொருவினற்றவலிப்புன்மைபோக்குவபுகறியென்ன. (௯௧)

உமாபதிதிருவேகற்பானுபருமொண்டொடியார்தப்பாற்
சிவனயன்றிருமால்செய்கைசெலாதெனமேலோர்சொல்வா
ரவையிலனைடையக்கண்டேமவனேயாசித்துக்கேட்டிந்
நவையகலுவதுநன்றென்றனைத்திவைநவிலுவானால். (௯௨)

பலபகலுனையுமுன்றன்மருமகடனையும்வல்லே
பொலிசிகரப்பூம்வெள்ளிப்பொருப்புறப்புகன்றுளென்னச்
சொலிநகுஅதைவெண்டோட்டுத்தாமரைத்தவிசுத்தோகை
நலமிகுசந்திதானநண்ணியன்னவளைப்போற்றி. (௯௩)

உலகமாதாவேநாயேற்குயர்வெலாமுதவிக்காக்குந்
தலைவியேதவளமேனித்தையலேதவர்வானோர்கள்
குலவிநாடோறும்போற்றுங்கோதையேயுனதுகொண்க
னிலவிதழறுகூயாகையேந்திளமதலையாகி. (௯௪)

விம்மிச்செம்மாந்துவேடன்வியன்முடியெழிலையேசு
பம்முமுண்டமர்ந்தான்றேறெமம்பிகையுன்னைத்தன்பா
லிம்மெனவரச்சொற்றுளன்றிசைத்தியாழிருடியெங்க
ளம்மைவாழ்கயிலைவெள்ளியசலம்வந்தடைந்தானப்பால். (௯௫)

இதுதெரியிசையின்செல்வியென்செயவென்றுன்னைந்து
கதுமெனக்ககனவாணரவர்கள்காதலிமார்சூழப்
பதுமமின்பால்வந்தன்னாள்பதப்பணிதரலுமன்று
ளெதிருமுனிவர்தேவரிவரிருபுரமுமெய்த. (௯௬)

செயன்செயவிசயன்முன்பின்சேர்தரவிநதைசெல்வன்
புயந்தனிற்கமலைபோதப்போதன்றன்பனையன்னச்
சயந்தனந்தன்னிற்சாரச்சபிலமான்றன்பாலெய்தி
யினைந்தனவெல்லாமெம்மோய்க்கிருவருமியம்பக்கேட்டு. (௯௭)

தென்கயிலாயத்தெய்தித்திகழறுகூயைச்செல்வி
தண்ணளியினிரந்துகேட்டுத்தவர்தமைமுன்போன்மீட்டு
மின்செயுந்தவத்திற்கேற்பவேட்டனவிருப்பினல்க
லின்செயலாமென்றேதியிடபமீதினிதினேறி. (௯௮)

நந்திவேத்திரக்கையானுய்க்கடப்பமுன்பிருங்கிநாமச்
சந்தமாமுனிதன்செங்கைத்தலைமிசைக்கூப்பிச்சார
வந்தமாபிரமதத்தாணியணியருகுறுழச்
செந்திருவாணிதர்மச்செல்விவல்லையிற்சென்றாரால். (௯௯)

ஆக படலம் ௮ - க்கு திருவிருத்தம் ௫௬௮.

கற்புங்காண்படல முற்றிற்று.

## ௯ - வது சுயவடிவடைபடலம்.

அண்டரமர்தருமவனியசலமளவறுநதிகளழகார்நாடு
தண்டலையாதியகடந்துதனிசெல்லிமாநகரந்தாண்டியப்பால்
விண்டலைமேவியசிகரத்திரிமூர்த்திவெற்பருகுமேவிக்கண்டா
ரெண்டிசையுமிசைவளமுமிருடிகளாச்சிரமதவத்திடமுமாதோ. (௧)

மழைவெளிறுமலர்க்கூந்தன்பாகாண்டிகயிலைமகமேருநாறு
மொழிலுளதாயிமையவருமிருடிகளுமிருந்துதவமியற்றலாகி
பழகளிறுங்கேசரியுமாறறச்சஞ்சரிப்பனவாய்மாகமெட்டித்
தழைவளஞ்செய்சந்தனமுங்குங்குமமுமெங்குநிறைசாரன்மன்னோ.

எட்டெழுத்துச்சரிப்பவருமைந்தெழுத்துச்செபிப்பவருமிருநான்கி [யோகு
தட்டறச்செய்தமர்தவருஞ்சரிகைகிரியாதிவழிதவறுதாருந்
துட்டபுலன்களைக்களைந்ததூயவருமிடங்கடொறுந்துலங்கவோங்கி
பட்டறுமாதவம்புரியத்திரிமுனிவனாச்சிரமமருங்காம்வேலை. (௩)

திருமகளுங்கிரிமகளுங்கலைமகளுநடுவில்வரச்சீர்சேர்தேவ
ராசனங்களரிகணங்களறுமுகன்வெங்கரிமுகனம்புயனப்பத்த
ரிருபுறமுங்கரவிணைதஞ்சிரமிசைச்சேர்த்திசைதிசைபோயேத்த [வேத்தி
வருவரவைக்கண்டமுனிபணிவியநூருமையைமதிவதநநோக்கி. (௪)

என்றவமோவன்றவமோவென்முன்னோரின்றவமோவிந்தத்தான
மின்றவமோவியப்பலையின்றனுளும்பாற்கடற்பாலெய்திறனுந
மன்றல்கமழ்வெண்கலசமாதாவும்வருபெருமைவாய்ந்ததனுனோ
னின்றெனக்கண்ணீர்சொரியப்புளகமுறவடிபணியொடுநேசி.

அடிக்கடியன்னவரழ் வீழ்வானெழுவானழுவானுராந்தத்தாலே
தடிப்புனுடல்வலம்வருவான்ருற்றுபோறத்துதிகள்சாற்றுவானிப்
படிப்படிப்பாற்பெற்றார்பார்க்கினென்பான்பார்வதியைப்பதுமத்
[தாளைக்
கடிச்சுவைதவெண்கமலமலர்க்கண்ணுறைவாளைத்தொழுதுசுழலு
வானால். (௬)

வானவருமானவருமாதவருப்வள்ளிநடுமைகிட்டான்ஞட்.
கானுகர்ந்துங்கநுகர்ந்துங்காணுதகாட்சிமிகுசகடனுமேன்
பானையந்துதன்னருள்செய்பார்வதியேகலைமகளேபதுமைமாதே
பூதிலத்தெற்கொப்பெவர்செப்பிடிலிலையென்றவர்கள்புகழ்புகழு
வானுல். (௭)

அப்பிகைமேவவரைபரசனருள்புதல்வீபரமனிடத்தாருஞ்செல்வி
யுப்பர்முதலுலகமெலாமுதவுகரத்தெண்மயிலேநீலமேனிக்
கொப்பனையேயறம்வளர்க்குங்கோகநகத்திருக்காத்தாய்கொடியேற்
[காப்பா
ணியம்பெழுந்தருளிறைவியெனவணங்கியருகமரிந்திரையைநோக்கி.

வலப்புரிந்துமரைமலர்சேர்பரணடி வீழ்ந்தெழுந்துகாஞ்சிரமீக்கூப்பி
நலப்புரிநான்மறைமனுவாணுக்குழுறத்துதித்தசுராராசர்நாசர்
நிலம்பரவுமனுடர்வளநோவிழிக்கருணைபொழிசெபோன்பார்பத்
தலம்பொருவிறவிசாய்வைகியபெரியபிராட்டியெனச்சாற்றியப்பால்.

அயலிலமரயன்மனைவியடிமுடிதொட்டிடப்பணிந்தாரணச்சொலா
[லே
சுயதுதிசொற்றடியனிருவினைதுணியத்தோற்றிடச்செய் தூயதாய
செயமெலதுவோவெனவருதிர்சேர்திரெனவாசிரமத்தின்பாலேகி
யிளையதவிசிந்தருக்கியமாதியவுபசாரங்கள்புரிந்தெதிரினின்று. (௯)

அன்னைமீரேகயிலையமிழ்தாழிபெரும்பாலூரகன்றநாயேன்
முன்னர்நீர்முன்னியதென்றனையெனிலையடிமைகொளமுன்னியே
[யோ
வின்னறீர்த்திரட்சித்தற்கெண்ணியோவிவணனகமியற்றவேயோ
வென்னையோதிருவுள்ளத்தியல்புதெரியேன்சிறியேனென்னுமேல்
வை. (௰௧)

பொற்பினுயரொழுக்கத்திற்புவனநடக்கையிற்கணவன்பூசைதன்னிற்
கற்பினுயர்க்கருணையினிற்றாசினியாசினிவாழ்காரிகைமார்தம்மி
லற்பமுறைபொற்பொலிநகருறைநசூயையாநந்தத்தாலிரட்டத்
திறம்பொழியமூவர்மனைவியடிதாழ்ந்தெழுந்துதுதித்துசொல்வா
ளால். (௰௨)

மன்றனிறைசெங்கமலைவெண்கமலைவரையமலையன்னையார்கா
ளொன்றவமேபோமென்றவன்றனிருந்தவமோவிவ்வசலமியற்றுநோன்போ
விற்றிவணீரெழுந்தருளற்கேதுசிறியேனறியேனென்றுபோற்றி
நின்றவநசூயைதிருமுகநோக்கியவர்களிவைநிகழ்த்துவாரால். (௰௩)

மண்ணுலகின்விண்ணுலகமடவாரினுனக்குவமைவாய்த்தமாத
ரெண்ணினிலையெப்பாலுமியலாதவெல்லைகியற்றியிட்டதூரம்
வண்ணவிளக்காம்பாவுமாத்திரத்தேவன்னியினிற்பொரிந்ததென்னிற்
புண்ணியையுன்றரிசனைசெய்பூவையர்பெற்றிடுபேறார்புகல்வலோரே.

தேசொருகோடியினொளியுந்திகைக்குமொளியுளசிவனைத்திருப்பாறன்னை
வாசமலர்வாழயனைமகவாகப்பெறற்றிடமாட்சிமைவாய்த்தாயாம்
பேசின்மருமகளாகும்பேறுபெற்றாயிப்படியார்பெற்றார்யாரும்
பூசைபுரிமூவரையும்புதல்வரெனப்பெறிற்பெருமைபுகல்வதென்னே.

சிவனயன்மாலொடியாமுன்செயற்றெரியாதேதெரியச்செய்ததான
நவைசிறிதாமுனதுளத்திறைடேலநாயகர்முன்வடிவநண்ண
விவணருள்செய்திடக்குமாங்கிலியபிச்சையீவதுடனுலகமெல்லா
முவமகன்முத்தொழிலுமொழுங்கினடப்பறப்புரியொண்டொடி
யேயென்ன. (௰௬)

சிந்தைதிகைத்தநசூயைசெந்திருவைச்சிவையையயன்றேவிதன்னைக்
கந்தமலர்க்காற்றுணையிற்கைகூட்டியழுதுவிழிகளுழிகால
வெந்தனுயிர்முதலபொருளெதைக்கேட்டாலுந்தடையற்றீவேனிந்த
மைந்தர்களைமட்டுமெனைவைதாலுஞ்சபித்தாலும்வழங்கேனல்லால்.

எவ்வுலகுமெவ்வுயிருமீன்றருளுமன்னையரேயிருடிமாருஞ்
செவ்வியதேவருந்திதியிசிறுவர்களுமரியதவஞ்செய்துமன்னார்க்
கொவ்வொருமூர்த்திகண்முன்னுற்றுடன்வரந்தந்தந்தரத்தானத்தி
[னுற்றார்
செவ்வியவேதங்கடிசெய்துமுறைசெய்துமினுந்தெரிதாதால்.

அட்டாங்கயோகமுறையனுட்டித்தோர்சருவதியாகஞ்செயான்றோர்
பட்டாங்கிற்றரிசிக்கப்படாராகியிருதயத்தின்பாற்பார்த்தார்யான்
றொட்டாட்டிமுத்தமிட்டுத்துணைமுலையூட்டித்துடைமேற்றாலங்க
[லேற்றாற்
கெட்டாப்பேரியதவமெதுவோவிவ்வைபவங்கையெய்தலாகி. (௰௯)

பாவமெலாம்பாவகன்முன்பஞ்சாக்குஞ்செஞ்சரணப்பதுமமென்கை
நீவவுநோக்கவுமுடன்மேனீட்டிடவுமுதைத்திடவுநிதமுநான்செ
யேவமெலாமேகிடவுமெப்படியோசித்தித்ததிதையியென்னி
லாவியகலினுமெவர்தானளிப்பர்பொறுத்தாண்மினெனவடிவீழ்ந்
தாளால். (௨௰)

தாட்டுணைதாழநாசூழைத்தையலைக்கையாலெடுத்துத்தழுவிநங்காய்
கேட்டியுலகிடையிடுக்கண்கிட்டிவருந்துவதுசெவிகேட்டமேலோர்
மீட்டிடத்தன்னுயிர்விடினுமேன்மையேமறுப்பரெனில்விரைசூழ்
நாட்டினனுறும்பாவம்பழியுமொழியாதவரைநணுகுமன்றே. (௨௧)

ஏதேனுமோருதவியெவர்க்கேனுந்தன்னான்முற்றிடுவதாயின்
மாதேதானேமுடித்தலுத்தமமாஞ்சொற்றபினர்வழங்குவாரே
லாதாமத்திமம்பலநாளகன்றதற்பினருளுவரேலதமமென்ன
மேதாவியோருரைப்பரிதுவன்றியினுஞ்சிலதுவிளம்பக்கேட்டி.

பங்கயன்மால்பரமனெனப்பகர்மூன்றுதொழிலுஞ்ஞற்றுபகவரெல்லா
மிங்குனதுசிறுவர்களாயிருந்தாலத்தொழினடத்துமெறுமூளார்யார்
மங்குமுலகமுமுயிருமாதலினுற்றனையுளக்கண்வைப்பாயாகி
லெங்குமுனதிசைபரவுமென்றுமழியாதிருக்குமின்னுங்கேட்டி.

இனைத்துணையானன்றிசெயிற்பனைத்துணையாக்கொள்வர்சிறந்தோர்
[களொன்னி
வினைத்துணையானன்றிசெயிலெனைத்துணையாய்ப்பொருகுமென
[வெண்ணிப்பார்த்தி

வனத்துணையாமலைமுலையாம்புருடரைப்பிரிந்துவாழுகில்லோ
நினைத்துணையாவந்தடைந்தோர்நீத்துவிட லுனக்கழகோநீதியேயோ.

பிச்சைபெறுபவரோயாம்பிச்சைதருபிரமபோநீபிச்சையோசொன்
முச்சகமூன்றுபுரியுமூவாததிரிமூர்த்திமுதல்வாமே
விச்சையெலங்கெவர்க்கியையுமிதுவல்லாலதிதியர்வந்தேற்றதீயா
வச்சகர்பால்வரும்பழியுமாபவமுமெனமறைகள்வழங்குமன்றே.

அரியதவமனேகபகலாற்றினவர்முன்னரெழுந்தருளிவேண்டு
முரியவரமுதவுமொருமூவர்கண்முன்வடிவடையவொப்பிலாத
பெரியவரநீயருளப்பெறிலிமையோர்களுமுலகும்பிரமஞானந்
தெரியுமருமறையவருந்தினமுமுனதெழில்கொள்புகழ்செப்பு
வாரால். (௨௬)

வல்லமையெவ்வளவுமிகவாய்ந்தாலுமதிதியர்கள்வந்துகேட்ட
தில்லையெனவிசைக்கிலுடனதமமும்வல்லமையொழிவுமெய்துமெ [ன்னச்
சொல்லுவதுகேட்டிலையோதோம்பொறுத்தெங்களுக்கருள்செய் [தோகையென்ன
மல்லலுமைகமலைகலைமாதுசொலவறகூயைமனத்துள்வாளால்.

நான்கடவுணாயகனென்றெண்ணியதுங்கட்டளையிட்டதைநானுளுந்
தான்கடவாதாற்றியதுஞ்சத்தியமேற்புத்திராய்வடிவுசார்ந்த
தேன்குடிகொள்கொன்றையணிசிவன்றிருமாலயனிவர்கள்திகழு [முன்போல்
வான்வடிவுவரவரந்தாமகுணவெனமலரடிதாழ்ந்துவகைவாய்ந்து.

வடிவமிசைபூசைசெயச்சேகரித்துவைத்தகமண்டலதீர்த்தந்தன்
றொடியசைபூங்கரத்தெடுத்துத்தூவவுடன்புத்திராஞ்சொருபமோவி
விடையிடைநற்கருடனிடைவிகங்கமுதுகிடையவர்முன்விளங்கித் [தோற்றப்
படியிடையத்திரிமுனியும்பாவையுந்தாழ்ந்தெழுந்துவலம்படஇச்
சொல்வாரால். (௨௭)

வேறு.

ஆக்கிடற்கயனாய்க்காத்திடற்கரியாயழித்திடற்குருத்திரனாகி
நீக்கமற்றெங்குநிறைபொருளாகிநிலஞ்சலம்வன்னிகால்வானாய்ப்

பூக்கணிற்பொருப்பிற்புணரியிற்பொருந்திப்போற்றடியார்களக் [கமல
மீக்கொளுஞ்சோதியாய்விளங்கியசீர்வித்தகர் திருவடிபோற்றி.

நான்முகனாகியைம்முகனாகிநவிறசத்துருவமுன்னெண்ணும்
மான்மயமாகிவேதமாய்வேதவத்துவாய்வன்னியென்மதியாய்த்
தான்மயங்குவதாய்த்தத்துவமாகித்தத்துவாதீதமுமாகி
நான்புரிதவத் துக்கிரங்கிவந்தருளுநாதனார் திருவடிபோற்றி. (௰௧)

உலகமாயுலகிலுள்ளபலவுயிராயுயிர்களுக்குண்ணுநல்லுணவா
யிலகியாதியுமத்தியுமிறுதியுமேயில்லதாமேயேகமாய்ப்பலவா
யலகிலாமறையும்யாகமும்யாகத்ததிபதிதானுந்தானாகிப்
பொலிவதாய்மூன்றுமூர்த்தியாமுமதுபுண்ணியத்திருவடிபோற்றி.

எழில்கொளெண்கிரியாயிரைசெயேழ்கடலாயெண்ணருபுண்ணியவி [டமாய்
விழுமியநதியாயுளமுரைக்கெட்டாமேன்மையாகிபவியன்பொருளா
யழிவகன்றதுவாயொப்புயர்வற்றதாய்த்திகழ்தென்கயிலாயத்
துழுவலினுற்றமுத்தொழின்மூன்றுமூர்த்திகளுபாடிபோற்றி (௰௩)

இரணியகசிபுக்கிரணியகருப்பனென்னச்சென்றெண்ணிலாவரங்க
டரணியிற்றந்துகருவமுற்றிமையோர்தமைவருத்தியசெயறன்னுன்
முரணியைநரசிங்கமாயெதிர்ந்துமுற்பகற்கொன்றமூர்த்திகளொண்
சரணபங்கயங்கடமைமறவாதவரந்தரச்சந்ததம்போற்றி. (௰௪)

சண்டனைச்சரணத்துதைத்துமார்க்கண்டன்றனைப்புரந்தருள்பவா [போற்றி
பண்டிராவணன்பத்துத்தலையறுத்துப்பண்ணவர்க்காத்தவா [போற்றி
யண்டரையளவில்சராசரமனைத்துமாக்கியவையனேபோற்றி
துண்டனேன்சருவதோடமுந்தொலைக்கத்தோற்றுமுச்சோதியே
போற்றி. (௰௫)

என்றடிக்கடிதாழ்ந்தெழுவதும்வலம்வந்திடுவதுமிருவிழிகளினீர்
துன்றிடவேதச்சொற்களைக்கூறச்சொல்லியுந்துதிசெயநோக்கி

நன்றுநன்றிருடிநாயகமகிழ்ந்தேநவிலுதிவேண்டியவரங்க
ளின்றுநன்றீவேமெனமுனிமனையோடிறைஞ்சியின்னணமியம்பு
வரால். (௩௬)

தேவர்காள்சிறியேன்சிறியளாமெமக்குச்சிறுவர்கள்வடிவமாயி
[வணீர்
மேவலால்விழிகள்களிகொளமகிழ்வுவிரைவில்வீழ்ந்திறுமாந்த
பாவியேமந்தப்பாக்கியமகன்றிப்படியிலெப்படிச்சகித்திருப்போ
மீவதாய்த்தயையெம்பாலியையவாகிலிவணகலாதெழுந்திருந்து.

என்றுமெப்போதுந்தரிசனைகொடுத்தீடேற்றிடவேண்டுமீதன்றி
யொன்றுமித்தலத்துற்றும்மைப்பூசித்தோருளுற்றியபவமெலாமொ
[ழித்து
வென்றிபொன்னிலஞ்சற்புத்திரராயுளாதியவிபவமென்மேலு
நன்றுதந்திறுதிநாட்டினிலழியாமோக்கமுநண்ணுறநல்கி. (௩௮)

ஆயிரக்கோரெட்டாமான்றலத்துக்கரியமொருசதத்தோரெட்
டாயநற்றலத்துக்கித்தலமாசின்றுதியாயாகவிவ்வாறு
தூயநற்காசிக்கங்கையிலிங்குதுலங்கித்தோய்ந்தோர்கையாற்றெட்
[டோர்
மேயபல்பவமுந்தோடமும்விலகிமேன்மையைமேவிடவேண்டும்.

உடறிடமுறவும்பற்பலரோகமோடவுமெப்பரோண்முனிவர்
வடிவடைமனுடர்நாடொறுமுவந்துவந்துவந்தருச்சனைசெயவும்
புடவியினிடையென்பெயரிவாசிரமம்பொருந்துபொற்புறவரமதனைத்
தடையறவடியேற்கருடிர்சம்பரிதாதாவெனவவர்கள்சாற்றுவரால்.

எங்களிலொருவர்தமைக்குறித்தமரிருடிகளரக்கர்களெல்லா
மங்கியினடுவெட்டங்கியெண்ணறுநாளருந்தவம்புரிந்திடிலடைந்தாங்
கங்கவரறையும்வரமருடருவேமவ்வடவிவ்வயிற்செல்லா
திங்கதருளையெனுமுனதில்லாளீவரத்தின்பமெய்தினமால். (௪௧)

இத்தகைச்சிறப்புப்பெற்றிடுமுனக்குமேற்றசிரெய்துமுனிற்கு
பொத்தவருலகிலும்பரின்மற்றையுலகினிலொருவருமின்று
ளுத்தமக்குணத்துக்கணவனுமவன்றனுளப்படிநடக்குமொண்
[டொடியு
மெத்தலத்திருக்கப்படினுமத்தலமெம்பதத்திலுமேற்றமெய்துமே.

ஆதலானீவிரீருவருமகிழ்வுற்றமர்தருமழகினையே
பூதலமீதுபொலிபலதலத்துக்கேற்றமாம்பொற்புளதாகு
மீதலாலதிகமேதியாமீவேமிருடிகணாயகவெம்மைக்
காதலாற்கேட்டகாரணத்தாலங்காகுகவெனவவர்கழறி. (௪௩)

பாற்கடற்பரமபதத்தினிற்கயிலைப்பதவியிலயன்பதவியினின்
மேற்படுமிந்தவெற்பினில்யாங்கண்மேவுவேமூர்த்துவபாதத்
தேற்படுதவஞ்செய்தெமைச்சிறுவர்களாயிபற்றிடவினியதீர்த்தத்
[தைத்
தூற்றிடுதருப்பைவாடுதலற்றுத்துலங்கிடுமிச்சிகரத்தே. (௪௪)

தாயிலேந்தந்தைதானிலேமாகத்தானிதுநாளுநறையெங்கட்
காயினீரன்னையப்பனாய்நீவிராரணமொழியுமப்பாலாய்ப்
போயினுமென்னைபுகலுவமுமதுபுண்ணியங்கண்ணியம்புகழுஞ்
சேயநாளாதிசேடனாயிரவாய்ச்செப்பினுஞ்சேடமேயாமே. (௪௫)

கற்பினுக்கரசியாமநுசூயைக்காரிகைசதிர்மதிமுகம்பார்த்
தற்புடனரன்மாலயனுஞ்சொல்வார்களம்மையேயுன்பதிவிரதப்
பொற்பினைக்காண்பான்யாம்புரிதவறுபொறுத்தருள்பூவினில்வாணி
லெற்பயினாகிருக்கையினினக்கொப்பேந்திழையாரெவரின்றே.

சீவகாருணியச்செய்கையிற்கற்பிற்செப்புநாயகன்பணிவிடையி
லோவலாச்சொல்லிலதியர்வேட்டதுதவலிலுயரொழுக்கத்தி
லாவலாயாற்றுநல்லறச்செயலிலமாரிலறவரில்லவரிற்
பூவைமாரெவர்நினேரெனப்புகலப்புகுந்திடிற்றகுந்தவரிலையே.

வேறு.

அரியஞானிவேண்டுவதெலாமுடன்றாற்கரியருகாசத்தன்
சிரசுமீதுவைத்தேதிரிகுவனரன்றிருவடித்துகடன்மேற்
சொரியவேண்டுமென்றொருவறச்சுற்றுவன்றுலங்கயன்றுணைக்காலை
யுரியவென்றலைமீதுவைப்பாயெனவோதுவன்றினமென்றே. (௪௮)

வேதமோதிடுமாதலானுன்பதிமேவியவிடம்விட்டுப்
போதலென்பதெப்போதுமேயுன்னலேம்புண்ணியாமும்மைக்
காதலாற்றினங்கண்டுறைகுவந்திருக்கணவன்கேட்டனனெல்லா
மீதலாயினேமென்றரியாசனமினிதிருந்தனர்மாதோ. (௪௯)

தேவர்யாவருமனுமுச்சற்றம்பதிசென்றுடன்வந்திங்கே
யாவலாயமர்ந்தாரருந்தவரெலாமழகனமாயிடமென்றே
மேவலாயினாரெனிற்றிரிமூர்த்திகண்மேவியவெற்பின்சீர்
யாவர்தாமினைத்தெனப்பனப்படுமடலடைந்தவராவோரே. (௩௰)

௮ படலம் - ௯ க்கு திருவிருத்தம் ௬௧௮.

சுயவடிவடைபடல முற்றிற்று.

## ௰ - வது திருசங்குப்படலம்.

மாதவத்தர்காண்முற்பகலொருபுரவலன்று
னைந்துமுத்தமத்தோணிமாநதியினூர்முடித்
தீதுமுற்றியபுலையுருத்தீர்ந்துபொன்மான
மீதினூற்றுவிண்ணடைந்தனனெனவவர்விரிப்பார். (௧)

ஐயவன்னவன்யாரவன்பெயரெதங்கவனை
வெய்யவப்புலைமேவியதெவன்வியன்றோணித்
துய்யநன்னதிதோய்ந்ததெப்படியதுதொலைவுற்
றுய்யவந்ததுமோதெனச்சூதனேதுவனால். (௨)

பொருளினாலளகாபுரிபோன்றுபொற்புற்றுத்
தெருளினாற்சிறப்பெய்தியசெகதலத்தின்பாற்
சரயுமாநதிதமனியமதாணியினடுவட்
பொருவின்மாமணிபோன்றுளதயோத்தியாபுரியே. (௩)

பங்குல்வான்வயினைகிவாரிதியினீர்முகந்தெங்
கெங்குமேபொழிதருவதால்வளங்கண்மேலேறிப்
பொங்குமந்நகர்ப்பூவைதன்மங்கலப்பூண்போன்
றங்குளானடல்வீரருக்காணரியன்றன். (௪)

கடனுடைந்தெனக்கவுண்மதமொழுகெழிற்களிற்றுன்
விடைநெடுங்கொடிமேருவிற்கையவன்விமல
வடிவடைந்தவாகியபதவாரிசமணைந்து
குடியடைந்திமேன்மைமேவியவுளங்கொண்டோன். (௫)

தெள்ளிதாந்திருநீற்றொளிதிகழுநெற்றியினா
னொள்ளிதாகியகலையெலாமொருங்குணருளத்தான்
வெள்ளிதாங்குடைநீழலின்பேதினிமுழுதுங்
கொள்ளவேகுளிராக்கியவரசர்கள்கோமான். (௬)

மாறிலாக்கவிவாணர்கள்வறுமையாம்வெந்தீ
யாறமாநிதியாமழைபொழியுமங்கையான்
கூறுசூரியகுலத்தினிலுதித்தவன்பகைவர்ச்
சீறிநாடொறும்வெற்றிகொள்சிங்கவேறனான். (எ)

கலினமெய்துவாய்க்கடும்பரிகட்டியதேரான்
சிலையும்பற்பலபடைகளும்வடித்தசெங்கையா
னொலிகடற்படையுடையவன்வேதநூலுரையின்
மலிதழற்பலவாய்வகைமாமகஞ்செய்தான். (அ)

சரணடைந்தவர்தங்களைநாடொறுந்தாங்கு
மருணிறைந்தவனானினம்புலியினமன்புற்
றொருநறுந்துறைநீருணுமாணையையுடையான்
பொருவருந்திருவினிலளகேசனைப்போல்வான், (௯)

பூமடந்தையும்பொங்குளைச்சிங்கமீதேறு
மாமடந்தையும்வெண்ணிறவாரிசத்துறையு
நாமடந்தையுமேவியதிரிசங்கெனுமக்
கோமகன்கொடுங்கலிகடிந்துயர்புகழ்கொண்டோன். (௰)

இருபிறப்பினரேமுதனால்வருணத்தோ
ரொருவறத்தமக்குரியவாமொழுக்கினிலோங்கப்
பொருவில்சக்கரமெண்டிசையின்வரைபோக
வரைவரும்பறையரிந்தவனெனமகிழ்ந்திருந்தான். (௰௧)

அறந்தழைத்திடப்பவமெலாந்தேய்ந்தழிவடைய
மறம்படுங்களிற்றரசர்கடினந்திறைவழங்க
நிறைந்தபண்ணவர்தவமெனுநற்பயிர்நிமிரச்
சிறந்தமன்னவனரசுசெய்திருந்திடுதினத்தில் (௰௨)

அருந்ததிப்பெயர்பெற்றுயாழ்கெலாமனைமந்த
மருந்தைவண்மணமாற்றியவசிட்டனாமந்

திருந்துநற்றவத்தேசிகன் றன்முனரெய்தி
யிருந்தலத்திலுக்கிறையவனிறைஞ்சியீதிசைப்பான். (௧௩)

வேறு.

எந்தையுனதின்னருளினாலெவருமெய்தாச்
சுந்தவளமெய்தினனினித்தவறுதன்னி
யுந்துமறையோர்குரவவிவ்வுடலினோடு
மந்தமுறுசொர்க்கமடையாசைகொடுவந்தேன். (௧௪)

அன்னதுகையாகும்வகைசெய்யுமெழில்யாக
மென்னவதுசெய்யவருள்செய்தியெனவேந்த
மன்னன்முகநோக்கிமுனிவந்துநகைமுந்த
வன்னமறைமுற்றுமுணர்வானிதுசொல்வானால். (௧௫)

ஈசனுரைசெய்மறையிலின்றிறைவவென்முன்
பேசுமகமென்னதுணர்பெற்றியிலனென்று
வீசுசுடர்வம்மிசம்விளங்கவருவேந்தன்
றேசிகனிணைப்பதம்வணங்கியிவைசெப்பும். (௧௬)

ஐயவுனதுள்ளமறியாதவதுமுண்டோ
செய்யநினைவெய்தின்முடியாதசெயலில்லை
மையிறவமாட்சிமையினான்மகமுடித்திங்
குய்யவருளென்னவடிபோற்றியுரைசெய்ய. (௧௭)

மற்றுமுனிவன்னதைமறுத்தரசன்மாட்டுச்
சொற்றிடவணங்கியிமகத்தையறிதூய்தா
நற்றவர்தமைக்கொடுநடத்தவருளென்னப்
பெற்றுவிடையம்முனிபெறும்புதல்வர்பாற்போய். (௧௮)

அன்னவரடித்துணைபணிந்தரசனப்பாற்
றன்னுளநினைத்தவிடயந்தெரிதரத்தான்
சொன்னவுடன்முன்னமுனிசொன்னபடிசொல்ல
மன்னனவர்தந்தைமுன்வழங்கினவழங்க. (௧௯)

பத்தினொடுபத்துறழ்கொள்பண்ணவர்கள்கட்டி
தத்தவரசைப்புலையனும்வகைசபிக்கச்

சித்தமலமெய்தவுடறீபுனல்செறிந்த
தொத்ததுசுறுத்தெளிலொழிந்தொளியிழந்தே. (உ0)

இரவிவழிவந்துமகமெண்ணிலசெய்தெஞ்சா
விரதமுறைசெய்துமனுவிற்றிகிரியோச்சி
வருபுரவலன்புலையனுகவரவாஞ
லரனரியயன்செயலையாவரறிவாரே. (உக)

வேறு.

வானிறைமதியின்மாட்டுமறுவுவந்தெய்திற்றென்னத்
தேனிறைமதியல்வேந்தன்புலையருச்சேர்ந்தகாலைப்
பூநிறைகற்பிலாளைநாண்விட்டுப்போந்தாற்போலத்
தானிறைதேகத்தேசுதானகன்றோடிற்றன்றே. (உஉ)

வண்ணமாந்தேசுமாறிப்புலையுருவருதலோடு
மின்னலாய்வாய்நீரின்றியேற்றமாமறிவுநீங்கி
வண்ணிவாய்மெழுகுமேபாலவடிவடையுடலம்வாடித்
துன்னுமாகரைகாணுததுயரவாரிதியின்மூழ்கி. (உங)

நிழல்சுளிகடாமால்யானைநிருபனீடழகுவெந்தீ
விழிவழிவழியுநாகம்வெவ்விதுவெளவலோடு
மொழுகொளியொழியுமொப்பிலொளியெனவுடலஞ்சோர்ந்தங்
கழிவுறுமறிவனுகியகத்திவையிவையுள்வானுல். (உச)

சிற்றறசெருவுசேர்த்தித்திருத்திப்பின்னறமென்றேது
மற்றயில்பயிர்மீதோங்கவானையாம்வேலிகோலிப்
பற்றியபாவமென்னும்பலகளைபறித்துப்பாரை
வெற்றிநற்பொறைநீர்யாரேபாய்ச்சுவரென்றுவிம்மும். (உரு)

அளிமழைபொழிந்தில்லாமையாங்கலிவெம்மையாற்றித்
தெளிமனுநூலின்வாய்மையாரினிச்செய்வாரென்னுங்
களிகொளமுனிவரெல்லாங்கண்ணியதவங்கைகூடற்
குளமுளராகிக்காப்பாரெவரெனவுன்னிநையும். (உசா)

உரைப்பருமறையோராதியாயுளவருணநான்குந்
திரப்படுமொழுக்கிற்செல்லச்செய்பவரேவரென்னு

மரப்பெருமானற்பூசைபாகமத்தாற்றிஞற்றி
வரப்படுமன்பிற்போற்றுவாரினியாவரென்னும். (௨௭)

மொய்தழல்வேள்விதன்னலமரரைமகிழ்வின்மூழ்க்கி
யெய்தெழின்மதியந்தோறுமிரண்டொடோர்மழைமாறுமற்
பெய்திடச்செய்துசெல்வம்பெருகச்செய்வார்யாரென்னுஞ்
செய்யவைதிகசைவந்தாஞ்செழிக்கயார்செய்வாரென்னும்.

உறவினரெல்லாந்துன்பமுறுவரென்றிரங்குமொன்ற
ரறிதரினைசெய்வாரென்றகமிகவருந்துந்தாஞ
ரூறுநகர்மாக்கடுன்பத்துயங்குவரென்னவுன்னு
மறுகுறுநாவலோரைமனத்தினினைத்துமன்றே. (௨௯)

மன்னவனிவ்வாறெண்ணிவருந்தித்தன்மனையினெய்தி
யன்னதைச்சுற்றத்தாரோடனைவர்க்குமறியவோத
வன்னவர்வன்னிதுன்னுமழகியதளிரின்வாடி
யின்னலம்பரத்திலாழ்ந்தாராகியங்கிரங்கிஞரால். (௩௦)

வருந்துதன்சுற்றத்தாரைமந்திரிமாரைமன்னன்
றிருந்துறநோக்கிநீவிர்தீர்திர்துன்பென்றுதேற்றிப்
பருந்துசுற்றுறுவேற்கைக்கொள்பார்த்திவன்பையுண்மேன்
பொருந்துறவவர்களோடுமின்னணம்புகலுவாஞல். [மேற்

வெம்புலைவடிவமேவிவேலையாம்வேலிசூழு
மம்புவியரசுசெய்வதறனலவாதலாலே
யிம்பரொன்மையந்தஞனவெழிலரிச்சந்திரற்கே
பைம்பொனின்மகுடஞ்சூட்டப்படுமெனச்சூட்டியப்பால்.

பூதலமங்கைபுன்கண்போக்கிநல்லறநடாத்தி
யோதுமன்பதைகளெல்லாமுவப்புறவுயர்கோலோச்சு
காதலவென்னநீதிகட்டுரைத்திருத்திமன்னன்
மீதுறவிருக்கமேறுகானிடைமேவிஞஞல். (௩௩)

அடவியிலரசனேகவருந்ததியேயாமென்ன
நெடியகற்புடையபாதர்நேரிலாமைந்தர்நீதி
யடையெழிலமைச்சர்யாருமாவைவிட்டப்பாற்போன
மடவிளங்கன்றுபோலவாட்டமுற்றழுதுசோர்ந்தார். (௩௪)

சமர்மகளுள்ளஞ்சாலத்தளர்ந்தனடண்ணீராடை
யமர்மகளாகமெல்லாமயர்ந்தனளாத்தத்தேடு
நிமிர்மரைமலராளெஞ்சமஞ்சினணீள்வெண்டோடு
சமைமரைத்தவிசாடன்புசார்ந்துருத்தளித்தாண்மாதோ. (௩௫)

அடவியிலரசனைகவகழ்மதிலயோத்திமூதூர்
மடிவமைமலரின்மாலைவார்சிலைமதுகைவாகை
யடைபுகழிராமன்காணவாயடைதருமந்நாளின்
மிடைதுயர்மேவிற்றென்னவெந்துயருழந்ததன்றே. (௩௬)

துங்கமைக்கடற்கட்டோய்ந்தவமைச்சருந்தொன்மைசான்ற
தக்கநற்சுற்றத்தாருந்தாரெனுருவகையிற்சேற
மிக்கநலிகைவாய்மைமேவரிச்சந்திரன்று
னிக்குவலயத்தோரெல்லாமின்பமென்மேலுமெய்த. (௩௭)

சோலைமாமலரின்மாலைக்கோமகன்மௌலிசூடி
யாலின்வீழ்விழுதவ்வாலைத்தாங்குமாறறத்திறற்றிற்
சேரலைநோகவோச்சிக்குடைநிழற்கொள்ளமேலா
ஞாலமாறனுநின்பகண்ணநன்காண்டானன்றே. (௩௮)

அறவொருவடிவமாகியப்பொனின்மௌலிதாங்கிக்
குறைவுபீடமேறிக்கோடில்கோனடாத்திற்றென்ன
வறைகடலாடையைமாண்டினிதமர்ந்தானப்பாற்
றறவடைந்தடவிபோனதோன்றறன்செய்கைசொல்வாம்.

வேறு.

வெண்டுகிற்கொடிகொண்டமாநகர்விட்டுநீங்கியகொற்றவ
னண்டமெட்டியகுன்றுகானதியாறளாவியகல்லதர்
விண்டலத்தெழில்கொண்டபல்வளமேயதேயமெலாமகன்
றெண்டிரைப்புனன்மண்டுவானதியோவியப்புறமுற்றனன். (௪௦)

எழினதிக்கரையேறுகாவலனெங்கணும்புகைதங்குறத்
தழுவுதீயழலுலநங்கைதனுடல்பிளந்துநுழைந்துகீழ்
வழுவிஞுகர்களாகவெந்துகரிந்துவாய்வறளச்சுடு
மொழிவில்வெம்பால்வேனில்வன்சுரமிந்தவொண்வனமெய்தினான்.

தலமெலாந்தனியானசத்திரசீழறந்ததராபதி
யுலைவிலாதுறைவேனில்வெஞ்சுரவெம்மைதன்னுடலஞ்சுட
விலகுகாலிணைநோவநாவயமின்றியேமிகவெய்க்கினு
நிலையிலாவுடலுலகவாழ்வினைநெஞ்சினுன்னிலனிருபனே. (௪௨)

என்றுநெஞ்சையும்வெந்திடப்புரிவிந்தவெல்லையிகந்துசீ
ரன்றுமத்திமநாடகன்றகணிப்புறத்தலர்வனசமேல்
வெண்ணிறக்குருகுறையிலாடமகன்றுகோசலவேந்தர்கோ
னெண்ணில்வண்டிசைசோலைமாளவதேயநீங்கினனினிதே.

குன்றுறுவளமென்றுமேனிறைகுச்சரப்பெயர்நாடுதீர்ந்
தென்றுமேயரியிணையிலாவெறுழெய்துகையயிலேந்தரு
னன்றுவீறுறுசுருநடப்பெயர்நாடுநீங்குபுநளிர்வயற்
கென்றுமேபசிபோக்கிடுந்தெலுங்கென்னுநாடடையெய்தினான்.

சீர்செறிந்ததெலுங்கநாடுகடந்துசெங்கதிராமென
வேர்செறிந்திடுமாரமாலையிலங்குமார்பினனின்சுவை
யார்தருஞ்சுரமுதினும்பெரிதானசெந்தமிழ்ப்புலமெலாம்
பேர்செறிந்ததெனாடுகண்டகன்றன்பிறங்கியநிருபனே. (௪௫)

நல்லபுண்ணியநாடுகட்படுநல்லபுண்ணியவன்மையா
லொல்லைநற்றுறையொருசகத்திரத்தும்பரோண்ணரியலையின்மே
லல்லைவல்லையகற்றுநற்பிறையடைசடைப்பரனடியரைப்
புல்லுமல்லலறுத்தமர்ந்தவாரணவனம்புகுந்தனனரோ. (௪௬)

மறைவனத்தினிதுறைபிறைச்சடைவள்ளல்வினுவதாய்மது
நிறைமரைப்புதுமலரடித்துணைநெஞ்சிருத்தியநிருபர்கோ
னறவருக்குமொழுகுநற்றவமாற்றிநாடொறுமப்புறந்
துறவரிற்பெரிதெய்துகோசிகமுனிவன்வாழ்வனந்துன்னினான்.

சென்றுகோசிகமுனிவனம்புயத்திருவடித்துணைதாழ்ந்துமு
னின்றுகூப்பியகைபனுய்ப்பெயர்நேர்ந்ததன்மையுநேர்தெரித்
தின்றுநீயெனையெவ்விதத்துமிரட்சியென்றிரந்திசைசெய
நன்றுதேசிகன்மைந்தரானவில்சாபநாமகல்விப்பமால். (௪௮)

அஞ்சலென்றருள்கூர்ந்தருந்தவனரசனுநநோக்கியே
விஞ்சுபுண்ணியதீர்த்தமின்னிலமேவுமெண்ணிலவன்னதி

னெஞ்சினண்ணியவன்பினுடிடினீங்குநீங்கியபின்னர்யா
மெஞ்சில்விண்ணவருலகிவ்வுடலுடனிருத்துவனினிதென. ௪௯

என்றுரைத்தெழிலெய்துபுண்ணியதீர்த்தயாத்திரைக்கேகென
வென்றிமெய்த்தவனருளமன்னவன்விடையடைந்தவணிட்டுநீத்
தொன்றுமுத்தமதீர்த்தமெத்தனையுங்கண்டதிறலவிறைட்
சென்றுநன்றதினுடியும்புலைவடிவுதீர்கிலனாகியே. (௫௰)

துங்கபத்திரிசோணைசேதுவின்றுறைதுலங்கியநருமதா
சங்கைகௌதமைவாணிகாவிரிகண்ணியப்பிரயாகையிற்
பொங்குபத்தியொடாடியும்புலையுருவுபோகிலவாயுளந்
தங்குதுன்பொடுகோசிகன்றிருத்தாளில்வீழ்ந்துளசாற்றவே. (௫௧)

அன்னமாமுனிமின்னனன்மின்சடையானருட்பதமனதாரக
துன்னியோகினிலொருமுகூர்த்தமுறைந்தொடர்[illegible]ர்திருபனை
வன்னமேவுதென்மேற்கின்மூவருமைகுமயபலை[illegible]ன்றுன
தின்னறீரதனருகிலோர்நதிதோணியாம்பெயரையுமால். (௫௨)

வேறு.

செப்புமத்தீர்த்தத்தாடிற்புலையுருதீருமென்று
வொப்பினற்றவனங்கோதவுயர்பரவலர்சங்கோமா
னெப்புவனமுமெப்போதுமேத்துமும்மூர்த்திசேருந்
திப்பியத்திகிரிநோக்கிச்சென்றதனெல்லைசேர்ந்து. (௫௩)

பொருவருமூன்றுமூர்த்திப்பொருப்பினைத்தொழுதுபோற்றி
யருகுறுதோணிப்பேர்சேரழகமையாற்றைக்கண்ணுற்
றெரிதரவிதியினந்தத்தீர்த்தத்தின்மூழ்கலோடும்
பரிசனவேதிபட்டவிருட்பெனப்புலைபாறிற்றே. (௫௪)

புலைநிறமொருவியந்தப்புரவலன்பொன்னின்மேலா
நலநிறமதனையோர்கான்முழ்குமுனண்ணினனென்
மலைமதமருப்புப்பற்பன்மணிசுவணத்தைவாரித்
தலமுறுதோணித்தீர்த்தப்பெருமையார்சாற்றவல்லார். (௫௫)

பொன்னின்மேற்பொலிநற்றேசுபொருந்தியதிரிசங்கென்பா
னன்னமேல்விடைமேற்பட்சியரசுமேலேறுமாற்றன்
மன்னுவேதாமுக்கண்ணன்மாறிருவடிகள்போற்றி
யன்னர்சீரைந்தெட்டாகுமக்கரமடைவினோதி (௫௬)

நித்தியநியமமெந்நிகொறுநதிசைப்போற்றி
யத்தமந்தலைமேற்கூப்பியமராதியர்நாடோறு
முத்தமப்பூசையாற்றுமுயர்மணிக்கோயிலுட்போய்
மத்தமாவுரித்தோன்சாத்தேதான்மலரயனமர்வகண்டான். (௫௭)

கண்டகன்குளிர்ந்தானுள்ளங்களித்தனன்வினைகளெல்லாம்
விண்டனன்புலனொன்றாகமேவினனின்பமேவி
யுண்டனனுணரான்செய்கையொழிந்தனனுடன்முற்றுங்
கொண்டனன்மொழிகளெல்லாங்குழறுவதாயினானல். (௫௮)

ஆழ்ந்தனனுவகையாழியழலடைமெழுகினொன்றான்
சூழ்ந்தனன்றிருமலைத்தன்றன்பக்கத்தொலைவிலாவளங்களெய்தி
வாழ்ந்தனன்றனியனார்தமைவிழியருவதானான்
றாழ்ந்தினிதெழுந்துதேகமுழுவதுந்தழைப்பதானான். (௫௯)

இத்தகைவழிபாடாற்றியீறுமாதியுமெய்தாக
வத்தனையரியாய்வேதனுபவனுருவமாகுஞ்
சுத்தமாஞ்சோதிபாதமேதோத்திரம்வேதச்சொல்லான்
மெத்துவான்புகழ்களெல்லாமிவ்வகைவிளம்புவானால். (௬௰)

ஆரணப்பொருளேபோற்றியதுவிதென்றறியாய்போற்றி
வாரணத்துரியாய்போற்றிமலைமகண்மருவுறைபோற்றி
பூரணச்சத்துச்சித்தாநந்தமாய்ப்பொலிவாய்போற்றி
காரணஞ்சகத்துக்கெல்லாமானமுக்கண்ணேபோற்றி. (௬௧)

ஆழியிலமர்வாய்போற்றியரவணைதுயில்வாய்போற்றி
யாழியங்கையாய்போற்றியலர்மகளன்பாபோற்றி
வேழமுன்காத்தாய்போற்றிமேதினியளந்தாய்போற்றி
கோழியங்கொடிகைக்கொண்டகுமரன்மாதுலனேபோற்றி.

படிமுதற்படைத்தாய்போற்றிபதுமவாசனத்தாய்போற்றி
வடிவமைகலைமானுள்ளமகிழ்நாயகனேபோற்றி
திடமிகுவதநநான்குதிகழ்தருதேவாபோற்றி
கடிகமழ்கமலநேரொண்கண்ணனேபோற்றிபோற்றி. (௬௨)

என்றெழின்மூன்றுமூர்த்தியிணைத்திருவடிக்கட்டாழ்ந்து
பின்றிரிசங்குகோசிகப்பெருந்தவன்முனெய்தி

யுன்றிருவருளாற்சாபமொழிந்திவனுய்ந்தனென்று
நன்றவனடியிற்போற்றிநரபதிநவின்றுநின்றான். (௬௪)

சொற்றவன் கூறக்கேட்டக்கோசிகனுவகைமீக்கூர்ந்
தற்றமிலரன்மால்வேதனகமகிழ்ந்தமர்வதான
பொற்றிரிமூர்த்திவெற்புப்புகுந்துமூவரையும்போற்றி
வெற்றிவேலரசவெச்சமொன்றிவண்விளைக்கவேண்டும். (௬௫)

அன்னதற்காகவேண்டுமாசறுபொருள்களெல்லாந்
துன்னிடச்செய்தியென்றுச்சொற்றலுந்திரிசங்கென்பா
னுன்னுநாளொருவன்றுமுன்னேருங்கவண்கொடுவந்துய்ப்பத்
தன்னிகர்தவன்வேதாவின்றனைமுனர்ச்சார்ந்துசொல்வான்.

ஒருமகன்றிரிசங்கென்பானுடலொடும்பரேகப்
புரிகுவனமரரோடுபோந்தவிபுசிப்பதான
திருவருணீசெய்யென்னத்தீமுகத்தன்றிநேரே
வருவதுவழக்கமன்றலன்றியுமழைத்தல்கேட்டி. (௬௭)

உலகினிலொருவரேனுமோதிடுமிந்நாண்மட்டு
மலமலியுடலத்தோடும்வானுலகடைந்தாரில்லை
யிலகெழிற்றவத்தோயாதலால்வரலியல்பன்றென்றுச்
சொலநலதென்றுமூவர்துலங்குயர்திகிரிபேசி. (௬௮)

மதமழைபொழிமால்யானைமன்னவன்மகஞ்செய்தற்கங்
கிதமுறுபொருள்களெல்லாமிடமறவெங்குமுய்ப்ப
விதிவழிகௌசிகப்பேர்மெய்த்தவன்வேள்விசெய்ய
வதிலவியருந்தற்காகவயனடையாதாக. (௬௯)

மனமிகநாணித்தோணியாநதிநடுவணெய்தி
யனகனன்னீருணின்றுங்கரன்றிருமாலைநோக்கி
யினியமாதவஞ்செய்போதவ்விருவருமெதிரினெய்த
மனமிகமகிழ்ந்தன்னோர்பூமலரடிவணங்கிப்போற்ற. (௭௰)

செவ்விதுசிவனுமாலுந்திருவுளத்துவகைசேர்ந்தவ்
வவ்வியமவித்தமேலாமுனிவனையன்பானோக்கி
யெவ்வகைவரநீவேண்டுமென்னினுமினிதினீவே
மிவ்வுழியென்னவாக்கற்றொழிலளித்தருண்மினென்ன. (௭௧)

பரன்பரந்தாமகூபாதபங்கயம்பணிந்துகூறவ்
வரம்பெறுமென்னைநல்கிமறையமாதவன்றனுக்கற்
றிரம்பெறலாகியொன்பானிருந்தியகோள்களுள்க
ளரம்பையர்மகவானதியமரரையாக்கினானால். (எஉ)

இங்கிவன்றிருட்டிசெய்யுமியல்பெலாமினிதுநோக்கு
பங்குல்வாகனனேயாதிவானவரெல்லாமொன்றாய்ப்
பங்கயன்பால்வந்தோதப்பதைபதைத்தவரோடெய்தி
யங்கவன்றனையனேகமாகவேவண்டினவனாகி. (எங)

முனிமனமுனிவைமாற்றிமுனிமனன்முகத்தைநோக்கி
யனகநற்றிரையார்தோணியாற்றிறாணத்தாருட்டித்
தனிபரனரிவைப்போற்றித்தகைமிகுவிமானத்தேற்றி
வனமலிகனகநாட்டின்வாசஞ்செய்திடவைத்தானால். (எச)

முத்தலைக்கையால்வாரியிருகரைமூசவீசி
வைத்திடுமேகாணியென்னும்பாநதிமாபிறைடி
மூத்தலைச்சூலக்கையான்முகுந்தனல்லருளைப்பெற்றங்
கத்தநற்றலத்தில்வாசமாயினன்றிரிசங்கம்மா. (எரு)

கோசிகனமேருவிற்கைக்கொண்டவன்கொண்டல்வண்ணன்
றேசுறுகமலமேலோன்றிருவடியினமும்போற்றி
யாசையிலனகமானவருந்தவம்புரிந்தன்பாக
மாசகன்மூன்றுமூர்த்திமலைநிலைவைகினானால். (எசா)

வலமிகுதிரிசங்குப்பேர்மன்னவன்சுவர்க்கத்தேறு
மிலகியகதையைத்தங்களிருசெவியெய்தக்கேட்டோ
ரலகருசாபபாதியாம்வினையாவுநீங்கிச்
சொலவரிதாயதூயசுவர்க்கத்திற்றுலங்குவாரால். (எஎ)

ஆ படலம் - ௰ க்கு திருவிருத்தம் சூகூஅ.

திரிசங்குப்படல முற்றிற்று.

## ௰க - வது கோகருணப்படலம்.

தருமமேசாற்றுந்தாலுறுமறவீர்தக்கதென்மேற்றிசைதன்னிற்
பொருவிலாமூன்றுமூர்த்திகளுறையும்பொருட்டடைந்தவரடிபோ
[ற்றி

வொருமையாசன்பாற்பூசனையாற்றினமூனாசகடைதாராரகி
மருவுலாமைமந்துதருநிறையுலகின்மாதரோடமருவர்மகிழ்ந்தே. (௧)

பன்னினுநாவானினைக்கினுமுளத்தாற்பார்க்கினும்விழிகளாலொரு
[கான்

முன்னைபபவங்களொருசதகோடிமுழுவதுமொழிதருமுறையா
லன்னவானததிருவடிபோற்றியரனிசியருச்சனையாற்றின்
முன்னமுமுமையுங்கடந்தசின்மயமாமுதல்வர்களுயர்பதம்பெறுவார்.

செப்புமாலயத்திற்சிவநிசியதனிற்றிருந்தவைவந்தெட்டொழுக்கேதாதி
லொப்பிலுஅல்வல்லமறையவர்க்கோறனுற்றவெம்பவமலாமொருங்
வெப்புலாந்தீவீழ்பஞ்சினில்வீயுமேலைநாளின்வியன்றலத்திற் [கே
றப்பில்கோகருணரென்பவரடைந்ததன்மையைச்சாற்றுவாங்கேட்டிர்

வேறு.

அம்மெளனவடிவமாகியமுதினற்சுவைவாய்ந்தென்று
மைமலிகண்டன்போலமகாபலமெல்லாமாய்ந்துப்
பைமலிபாந்தடாங்கும்பாாமகண்மார்பினீலச்
செம்மணிமதாணிபோலத்திகழுங்காளிந்திப்பாங்கர். (௪)

அரனுடைத்தோழன்வாழுமளகையுமமரர்கோமா
னிருந்தயமகிழ்ந்துவைகுமேமமாநகருமேபோர்சேர்
திருவுறைமார்பனமேவுஞ்செல்வநன்னகருமொன்றா
யுருவுகொண்டென்னத்தோற்றமுறுவடமதுரைதன்னில். (௫)

தருமநற்கேள்விசான்றமறையவரிருவர்சாலத்
தெரிதருநாமமோகோகருணர்கள்செயலிற்சொல்லிற்
பெரியவர்வஞ்சமில்லார்பிறங்கியசுற்றத்தோடு
மெரிமகம்விரதமோம்பியிருந்தனரிருக்குநாளில். (௬)

வேறு.

நடுவன்மற்றவர்தமிலொருவனைக்கொடுநண்ணுதிரெனவேவப்
படுவன்றூதர்போயவனைவிட்டப்பெயர்படைத்திடுமயலோனைக்
கடிதிற்பற்றுபுகொண்டுவந்தந்தகன்கண்முன்றுய்த்தார்கள்
படியில்வென்றவருழினைக்கேட்டிடிற்பார்த்திடிலெவரின்றே. (௭)

அன்னவன்றனைத்தூதுவர்கொண்டுவந்தந்தகன்முனருய்ப்ப
வென்னையின்னவனன்றுவிட்டவன்றனையீதிரின்னேயென்னப்

பன்னவந்தணனந்தகன் றிருவடிபணிந்தெழுந்தெதிரேத்தி
யின்னவன்னவனெழின் முகநோக்கிநின் றினிதுறவுரைசெய்வான்.

ஐயமுற்புரியருந்தவத்துன் முனையடைந்தனன் மிடியென்னும்
வெய்யவம்பரம்வீழ்ந்தலைந்தனனினிமேவிலனவனென்னச்
செய்யநன்னிதிக்குவையளித்தினிதருள்செய்தினிச்செல்கென்னப்
பொய்யிலந்தணனந்தகன் றிருவடிபோற்றிப்பின்புகல்வானல். (௯)

திருநிறைந்துயர்தென் றிசைமன்னவவிவண்செறிந்தனவாகு
நிரயமெத்தனைநிகழ்த்தெனவுரைத்தலுநேரினிவைகண்டு
வரவரந்தருகென்னலுமருள்செயமறையவன்றனோக்கித்
தெரிவுறுத்திடத்தூதர்கணரகினிற்சிற்சிலகண்டானல்

வேறு.

செய்நன்றிகொன்றுநின்றுகுரவர்பாற்செயாதசெய்து
கைவலிகரவடத்தாற்பிறர்பொருள்கவர்ந்ததீங்கால்
வெய்யரௌரவத்திற்றீயின் மிகக்கொதிமேவுநெய்யிற்
செய்யயத்தாழிவீழ்ந்துதிகைப்பவர்சிலரைக்கண்டான். (௰௧)

அறமிதுபாவமென்றுதயலவர்மனையார்மென்றோ
ளுறவிழைந்துற்றுப்பார்த்தபாவத்தாலொப்பில்வன்னி
தெறவெரியிருப்புமூக்குக்காக்கைகள்சேர்ந்துகொத்தப்
பறிபடுகண்ணராகித்தமத்திடைப்பதைப்பக்கண்டான். (௰௨)

அயன்மனையாகந்தோய்ந்ததாலடைகொடியபாவத்
தியையளன்மயமாய்த்தோன்றுந்துர்ச்சகநரகத்தெய்திப்
பயமுறவெரிந்தசெப்புப்பாவையைத்தழுவத்தூதர்
செயவளவறுதுன்புற்றுதிகைத்தழுவாரைக்கண்டான். (௰௩)

அரனையைந்தெழுத்தைமாலையரியவெட்டெழுத்தைநீதி
தெரிபுராணத்தைநான்காந்திப்பியவேதந்தனைப்
பெரிதுதூடணைசெய்பாவத்தாற்பிரமுகமென்றோது
நரகினுவரிபட்டாகநடுங்குவார்பலரைக்கண்டான். (௰௪)

குற்றஞ்சற்றேனுஞ்செய்யார்நம்பிக்கைதன்பாற்கொண்டார்க்
குற்றநற்றொழிற்குக்கேட்டையுஞற்றியபாவந்தன்னாற்

சொற்றருநிகும்பத்தின்பாற்சுடுமணற்கிடந்துதுள்ளி
யெற்றியவயிற்றராகியிரைந்தழுவாரைக்கண்டான். (௧௫)

தனதுயிர்த்தோழன்றன்னைவஞ்சித்தபாவந்தன்னாற்
கனலிநாரகப்பாற்றள்ளிக்கதந்துவெங்காலதூதர்
மனதிரங்காமல்வாளாலறுத்தபுண்வாய்கடோறுந்
துனவெரிபொடிகடூற்றத்துயருறுவாரைக்கண்டான். (௧௬)

கோதுறுசொற்சொரீங்காற்கொடியவீவற்சத்தின்பால்
வேதனையுழக்கத்தள்ளவீழ்ந்தந்தமலத்துளாழ்ந்து
மீதுறுபசியால்வெந்துவெந்தந்தமலத்தைத்தின்று
போதநாட்கிடந்துமேன்மேற்புலம்புறுவாரைக்கண்டான்.

ஆழிவாயடைந்தவாலமமுதமாயயின்றதேவர்
வாழுமேனுளிற்செய்தோன்மாலயன்பூசைசெய்யாப்
பீழையாற்கிருமிபோசனப்பெருநிரயத்தெய்தித்
தாழலாப்பசியாலுண்டுதானழுவாரைக்கண்டான். (௧௮)

அருமையாந்தருமம்பாவமமலமாங்கடவுளேதெ
னுரையினூறுபாவத்தாலுருப்பசாண்மலியென்றோது
நரகின்முண்முருக்கிலேறிவீழ்ந்துடல்கிழியநைந்து
காசராணங்கடேகங்கப்பிப்பார்பலரைக்கண்டான். (௧௯)

விலங்கினங்கலங்கநாயைவிட்டதைவீட்டியுண்ட
பலம்படுபாவந்தன்னாற்பகர்தருபிராணரோதத்
தலம்படவனேகநாய்களவயவமழுந்தக்கௌவப்
புலம்படைவார்களாகிப்புரளுவார்பலரைக்கண்டான். (௨௰)

சுற்றநன்மனைவிமைந்தர்தோழனம்பினர்தாய்தந்தை
யற்றமிலரன்மாறுண்டரதிதியர்பசியானோவத்
துற்றியபாவந்தன்னாற்றுயர்தூமுதுர்க்கந்தத்துட்
பற்றுபல்பாந்தள்வாயிற்படர்படுபலரைக்கண்டான். (௨௧)

தருமநன்னெறியினின்றுதப்புவெம்பாவந்தன்னா
லெரிதருநெருப்புவெள்ளமெய்துவைதரணியாற்றில்
வருசுழியிடையிற்பட்டுவல்லழலெயிற்றுப்பேழ்வாய்
வரியுடற்காரவின்வாயின்மறுகுறுவாரைக்கண்டான். (௨௨)

தலையிற்றண்மதியைச்சூடுஞ்சம்புமுன்சாற்றுநூலி
னிலையினின்றவாராகப்பவநெறிசெல்பாவத்தா
லலகைமைதருவதாகியழலொழுகமேகாககூர்வாண்
மலியிலேவனைத்துவீர்ப்பமயங்குவார்பலரைக்கண்டான். (உ௩)

அந்தணரீசன்வாசத்தாலயப்பொருளைத்தங்கை
வந்திடச்செய்பாவத்தால்வல்லிருப்புருகக்காய்ந்து
சந்தசநரகத்தின்கட்டளவிழுந்தழுப்பவீக்க
ணொந்திடக்கடிப்பவாடிநோயுறுவாரைக்கண்டான். (உ௪)

அரியபரன்றொண்டர்கல்வியாளர்பாலழன்றுகோபம்
புரிபெரும்பாவந்தன்னாற்பேரம்வழிசிறுகியாழ்ந்து
வெருவருமெலிமூஞ்சூறுவெவ்வியகருந்தேட்செந்தேட்
பெரிதுறையந்தகூபப்பிழைமேசேர்வோரைக்கண்டான். (உ௫)

இந்துடனிரவிகூடுமினியநாளயலிலூணல்
வந்திடுபாவத்தாற்றூர்க்கடமெனுநிரயமன்னி
நொந்திடவிருப்புத்தூண்டட்பறவைகளேக்கங்கொத்தச்
சந்ததநைந்துதுக்கத்தாலழுவாரைக்கண்டான். (உ௬)

மானம்போயுடலமெல்லாமாசடைந்தொழுக்கமாறி
யீனமாமாதர்தங்களிணைமுலைதோய்பாவத்தா
லூனுஞ்சோரியுஞ்சீழுஞ்சேர்ந்துறநிறைபயங்கரத்தின்
மேனிலையாமல்வீழ்ந்துவிம்முவார்பலரைக்கண்டான். (உ௭)

ஆவினம்வேனிலால்வெந்தயர்ந்தவாவோடுமேகி
வாவிநண்ணீருண்காலைவிலக்கலால்வருபாவத்தால்
மேவுகண்டகக்கண்வீழ்ந்துவெவ்வழற்கிருமிமொய்த்துத்
தாவினவரிப்பச்சோர்ந்துதயங்குவார்பலரைக்கண்டான். (உ௮)

கல்விவல்லவாற்சொல்லுங்கண்ணியக்கவிகள்கேட்டங்
கொல்லையில்வழிபாடாற்றியுடனுடனுதவாத்தீங்கா
லெல்லையிறுந்துபிப்பேரெய்தியநரகில்வீழ்ந்து
பல்லயக்கம்பிகாதிற்பாய்படுபலரைக்கண்டான். (உ௯)

ஒள்ளியவேதமாதியோதியவிதியோவாது
தெள்ளியசிராத்தமாதிசெய்திடாத்தீமையாலே

விள்ளுபுன்னரகில்வீழ்ந்துவெயிலவன்வெயின்மேற்றூவ
வுள்ளழறகிப்பவெப்பியுயங்குவார்பலரைக்கண்டான். (௩௰)

நல்வொம்விரதமுன்னேநடத்திவிட்டிட்டபாவத்
தொல்லைபோநிசிதசப்பேரெய்தியநரகில்வீழ்ந்து
வல்லவாளால்வெட்டுண்டுவன்றண்டத்தானைபொதச்சப்பட்
டல்லலாம்பசியால்வாடியழுபவர்பலரைக்கண்டான். (௩௧)

மாதர்கள்பாலராநான்மறையவர்தம்மைக்கொன்ற
கோதுகொள்பாவந்தன்னாலேதோமுகநரகங்கூடி
வேதழலிடைவிடாதுவிடுசுடர்வதநமேவ
வோதுறுதலைகீழாகவுழல்பவர்பலரைக்கண்டான். (௩௨)

நடுநிலைகடந்துமிக்கைதநவின்றுபொய்ச்சாட்சிசொன்ன
வடுவினாற்பீடணைப்பேர்மாநிரயத்திலாழ்ந்து
கடியகீடம்பேனீகாரெறும்பெலாங்கறிப்பவாடி
யுடனடுநடுங்கவாவியொடுங்குவார்பலரைக்கண்டான். (௩௩)

சலசரந்துடிப்பத்தூண்டிறனைக்கொடுபிடித்தபாவத்
திலகுறவெரியிற்காய்வாய்வளையுமுள்ளிருப்பினுமேல
பொலிதருமிடற்றிற்கோத்துத்தூக்கிமேற்போடத்தூத
ரலகறவடிப்பவ்வாய்விட்டழுபவர்பலரைக்கண்டான். (௩௪)

கணிகையர்கலவியாற்றிக்காதலிகலவியாற்று
துணர்வுறுமூத்தோர்சொற்றப்புற்றிரக்கம்போய்க்கள்ளுண்
டெணவருபொறைபோய்ப்பாவத்தெரியுறுசெக்கிற்கால்வன்
கணரிடைவிடாமலாட்டக்கலங்குவார்பலரைக்கண்டான். (௩௫)

உயர்பெருங்கடவுடன்மையோர்ந்தமேலோர்கீழ்வைகப்
பயமறத்தவிசினேறியிருந்திடப்பட்டபாவச்
செயலினாற்காலதூதர்செந்தழற்பாறைசேர்ப்ப
வயர்வுவந்துடலம்வெந்தங்கழுபவர்பலரைக்கண்டான். (௩௬)

ஈசுரன்றிருமாலன்பரெழிற்காக்கலத்திலெண்ணு
தாசுறுகற்சோறிட்டவதிகமாம்பாவந்தன்னாற்
றீசரியென்னவெந்தசிறுமணல்வாரிவாரிக்
கூசவாய்கொட்டநுங்கிக்குலைபவர்பலரைக்கண்டான். (௩௭)

கண்மலர்க்கண்ணிருட்டிக்கடிமணமாரபிற்கொண்ட
கொண்கனைவிட்டுக்கற்புக்கோடியகொடுமைதன்னாற்
பெண்குறியிடத்துக்காலதூதர்போழற்குந்தத்தைப்
புண்படச்செலுத்தவாடிப்புலம்புவார்பலரைக்கண்டான். (௩௮)

இப்படிப்போலப்பல்வேறெண்ணிலாப்பவஞ்செய்தோரை
வெப்படைநரகில்வீழ்த்தவெந்தவரழுதுவாடிச்
செப்பருந்துயரஞ்சேருஞ்செயலெலாந்தெரிந்தோனாகி
யப்புறஞ்சண்டன்பால்வந்தடிபணிந்தறைகுவானால். (௩௯)

வேறு.

சிந்தைவெந்துயர்செறிதரத்தென்றிசைத்தேவா
விந்தவந்தமினரகமாங்கடற்கரையேறு
மந்தநற்செயலின்மைதென்றறிதரவறைவா
யெந்தனுக்கெனவினியநூனுணரறனிசைப்பான். (௪௰)

சங்கரன்றிருமாலிவர்தாட்டுணைதாழ்வோர்
துங்கமெய்தியபூசனைசெய்திடுந்தூயோ
ரிங்குதங்கியநரகிடையென்றுமேபுகாரென்
றங்கமாரணமெல்லவுஞ்சொல்லுமெய்யாமால். (௪௧)

ஈசன்கேசவன்பூசனையியற்றினான்றோ
தேசுசேர்தருதேவர்களாதலாற்றினமு
மாசையாலவர்பூசனையாற்றினரடையா
வேசிலாப்பொருளெவ்வுலகத்தினுமிலையால். (௪௨)

அலகில்கேள்விசேரத்திரியகத்தியன்வசிட்ட
னிலகுகோதமனாதியவிருடிகளெல்லா
மலர்கொள்சேவடியருச்சனையாற்றலாலவா
பொலியுமேன்மையிப்பூவுலகத்தினிற்பெற்றார். (௪௩)

பாலர்நற்பசுப்பாவையர்மறையவர்பதைப்பச்
சாலக்கொல்பவமுழுவதும்வெவ்வியதழலின்
பாலகப்படுபஞ்செனப்பொடிபடும்பரமன்
ஞாலமுண்டவனல்லருச்சனைசெயுநலத்தால். (௪௪)

நடுவினீங்கியுநன்றியைத்தின்றுநல்லறத்தை
விடுவதாகியுங்களையுநூலையுமிசைந்து
மிடைவிடாதுபொய்பேசியீன்றோருரையிகந்து
மிடைமகாபவமெல்லவுநாடொறும்விளைத்தும். (௪௫)

வந்தமாபவமுழுவதும்வான்மணிமுன்ன
ருந்துபேரிருட்போலவங்கொல்லைபோயொழியு
மிந்துசேகரனிருடிகேசன்றனையென்றுஞ்
சந்தயாயருச்சித்தவர்தாட்டுணைதாழில். (௪௬)

எழிலருச்சனையாலிரியாப்பவமில்லை
யெழிலருச்சனையாலடையாப்பதமில்லை
யெழிலருச்சனையினில்வாராச்சத்தியுமில்லை
யெழிலருச்சனைசெயினரகெய்துவதில்லை. (௪௭)

வேறு.

அளகையாளியீசானனிந்திரனனலறையான்
வளமுலாவியநிருதிகால்வருணனெண்பவர்க
டளவொணாவரசடைந்ததுசம்பரிதங்க
டளமுலாவியதாளருச்சனைப்பலன்றானே. (௪௮)

வெற்பெனும்புயத்திராவணன்விருத்திரனிவரை
முற்புரிந்தவெங்கொலையினான்மூடுமாபாவ
மெற்பணிந்தவன்பூசையாலிரிந்துவாசவன்மால்
பொற்படைந்ததுசிறிதுநீயோர்கிலைபோலும். (௪௯)

வேதநூல்விதிவேள்விசெய்வேதியர்தம்மிற்
றாதையைக்கொலைசெய்தவன்சம்புபூசையினா
லேதமற்றுநீடழிதராப்பதவியிலேறு
காதைகேட்டிலையோபலநூலெலாங்கற்றோய். (௫௰)

கொண்டல்வண்ணனற்கோகநகக்குளிரடிக்குத்
தொண்டுகொண்டவன்றூயவாராதனைப்பலத்தா
ல்ண்டுபாவம்விண்டழிவுறப்பதவியைப்படைத்த
வெண்டராக்கதைகளையிதுகாறுங்கேட்டிலையோ. (௫௧)

மாதுபாதியன்மாணடிப்பூசனைசெய்த
வேதமோதுவாய்மைநக்ஞன்மேவியான்பெற்ற

கோதிலாவரசிழந்ததோர்கொற்றநற்காதை
யீதுபோதுநின்றிருசெவியெய்திலையேயோ. (௫௨)

அரியருச்சனையாற்றுவோரவனடிதொழுவோர்க்
குரியருச்சரிப்போருமீங்கடையுறுமென்னில்
வெருவரச்செயுமெம்பவம்வீட்டுமர்ச்சனைசெய்
பெரியரிச்சுகநராகுறுமென்னவேன்பேசல். (௫௩)

பசுவர்ச்சனைபண்ணுவோர்பண்ணுவோர்க்கடியா
ருகளவங்கிரிதொழுபவர்நினைப்பவருறைவாய்
மகிழுமன்னகருஞ்செலேன்றாதரோமறந்து
மகநினைத்திடாரந்தணர்திலகநீயறிதி. (௫௪)

ஈசன்பாரையென்னன்பவரிணையடிக்கிணையி
லாசையாபனுதினமருச்சனைபுரியறிஞர்
நேசர்மேலவர்நேசருநிகழ்த்துசொர்ப்பனத்தும்
பேசுமாநிரயங்கணிற்காண்வரல்பெறுரால். (௫௫)

இன்னவாறுசொல்சண்டனைத்தாழ்ந்தெழுந்தெனக்கு
மன்னுமாநிலத்தார்க்குமாகர்க்குமற்றவர்க்கு
நன்னர்பூசனைசெய்துயவாகுநற்றலமொன்
றின்னதாமெனவினிதறிவித்தருளென்றான். (௫௬)

அந்தணாளனங்கறைந்ததுகேட்டகமகிழ்வு
வந்தவந்தகன்மறையவகேளெனவகுப்பா
னிந்துசூடியுமிருடிகேசனுமெழுந்தருளுஞ்
சந்தமாதலமொண்ணிலசாற்றிடினுலகில். (௫௭)

அதினிலொப்பருநற்றலமொன்றுனக்கறைவா
மதியைவைத்தவன்மாலயன்மூவரும்வைகி
யுதநிவைப்பின்மும்மூர்த்திவெற்பென்றுரைப்பனவா
யதிகமுற்றனகொங்குநாட்டின்வயினம்மா. (௫௮)

எந்தலத்தினுமீசன்மாறனித்தனியிருப்பா
ரித்தலத்தினிலிவரொடுவேதனுமிருப்புற்
றுத்தமத்தலமென்றுமூன்றுலகமுழுவந்து
பத்திவைத்துப்பூசித்துநற்பலனெலாம்படைப்பார். (௫௯)

அனையநற்றலத்தெய்திநீயன்பகத்தார்வுற்
றினிதருச்சனையியற்றிடிற்பவமெலாமிரிவுற்
றுனதவானந்தவீடுபெற்றுய்குவையொப்பில்
பனவவென்றுரைத்தந்தகனூதர்பாற்பகர்வான். (௬௰)

இந்தவேதியன்றன்னையின்னேகொடுபோய்விட்
டந்தவேதியன்றன்னைப்பிடித்தடைதிரென்றனுப்ப
வந்தவாறவரிவனைவிட்டவனைக்கொண்டருகு
வந்தபோதுதூதுவரொடுமறலிசொல்வானால். (௬௧)

எல்லைபேகினவிவனையுமில்லிடைக்கொடுபோய்
வல்லைநீவிர்விட்டிவ்வயின்வம்மெனவறையச்
சொல்லைமாறலாத்தூதுவர்விட்டனர்விதியை
வெல்லமேதினிமீதெவர்வல்லவர்விளம்பில். (௬௨)

விடுத்துவந்தனர்தூதுவர்மேருவிற்கரத்தி
லெடுத்தவெம்பிறையருளினாலிருவரும்பிழைத்தா
ரடுத்துவைகுழியந்தகனுறைந்தவாறனைத்து
மெடுத்திசைத்தனனிவனவற்கியம்பியவேலை. (௬௩)

ஈசன்மாலையன்பூசைசெய்திடுவதற்கிதயத்
தாசையாகினனவனுமற்றவனுமாங்கடைந்து
மாசிலாத்தோணிப்பெயர்மாநதிமூழ்கித்
தேசுசேருமாலயத்தைமும்முறைவலஞ்செய்தார். (௬௪)

மாலைவேலைநஞ்சுண்டவன்றனைமலரயனைச்
சீலத்தர்ச்சனைசெய்தனர்திருவடிதாழ்ந்தார்
ஞாலத்தொப்பருநற்றிருமூர்த்திகளுறையுங்
கோலக்கோத்திரியிற்றவஞ்செய்துகொண்டிருந்தார். (௬௫)

இருந்தருச்சனைநாடொறுமெழிலுறவியற்றி
வருந்துசென்மதீத்துயர்பதமெய்தியுண்மகிழ்ந்தா
ரருந்தவத்தரேதென்கயிலாயமாமசலப்
பொருந்துநற்சிறப்பின்னமும்புகலுவாங்கேட்டீர். (௬௬)

ஆ படலம் - ௰௧க்கு திருவிருத்தம் ௭௬௪.

கோகருணப்படல் முற்றிற்று.

## ௰௨-வது அரிச்சந்திரப்படலம்.

அரியினந்தேனுண்டார்க்குமலர்மலர்மாலைமௌலிப்
புரவலன்றிரிசங்கின்றபுத்திரன்பொய்பேசாத
திரவரிச்சந்திரன்சீர்ச்சிறுவனைத்தவஞ்செய்தீன்ற
பொருவருமொருநற்காதையினையினிப்புகலுவாமால். (௧)

வணமணியிரண்டாம்வள்ளல்வாயொராயிரம்வாய்வல்ல
பணியினியிரண்டென்றோதுபாவலோன்பாரின்மாதுக்
கணியிரண்டென்னவைகுமண்ணனுவலகைபண்டும்
பிணியிரண்டென்னவோதுமிடிகடிபெற்றிபெற்றோன். (௨)

மதியிரண்டென்னும்வெள்ளைக்கவிகையான்வானின்மேவுங்
கதிரிரண்டென்னமின்னுந்திகிரியானகங்கையென்னு
நதியிரண்டென்னமன்னுநவைதவிர்நல்லசுத்தன்
விதியிரண்டென்னப்பன்னுமேன்மைசேர்வாய்மைமிக்கோன். (௩)

செய்யவாமேருவெற்போரிண்டெனத்திரடிண்டோளான்
வையமோம்பம்புயக்கண்வால்வலம்புரியைக்கைவை
துய்யகார்மாவிரண்டாய்ச்சுரந்தருள்புரியுந்தூயன்
வெய்யகூற்றிரண்டாமென்னும்வெங்களிறுடையவீரன். (௪)

இருவர்வேலெடுத்தகாளையெனவிளங்கெறுழெய்துற்றோ
னிருவர்வேளென்னப்பன்னவெழின்மிகவெய்தப்பெற்றோ
னிருவராமளகையாளியெனநனிசெல்மேய்ந்தோ
னிருவராந்தேவர்கோமானெனவுலகிறைமைபூண்டோன். (௫)

வேறு.

மதிமிலைதருசடைவானவனற்றாட்
பதுமம்விடாதலர்பான்மைமனத்தா
னுகதியில்வருகதிரோன்குலமுற்றோ
னெதிருருபுவிபுரியின்றவமொப்பான். (௬)

விரியொளியாணிமிர்மேதினிவான
மருவவயங்கியமன்னவன்வன்கார்

வொருவருவெங்கலிவேழமுழக்கு
மரியனையவனடைப்வர்திருவனான். (௭)

மறைபுகறருபலவாகியதான
நிறையழல்வேள்விதினம்புரிநீரா
னறைகடலுடைமகளகமகிழணிசேர்
நறைகமழ்புயவரிச்சந்திரநாமன். (௮)

வேறு.

வைம்புலன்வென்றவையர்விழைதவமேன்மேலோங்கச்
சம்புவின்சமயம்விண்டுசமயநாடொறுஞ்சீர்சார
வம்புவியளவிலாதவளஞ்சுரந்தன்பினீயத்
தம்புதல்வரைக்காப்பாற்றுந்தாயெனத்தாலங்காத்தான். (௯)

வேறு.

இருக்குநாளெழிற்புதல்வனிரிமையால்
வெருக்கொள்வேற்கரவேந்தர்வேந்தர்கோன்
பொருக்கெனத்திரிமூர்த்திவாழ்பொருப்
பருக்கனேர்மணியடிக்கணைந்தினான். (௰)

வந்துமாதவர்மாகர்போற்றிய
சந்தமாமலர்த்தோணித்தண்ணதி
சிந்தைமாமகிழ்சேரமூழ்கியங்
கந்தமாகநீறணிந்தன்பாகியே. (௰௧)

நித்தியக்கடனெறியிற்செய்தன
னுத்தமத்தெழுத்தெட்டைந்தோதினா
னத்தநல்லணியாடைநல்கினான்
மைத்தமங்குறேய்கோயின்மன்னினான். (௰௨)

அதிலெழுந்தருளாதிமாலயன்
பதுமமென்மலர்ப்பாதந்தாழ்ந்தனா
னெதிரினின்றுதோத்திரமியம்பினா
னெதிரிலர்ச்சனையினிதியற்றினான். (௰௩)

வே று.

ஆரணத்தாறுதப்பாதாலயம்வலமாய்வந்து
பூரணமூன்றுமூர்த்திபொன்னடிக்கமலம்போற்றி
யேரணிமகுடத்தேந்தலெண்ணருங்காலமட்டுந்
தாரணிமீதிலைதிறவம்புரிந்திருந்தானன்றே. (௰௪)

மாதவனமாதேர்ப்பாகன்மலரயன்மலர்த்தாண்மீது
போதுமுப்போதுந்தூவிப்பொருவருபூசையாற்றி
மாதவமனேககாலமன்னவனுற்றநோக்கிக்
காதலுற்றான்மால்வேதாகண்ணெதிராகினரே. (௰௫)

கண்டகாவலன்றண்ணென்றனைகுவித்தெழுந்துதாழ்ந்து
பண்டியாவரும்பாராதபகவர்கள்பாவியேன்கண்
கொண்டுகொண்டற்கனேககோடிநாட்கோடிடாமற்
றொண்டுதானென்செய்தேனோவென்றுதோத்திரஞ்செய்வானால்.

வே று.

மாதொர்பாகபூவின்மாதுமருவுமார்பவனசநற்
போதுவாசபூத்தல்சரத்தல்போக்குமூன்றுதொழில்புரி
தீதிலாததேவர்தேவரேதிருக்கைமான்மழு
நாதவாழிவளைவிறண்டுநாந்தகக்கைநாரணா (௰௭)

கொன்றைசூடிதுளசிமாலைகொண்டகொண்டல்வண்ணனே
வென்றிமேவுமாகமங்களோதுதீதில்வேதனே
கன்றுகாவுதோறுமேய்த்தகண்ணமுன்னர்காலனை
வென்றபாதநால்வகைப்படைப்பியற்றும்வித்தகா. (௰௮)

ஆலமுண்டநீலகண்டவண்டரோடுகடல்சுலா
ஞாலமுண்டுமுண்டகக்கணாலைமீதுதுயில்பவா
பாலனண்டவந்தசண்டன்விழவுதைத்தவன்பதா
நாலுதுண்டபுத்தகக்கைநங்கைதுங்கநாதனே. (௰௯)

விதலைதுன்றமேழுமலையொனுமுன்மேவிவெளவுமா
முதலைகொன்றுகாத்தகத்திமுக்கணத்தமுன்னமோர்
மதலைமுன்றிருந்துசீரவாயுண்ணவருள்பவா
திதலைநின்றகொங்கைவாணிசேருநேரிழலனே. (௨௰)

## வேறு.

என்னவன்னவரெழிற்புகழினிதெடுத்தேத்தி
மன்னவன்னியினைக்கெனமனங்கரைந்துருகி
மன்னுபொன்னடிவணங்கியாநந்தநீர்மலர்க்கட்
டுன்னமுன்னரிநின்றிடவவரிவைசொல்வார். (௨௧)

அரசவென்பெறற்காகவிவ்வருந்தவம்புரிந்தா
யுரைசெயென்னலுமோர்மகவெனக்கினிதுவப்பாய்த்
தருதியென்னலுந்தந்தனமெனுந்தநிசம்பு
வருகமர்ந்தபார்வதியுடன்றிவையறைவானால். (௨௨)

இவர்களீசனென்றன்னையிறைஞ்சியேத்தாத
பவமதாலரவின்கடிபட்டிறப்பானென்
றுவமமேகியசாபமீந்தொல்லெனமறைய
வுவகைபோகிநோக்குற்றுடனாற்றவரொத்தே. (௨௩)

வருந்துதன்பொருவாறுநீத்தொப்பருமன்னன்
றிருந்துநற்றவம்பருவதச்செல்வியைநோக்கி
யிருந்துபற்பகலியற்றலுமீசனுஞ்சிவையுந்
தெரிந்துசிந்தையுண்மகிழ்வொடுதெரிசனைகொடுப்ப. (௨௪)

கண்டுகண்ணெனவெழுந்தனனிருகரஞ்சிரமேற்
கொண்டுபன்முறைகுதித்தனன்கொடியவெம்பவங்கள்
விண்டதென்றனன்பைம்பங்கமலமெல்லடிக்கட்
டொண்டன்செய்பிழைசமிக்கெனத்தொழுதிதுசொல்வான்.

நீறுபூசியபூதியநின்மலச்சடவு
ளாறுமேவியகொன்றையுமணிதிருமுடிமே
ஞேறுஞ்சேவடிநாரியேநாவிஞனுண்ஞே
தேறுமாநந்தவின்பமென்மேலுமீதேனே. (௨௬)

தன்னையோர்தருதாபதரிதயதாமரைவா
ழன்னையேயளவற்றவின்படைதிருஞான
வன்னமேபரமேசுரக்காவமர்கிளியே
மன்னுவேதவண்கோகிலமேமயிலேமகளே. (௨௭)

விண்டலத்காசற்காசருள்புரிவேற்கைக்
கொண்டசண்முகக்குமரனைப்பெற்றபொற்கொடியே!
பண்டைநல்லமுதச்சுவைசெறிதருபனுவல்
விண்டவித்துவசனர்பெருமிளிர்நவநிதியே. (௨௮)

மீனுலாவியவேலைசூழ்மேதினிவிளங்கக்
காணுலாவியசோலைசேரிமயமால்வரைக்கட்
டேனுலாவியகொன்றையான்றிருக்கரம்பிடித்த
மானேநேர்விழியாயறமுழுவதும்வளர்த்தோய். (௨௯)

என்றுதோத்திரஞ்செய்திணையடிவிழுந்தெழுந்து
நின்றுபார்த்தலமேனையிருகரங்களைக்குவித்துக்
குன்றெனத்திகழ்தோளுளகுரிசிலுட்குழைந்து
தன்றனக்குழறச்சிலைவக்கிவைபுகறருவான். (௩௰)

மின்னினீள்சடையானெடுவிமலனீனிடைபேன்
மன்னிமேனியவடிவுகண்டுவகைவாரியில்வீழ்ந்
தின்னதாவியற்றுவதெனவறிதராதிருந்தே
னுன்னையேசினேனலன்றருளுத்தியையொப்பாய். (௩௧)

எவ்வுயிர்க்குமோரன்னையாநீமுனிவெய்திற்
செவ்விதிற்புகலெவ்வழிசெய்பிழைசெய்யி
லவ்வைநல்லருள்செய்வதன்றோகடனண்டங்
கௌவுதண்பனிமாமலைவந்தகாரணியே (௩௨)

உதவுபுத்திரனாறகன்றன்கிருபையினு
லிதம்வந்துய்ந்திடவினிவரமீதியென்றேந்தல்
பதபலர்த்தனைபணிதலும்பார்வதிமகிழ்வா
யிதனையன்னவனுநநோக்கியங்கிசைப்பாள். (௩௩)

யானிசைத்திடுசாபம்பொய்யாமலந்தம்வந்
தீனமின்றியுய்ந்தினிதுலகரசுசெய்திருப்பான்
றேனிசைத்திடுதெரியலாய்தெரிகெனத்திருவாய்ப்
பானிலைப்படுபண்மொழிப்பார்வதிபகர. (௩௪)

கேட்டமன்னவனிருதயமகிழ்வுமீக்கொழமத்
தோட்டுணைச்சரோருகம்விழுந்தெழுந்துசாம்பவியே

பேட்டிமைப்பரோசரூபப்பெயர்வேள்வித்
தேட்டமெற்குளசெயவருட்செய்யெனச்செய்து. (௧௫)

அந்தரத்திடைமறைதனுமவர்திருவடியைச்
சிந்தையிற்றுதிசெய்துசெங்கோலுளசெம்மல்
வந்துநன்னிதிமல்கியவயோத்திமாநகரஞ்
சந்தமுற்றினிதாளுகைபுரிதருநாளில். (௧௬)

சம்புவின்டயனென்பவர்தாமரைத்துணைத்தா
ணம்பிநற்றவம்பூசனைநடாத்தியநலத்தா
லம்பொனின்வரைவில்லிதனக்கினியக்க
நம்பியொத்ததைமைந்தமையொருநந்தனற்பெற்றான். (௧௭)

திக்குவெற்றிகொண்டொப்பருபொன்மழைசிதறி
மிக்கபொற்பமைமாசரூபப்பெயர்வேள்வி
தக்கபுண்ணியர்சாற்றுசொற்றப்பறவாற்றி
மைக்கணன்றிருமாலயன்வாழ்பதமடைந்தான். (௧௮)

இசைசெயிவ்வரிச்சந்திரனெழிற்கதைதபிசைத்தோர்
நசையினிற்செவிசாற்றினர்நல்லபுத்திரரும்
வசையிகந்துபர்வாய்மையுமாசுமாவளமுந
திசைகடந்தசீர்த்தியுமடைந்துயர்கதிசேர்வார். (௧௯)

ஆகூ படலம் ௰௨-க்கு திருவிருத்தம் ௮௱௰.

அரிச்சந்திரபடல முற்றிற்று.

## ௰௧-வது நளப்படலம்.

ஒலியெழிற்கழற்கால்வைவேலுடையவோராசன்முன்னாண்
மலிகடனஞ்சமுண்டோன்மாலயன்மகிழ்ந்துவைகிப்
பொலிதிரிமூர்த்திவெற்புப்புக்குத்தன்பொற்புப்போக்குங்
கலிதொலைந்துய்ந்தசீரார்கதையினிக்கழறுசிற்பாம். (௧)

வேதநூலெல்லாங்கற்றுமேன்மைசேர்வசிட்டனென்போற்
சாதலாற்காமதேனுவினையளிக்காமல்விட்டோன்

தீதிலாத்தேவர்கோமாற்கென்பதுசேர்தலாலே
சோதிசேர்மணியேற்போர்க்குகக்கொடுத்திடாதொழிந்தனுயோன். (௩)

உனமெய்பதுசற்றேனுமுறாமறைவாணரொண்கைத்
தானந்தந்திடுகாற்றத்தசலங்கொடுசலதிசெய்தோன்
கானமவெங்கலிக்குந்தந்துகருதலராமோர்க்கெல்லாம்
வானந்தந்தவருர்கல்விவல்லவர்க்கொல்லையிந்தோன். (௩)

மறையுரையாறுமாறுமண்மகமெல்லாஞ்செய்தோன்
பொறைதிரள்புயத்தின்மீதுபூதலம்பொறப்பவைத்தோன்
செறிமதகயத்தான்வீரசேனனற்றவத்துச்செல்வ
னிறைமதிக்குலமேமேலோங்கிநிலைபெறவந்தசெம்மல். (௪)

வளையினந்தரளமீனும்வயல்வளைநிடதநாட
ருளமகிழ்புகழான்வீமனுகவியபுதல்வியாகத்
திளமுலையமுந்தமாலையிழிபிழிநனைந்ததோள
னளனெனவுலகமெல்லாநடந்தநன்றுமதேயன். (௫)

அறம்பொறைவாய்மையீரமாண்மையாசாரமேன்மை
சிறந்தசீர்கருணையீகைசெவ்விநன்னிலைமைசீர்த்தி
நிறைந்தமாதவநன்னீதிநிகருமறிவுமொன்றாய்ச்
செறிந்தொருவடிவுகொண்டுசெகதலத்துதித்ததொப்பான். (௬)

புலிபுரந்திருக்குநாளிற்புட்கரத்திறைவனோடு
மவையிடைவெஞ்சூதாடியணிநகரரசுதானை
யுவமையில்கலியானுடமொண்ணிதியுந்தோற்றுனாய்
நவையகன்மனைவியொடுநனியழல்வனம்போனான். (௭)

கலிவனத்தேகவையங்காத்தகாவலன்றனந்நாட்
கலிவனத்திவனையோட்டமனையொடுங்காட்டிற்போனான்
பொலிவள்சத்துவட்டப்பூவணைப்போதற்கேனுந்
தலைமனுமூழ்மாற்றற்காந்தருக்கொருக்காலுமுண்டோ. (௮)

பொன்னுயர்பொறிபோற்றேமற்பூத்தபூண்முலையாளோடு
மன்னனைவன்னிக்காட்டில்வன்கலிதுரத்துதோற்றந்
தன்னைமுன்றழற்காளேட்டுந்தன்மையைநாடித்தானவ்
வின்னலையன்றேனெய்தவிழைத்ததொத்திருந்ததன்றே. (௯)

வாரறப்பிறிவீறிவருமுலைமனைவியோடத்
தேரணிச்சேனைவேந்தன்றிப்பியநீருமின்றி
நேரருபசியானொந்துநெஞ்சுநாவீரமற்றங்
காரஞராடைந்துசின்னாளடவிவாயலைந்தானம்பா. (௰)

வனத்திலிவ்வாறுவைகுமன்னனோர்நாளிராவிற்
றனித்தபாழ்ங்கோயிலெய்தித்தமயந்திதுயில்செய்காலை
யினித்ததியிதுபோற்கிட்டாதென்றகன்றொல்லைபோனா
ளினித்தநல்லாவிதேகத்தினையகன்றேகிற்றென்ன. (௰௧)

அல்லிடையாளியன்னவாசங்விட்டகன்றுபோக
மெல்லியறனியளாகிவிழிவழிவிழுநீர்மாரி
வல்லைவென்முலைமேல்வாரமகிழ்நனைத்தேடிவாடி
வில்லுழைதயம்புதைத்தமென்மறிபோலச்சோர்ந்தாள். (௰௨)

வாடியுண்ணைந்துதேங்கிமயங்கினடியங்கிக்கானி
னாடினளுடலமெல்லாநடுங்கிவெய்துயிர்த்தாளல்லி
லோடினளிரங்கிவெம்பியுள்ளுயிர்ப்பொடுங்கிச்சோர்ந்து
வீடினளென்னப்பன்னவிழுந்தறிவிழந்தாளன்றே. (௰௩)

இறந்திடும்விதிவந்தெய்தாவியல்பினாலாவிமீளப்
பிறந்துவந்தெழுதுசோர்ந்துபெய்வளைதேகத்தேசு
நிறைந்தநெய்முற்றுமற்றுநின்றபொற்றீபமென்ன
வறந்துபன்னனைக்காணாளாய்வாய்திறந்தாற்றலுற்றாள். (௰௪)

வேறு.

புலியுமரியுமுறவாகப்புலிபுரந்த
மலியும்விரீகிவயனிடதவளநாட
நலியுமனல்வனத்தினேரிதனைத்தனிவிட்டு
விலகலலகமைவேல்வேந்தர்க்கறனேயோ. (௰௫)

தரியார்தமையடைக்கத்தான்விடுக்குந்தழற்கடத்திற்
பிரியாப்பிரியமுளபேதைதனைத்தனிவிடுதல்
பெருவாரிதியுலகுகாக்கும்பெருமானுக்
கருளாவதவழகாவரசரறத்தாறீதா. (௰௬)

டுக

உன்னேரிலன்புதுணையாயுடையவடியாளைத்
தன்னேரிலாதகழற்கானிற்றனிப்படநீத்
தின்னேரத்திடையிரவிலேகமனந்துணிவான
மன்னேயெற்காகவினுஞ்செய்வதெதுவாலதுண்டோ. (௰எ)

மண்ணைக்குலமுழுறங்குமயங்கிருள்வா
யெண்ணின்பிருகவினங்களியங்குங்காட்டோர்
பெண்ணையழுகவிடுவான்பெரிதடியேன்
பண்ணுமிழைகள்பெரிதேதோபார்வேந்தே. (௰அ)

வேறு.

பாவையிப்படிவாய்திரந்தாற்றிடப்பார்த்த
காவும்வெவ்வியகற்களுங்ககங்களுங்கடின
மாவும்வன்பனைமரங்களுங்காங்கெழுவளவின்
மேவும்வெங்கொலைமாக்களுமிரக்கம்விஞ்சினவால். (௰கூ)

இனையவாறழுதேங்கியதமயந்தியிருள்வாய்த்
தனியளாய்த்திரிந்தாழ்வ்வியாலருடாதை
இனியமாநகரெய்தியங்கிவைபுகன்றினைந்தாள்
வனமுலாவியகடல்கவிழ்கலங்கரைவரல்போல். (உ0)

அளித்ததந்தைதாயாற்றிடவொருசிறிதாறி
யிளைத்ததுண்ணிடையேந்தலையென்றுகாண்பேனென்
றுளத்திலுன்னியங்குறைந்தனளொண்மழையும்பார்க்
கிளைத்தெழுந்திடநோக்கியகேகயமென்ன. (உக)

பாவையைப்பிரிந்தேகியபுரவலன்பலகான்
மேவிவெங்கலிதொடர்ந்திடவலைந்துமுன்வினையாற்
றேவரஞ்சலிசெய்திரிமூர்த்திவெற்பருகு
போவதென்பதாம்புண்ணியம்பொருந்தவந்ததுவே (உஉ)

பொருவின்மன்னவன்மூவர்கள்வாழதிருப்பொருப்பை
மருவவந்துழிபின்றொடர்வன்கலிவலிபோய்
வெருவிநின்றிடாதோடினவடதிசைவேந்த
னுரியவொண்முகநோக்கினோர்வறுமையையொத்தே. (உ௩)

தீயவாங்கலிசேர்தராத்தென்கயிலாயந்
தூயவேவந்தர்கோன்றன்னுங்கலிதொலைந்தோடச்
சேயமாபலர்தோணிநற்றீர்த்தத்திலாடி
யாயுநான்முறைநீறணிந்தைந்தெழுத்தோதி. (௨௪)

வெற்பின்மேவியமூவரைவேதநூல்விதியி
னற்பினொருமாராதனையாற்றினனகந்தாப்
பற்றுபாசவல்லிருளறுத்தவரடிபணிந்து
முற்றுறுதமும்மூர்த்திகள்புகழ்மொழிவானான். (௨௫)

காலனைக்கழற்காலினாலுதைத்தடிமைக்கொள்
பாலனாமார்க்கண்டனைப்பாலனம்புரிந்த
சீலமூவிலைச்சூலமான்மழுவெழிற்செங்கைக்
கோலகோமளபார்வதிகொழுநனேபோற்றி. (௨௬)

வேறு.

சததளக்கமலக்கோயிற்றனியுறைதையல்கொங்கை
மதமலைக்களிறுபாயவண்டுளவணிவிண்டொண்டே
னெதிரறவொழுகுமார்பவிலங்கைமன்சிரங்கள்பத்துங்
கதிருறுகணையாற்கொய்தகாகுத்தபோற்றிபோற்றி. (௨௭)

இருசிறைவிரிப்புட்பேடனுண்டிசைசெயும்வனசவில்லின்
மருவியவெண்டோடன்குவத்திரவாணிவைகும்
பொருவருகானுபேவப்புண்ணியபுவனமூன்றுந்
தருபவதிருமானுபிச்சம்பவபோற்றிபோற்றி. (௨௮)

என்றிவர்தம்மையேத்தியெழிலுறவலமாய்வந்து
நின்றுழியளவிலாதவரமெலாநீட்டநேர்ந்து
தன்றிருத்தேவிநாடுசம்பத்துமுழுதுந்தன்கை
யொன்றியொண்ணிடதமெய்தியுவகையுற்றிருந்தான்மன்னோ. (௨௯)

ஆதுநாடடிகள்வாரத்தட்டமிமாசிமாதத்
தோதுதோணிப்பேராற்றிலுற்றுநான்முறையினாடிப்
போதன்மால்சிவனாமூவர்பூசனைபுரிவாராகில்
வாதைநோயாவமோடிவாமநீங்கிடுமன்மாகே. (௩௰)

வெய்யவாங் கலியின்வாதை மேவுறார் விழைந்த நெஞ்சி
லெய்துவார் மல்லற்செல்வ மெல்லவும் வல்லே சேர்வார்
வையமேல் வானமேல் வைகுவா ரெலா மகிழ்ந்து வாழ்த்தப்
பொய்யிலா மூவர் மூவில் பொற்பதம் பொருந்தி வாழ்வார். (௩௧)

௰௩ படலம் - ௰௨க்கு திருவிருத்தம் ௭௯௫.

நளப்படல முற்றிற்று.

## ௰௪ - வது முசுகுந்தன் முகம்பெற்ற படலம்.

வட்டவாய்த் தளக்கமலக் கள்ளுண்ட வரிவண்டி
னிட்டமாந் தீஞ்சுவைப் பாட்டெடுத் திசையு மெழும் பொய்கை
மட்டுலாம் பொழிற்கலிங்க மாதேயத் தொருமறையோன்
விட்டிடா தரியரன் வேதா பூசை விதிபுரிவான். (௧)

வேதமுழுவது முணர்ந்தோன் வேதமுடிக் கெட்டாத
போதனரன் மாலிவர்கள் பொற்கழற் சேவடி மறவா
னேதரியமா தவத்தா லவன்மனைவி யுத்தரமதி
லேதமறவொரு புதல்வியினி தினவதரித் தாளால். (௨)

சந்தமுறச் சடங்கனைத்துந் தானாற்றிச் சற்குணமே
சொந்தமுற வருசுதையைச் சுகுமாரி யெனவழைத்தான்
முந்தவரு நல்வினையின் முறைபோல வளர்போது
புந்திபுகு மடமகற்றும் பூருவ புண்ணியம் புகுத. (௩)

தக்கார்தீ தல்லவெனச் சகத்தினர்தம் வாழ்க்கைதனை
நக்கீரா ரும்பிரட்டி நண்ணியதத் துவநவைக
டொக்காமன் மும்மூர்த்தி தாம் பூசனைபுரிய
மிக்கார்வ மாய்த்தாதை தாடொழுது வினவினளால். (௪)

மறுத்துமளற் றழுந்தா மந்திரவதி காரம்வழங்கிச்
செறித்தகளுறுக் கரும்பு நுனிதொட்டருந் திறத்தளித்துப்
பறித்தமல ரருச்சனைசெய தி காரம் பரிந்தருள
நெறித்தகுழற் சுகுமாரி நித்தியமப் பணிபுரிவாள். (௫)

வேறு.

திரைக்கடன்முகட்டிற்றினமணியுதயஞ்சேர்வதைநங்கடிகைசாரிகண்
[முந்து
பொருக்கெனத்தேககத்திசெய்தப்பாற்புண்ணியநீற்றணிபொருந்தி
வருத்துறுபாவமுழுவதுமகற்றுமாலரணயனைமாமனத்தி
லிருத்தியிலகன்றுமலசலவிசர்க்கமியற்றிப்பல்லினிதின்விளக்கி.

வாசனைமுசுமலர்த்தடத்தாடிமகிழ்ந்துவெண்ணீறுடல்வயக்கித்
தேசடைநந்தவனத்தினிற்றனதுதிருக்கரப்பிடகையோடேகிப்
பேசெழிலலரிநந்தியாவட்டம்பிண்டிபாதிரிவகுளம்
பாசிலைச்செருந்திஞாழன்மந்தாரைபருந்திகூதாளஞ்செம்பரத்தை.

பொன்னிறக்கடுக்கைகொன்றைவெட்பாலைபுன்னைசெவ்வகத்திபூ
[வேங்கை
நன்னிறக்காஞ்சிகொக்குமந்தாரைநரவல்பொன்னுவிரைவெட்சி
பன்னியமத்தைமாதுளையெருக்குப்பகர்சிறுதும்பைபன்னீர்ப்பூ
வன்னிசெவ்வந்திதுளசிகாக்கணம்பூமாணிறமலர்திருவாத்தி. (அ)

கரியசிற்றகத்திகருவிளைவெள்ளைக்காணசெங்கீரைநீர்முள்ளி
புரசுநற்றருப்பைகுராமராதாளிபூகங்கோட்டஞ்சதகுப்பை
மருதிருவேலிவழுதுணைகண்டங்கத்திரிபறுகுபாலிங்கு
பரிதியின்காந்திபச்சைநாரத்தைபாரிசாதம்புலிதொடக்கி. (கூ)

மாதவிமுல்லைமல்லிகைமயிலைமாலதிமருமருக்கொழுந்து
மேதகுசங்கவர்த்தனங்கிழுவைவெள்ளிறண்ணீர்மிட்டாணெல்லி
போதலர்நொச்சிகுச்சிப்புலுச்சிப்புல்கொட்டைக்கரந்தைநற்கரந்
தீதருவெட்டிவேரிலாமிச்சுசெவ்வியகாந்தணையுருவி. [தை (௰)

எண்மலர்குமுதமோரிதழ்க்கஞ்சமிலங்கைசந்தனங்கருங்காலி
கண்மலர்கமலமிலிகுசம்வாகைகாரைவெண்மலர்மஞ்சணத்தி
யொண்மலர்க்கூத்தங்குதம்பைவெண்பூளையுயரலர்குவளைநாணற்பூ
தண்மலர்கடம்புபூகமேறழிஞ்சிதான்றிதாம்பூலநெற்பயிரே. (௰௧)

வேறு.

உருவுதிகழொண்குழையணிசேடியரோடோதுமலர்கொய்து
மருவுகரத்துப்பிடகைநிறைவாகச்செய்துமனையெய்திப்

பொருவில்பரமசிவன் றிருமால் போகனென்னப்புகல்பெயர்பெற்
றருவுமுருவுமிலாதவரர்ச்சனைசெய்தமருநாளொருநாள். (௰௨.)

நற்றேன்றாற்றுந்திருப்பள்ளித்தாமங்கொய்யநாளொரு
முற்றுற்போலவுய்யானமுற்றசுகுமாரியைநோக்கி
முற்றுக்காதல்விதூமனெனமொழியும்பெயர்சேர்கந்தருவன்
பொற்றேர்த்தட்டாமல்குலுளாண்முன்னர்ப்புகுந்துபுகலுவனால்.

பாசைபுரிசெபோலியமேமலராலணிசெய்மாலிகையே
தேசுதருமின்சித்திரமேதிரைவாரிதித்திஞ்சுவையமுதே
யேசிலெனதாருயிர்க்குயிரேயெனதிற்றுணைவாழ்க்கையளாகிற்
பேசுபொருள்சுடந்துபணிவிடைசெய்துய்வேன்பெரிதென்றான்.

மாதுபுகல்வாள்காந்தருவமன்றேபோசமதிலார்வ
மேதுமிலன்முப்புரமெரிசெயீசனையன்மாலிவர்பூசைக்
காதலுடையேனுனதுமனையாகமனதிற்கருதாதநீ
போதிப்போதுகொயவனத்திற்புகுந்தேனறிதியெனப்புகன்றா. (௰௫)

அனகனொளினீயெனைத்தொடாதசுறியுனதாசரடைதி
யுனதிருவாராகனைக்கொண்டலர்கொய்திடுதற்குய்யானத்
தினிதினடைமெலனவிழிவேலெவிபெனதாருயிர்வௌவித்
தனியிவயின்விட்டிடலுனதுதண்ணளிகருத்தகவன்றே. (௰௬)

வாளாவிட்டேகுதல்வழக்கோவனிதாகிருபாமருந்தாநின்
னாளாய்விட்டேனருள்புரியென்றறையுமவிதூமனைறனைநோக்கிக்
கேளாய்குரங்குப்பிம்பிடித்துக்கிட்டவருகெட்டவனுன
காளாய்கவியாகெனவெகுண்டுகடுத்துக்கடுஞ்சாபங்கொடுத்தாள்.

தேவர்மகளிருளங்கவர்நற்செவ்விசேர்ந்தகந்தருவன்
பாவைபகருஞ்சாபமுடன்பலிப்பக்குரக்குப்படிவமதை
மேவியலேயுநாளிமயவெற்புச்சூழலுறைதரவெண்
சேவிலமருஞ்சிவன்வில்வமரத்தினிழற்சேர்ந்திருந்தான். (௰௭)

## வேறு.

அன்பொழுகியன்னமுகமானமுசவாங்கு
மின்மினிருகின்றசடையண்ணலிவர்வில்வத்

இன்னுகளவல்லையிலையுந்தளிருமெம்மான்
றன்றிருமுடிக்கணுறுதிருற்றனதனைதந்தே. (௰௯)

சிந்துமிலையெந்தையுருவத்தைமறைசெய்யச்
சிந்தையுமைநைந்துமுசுவைச்சினவிநோக்கி
வந்தமருவாருயவராவிறைவன்மெய்ம்மீ
திந்தவிதமாக்குமதனுக்கிதுரைசெய்வாள். (௨௰)

மங்கைதருசாபமுமறந்துலகநாதன்
றுங்கமுடிமீதிலைகடின்னுவினைசெய்தா
யங்குவருசாபமகல்வாகவருபோது
மிங்குமுசுவின்முகமுனக்கியைகவென்றாள் (௨௧)

அன்னதுதெரிந்துமணிகண்டனருள்செய்வா
னென்னிவனையாரெனவிகழ்ந்துமுனிகின்றாய்
முன்னைமுடிவற்றபவமுற்றுமுயர்வில்வ
பன்னமுடியெய்திலொருவும்பரிவுபட்டே. (௨௨)

அப்பெரியகூவிளதளத்தைமிகவனபுற்
றெப்பரியவென்னுருவொருங்குடமறைவெய்தச்
செப்பரியநல்வினைசெயப்படுதலாலே
யிப்பெரியவாமுசுவினுக்குவரமீவாம். (௨௩)

வேடனொருவன்புலியினால்வெருவுமேவிப்
பீடுபெறுவில்வமரமீதுபெரிதேறிக்
கோடுசெறிபன்னமதுகொய்துமுடிகொட்டி
வீடுபெறுதன்மைமுனமேதெரிதியன்றே. (௨௪)

ஆகலினிதற்குலகமுற்றுமரசாளு
மேதகுவலன்றராவுளத்துவிழைவுற்று
மாதெனவழுத்தவுமையுள்ளமகிழ்வானாள்
வேதமுதலன்னதைவிளித்திதுசொல்வானால். (௨௫)

செவ்விமுசுகுந்தனெனுநாமமதுசேர்வுற்
றெவ்வுலகுநல்லலவாசெய்தியிலகென்னக்
கொவ்வையிதழும்மையொடுகொன்றையணிபெம்மா
னவ்வுழியகன்றுவிண்ணடைந்துமறைவானான். (௨௬)

## வேறு.

உரவுநீர்க்கடனுலகெலாமொருங்கரசுஞற்றிப்
பொருவிலாப்பரிமேதநூறாற்றுபுண்ணியஞ்சே
ராசனேர்ச்சுதனாய்முசுமுகமுளானாகி
வருவதாயினனவனுக்குந்தனார்கெடபாதோ. (௨௭)

வளர்ந்துமாமறையாகமநூலெலாமயக்கற்
றளந்தொரைம்பெருஞ்சுற்றமுமாசுறப்பனைத்துந்
தளர்ந்திடாதுதப்பாற்றபூமிக்கலியெனும்பெயரைக்
களைந்துமாமுசுகுந்தன்காசினியெலாங்காத்தான். (௨௮)

ஆண்டொருநாளகிதவுட்டிரனெனுமவுண
னீண்டவாண்மையாலமரரையமரிடைநெருக்கி
மாண்டவச்சிரப்படையுடைவலாரியைமுதுகு
காண்டலாகிவிண்ணாடுந்தன்காற்படுத்திருந்தான். (௨௯)

தேவர்கோனகிதப்பெயரவுணனாற்றிலுற்
றேவலாச்சுவர்க்காதிபத்தியத்தைவிட்டோடி
சேவலோன்றிருமாமனுந்திகிரியிலொருசார்க்
காவில்யாவருங்கண்படாதுறைதரவொருநாள். (௩௰)

முருகுவிம்மியநந்தனமுயர்வரைச்சாரற்
பெரியநற்றவமியற்றியபிருகுமாதவனாற்
றருகுமாரியினழகுகண்டுளந்தடுமாறி
யருகுபோயவளத்தம்பற்றினனறமனுங்க. (௩௧)

துங்கமாதவனன்னதுதெரிந்துசொல்கிற்பான்
மங்கைமார்களைவன்மையிற்பற்றுதலரக்கர்
தங்கணீதிநீயன்னதுபுரிதருதகையா
லிங்கிராக்கதனாகெனவிராக்கதனானான். (௩௨)

அண்டர்நாயகனரசிழந்தரக்கனாயானான்
மண்டுதீவினைவந்ததிவ்வாறெனமயக்கங்
கொண்டுதேவருங்குருவுநற்குவலயங்குறுகிக்
கண்டுமாமுசுகுந்தனையாசிகள்கழறி. (௩௩)

முகமனெண்ணிலமொழிந்தனரவுணர்கண்முடுகி
வெருளவிண்ணவர்வேந்தன்வென்னிட்டிடமவெற்பிற்
புகுந்தூற்றதுமாக்கணுமுருப்பொருந்தியதுந்
தகவுரைத்துவான்கரவெனவிரந்துசாற்றினரால். (௧௪)

தேவர்சேர்தருதீமைதீர்த்தாளுகைசெயமேனற்
பாவமாப்பழியும்வருமெனப்படையெடுத்து
மேவிமாகருரகிதவுட்டிரானுயிர்வீட்டிக்
காவுமேம்படுகற்பகநாடுகாத்தனனால். (௧௫)

வேறு.

விண்ணவரிறைபெறும்வீடிவென்னுற
வெண்ணருகுறைசெறிந்திருந்தவெங்களை
நண்ணினைபுரந்தனைநன்குநல்கினை
யண்ணலிவ்வுலகுகாத்தருளென்றார்சுரர். (௧௬)

மாகர்கண்மொழிகடவாதம்மன்னவன்
வாகைகொள்சிங்கவாதனக்கண்வைகுபு
நாகமுமவனியுநன்குகாத்தன
னேகமிக்கனவுலகோர்பன்னான்குமே. (௧௭)

இவ்வகையரசுசெய்திருக்குநாளையிற்
செவ்வியமன்னரோர்தினத்திற்றேவர்சூழ்ந்
தொவ்வுறவணைமிசையுற்றுவைகினு
னவ்வவரமைபணியடைவினுற்றினர். (௧௮)

நிருத்தநன்மாதர்கணடிக்கநேர்ந்தனர்
பொருத்துபாடகத்தடிப்பூவைமார்களிற்
கருத்தவாங்குழலெழிலரம்பைகண்டனள்
பெருத்ததோண்மன்னவன்வதநப்பெற்றியே. (௧௯)

அன்னதுதன்னைத்தன்னருகின்மாதரைத்
தன்னதொண்விழிகொடுகாட்டித்தையல்கா
ளென்னிவன்முசுவெனவிசைத்துநக்கனண்
மன்னவனதுதெரிந்திலச்சைமன்னியே. (௨௰)

வீரனாய்வள்ளலாய்விளங்குநாலனாய்ச்
சீரெலாநிரப்பியசெல்வச்செம்மலா
யேருலாஞ்சரசனாயிடினுமேமையர்
மூரலாலரசுசெய்முறைமைநீத்தனன். (௪௧)

அழகறுமுசுமுகமகன்றமானுட
விழுமியமுகமடைவேட்கைவிஞ்சினான்
குழுமியதழனிறைகுண்டநாப்பணிற்
செழுமணிவயிரவொண்டுணஞ்சேர்த்தினான். (௪௨)

ஏருறுமதலைமீதிவர்ந்துநின்றுதன்
சீருறுகுலத்திசைத்தேவனாகிய
சூரியன்றுணையடிதொழுதுநோற்றனன்
வேரியந்தொடைமுசுகுந்தவேந்தனே. (௪௩)

இப்படிப்புரிதவத்தினுக்கென்முன்னருற்
றெப்பருசிலைசினந்துரைத்தசாபமிங்
கெப்பெருநோன்பினுமிரிவதில்லைகா
ணப்பணிசடையானடித்தொண்டல்லதே. (௪௪)

அலைதவழ்நதிதொறுமடைந்தடைந்துதோய்ந்
திலகியவயனரியீசனென்பவர்
நலதலந்தோறுநீநண்ணிப்போற்றிடிற்
பொலிமுகம்புகுமெனத்தவத்தைப்போக்கியே (௪௫)

அவனியிலமைபலவாறுமூழ்கியு
முவமையிலரியானுறையுமொண்டல
மெவையவைதொறுமடைந்திலங்கப்போற்றியு
நவைமுசுமுகமகலாமனண்ணவே. (௪௬)

என்னினிப்புரிவதென்றிறைவனெண்ணிலா
வின்னலுற்றுளமயர்ந்திருக்குமெல்லையின்
மன்னியமகதியாழ்வைகைநாரதன்
றன்னியன்னவனுளங்குளிரச்சொல்லுவான். (௪௭)

வேறு.

சீரார்தருதிரிமூர்த்திமலையெனச்செப்புமொரு
பேரார்தலமுண்டதினீசெலிற்பிழையாதுவர

மோராரியயனீசனுமீவரிதிர்சிறிதாஞ்
சாராதடையெனநாரதன்சாற்றித்தணார்ந்தனனே. (௪௮)

பூநாறுமேவற்றைசப்புரவலனுங்குபொருக்கெனப்போந்
தீநாறுபூமலர்த்தோணியினுடியெம்பீசனரி
சாறுறுபோதாறைறமேவானேரடிக்கட்கமலமலர்தூஉய்
வாறுறுபோம்வரைமீதினிலாடிவணங்கினனே. (௪௯)

அந்நாட்டனிற்றிரிமூர்த்தியசலத்திலாரணத்தோர்
முன்னுட்டியனிதிபூசனையாற்றித்துதிமொழிந்து
பின்னுட்கதிரெழுமுன்னரெழுந்துபிறங்கெழிற்பா
றென்னுறுதோணித்திரிவேணிசெவ்விதினுடினனே. (௫௦)

இருநாவொருதரமூழ்கவிருவிதத்தெய்திடலாய்
வருசாபமுற்றுமற்றப்பால்வருவைகண்மூழ்கவுடன்
வெருவாமுசுமுசப்விட்டெழிலாமுகமேவியவேந்
தருளார்பனவருக்கம்பொனுமாடையுமார்த்தினனே. (௫௧)

கலன்பொலன்றாசுமுதற்பொருண்மூவர்களிப்பவளித்
துலப்பொருசோலன்றிருப்பணிபொற்பவுஞற்றியன்பின்
வலப்புரியாமவளோமான்சரகங்கரம்வைத்தவரை
நலம்புரிபூசைபண்ணுளவண்வைகிநடாத்தினனே. (௫௨)

அற்பாற்பலபலதீர்த்தத்தாற்றுடியரனரிவாழ்
பொற்பார்பலதளிபோய்ப்பூசையாற்றிப்புகழ்ந்துதுதித்
திற்பாலிறைஞ்சித்திருப்பணியார்த்தியிளங்குவளைத்
திற்பாரிலொப்பருதன்பதிசேர்ந்தரசெய்தினனே. (௫௩)

முருகார்மலர்த்திருத்தோணியின்மூழ்குமுசுகுந்தனுக்
கருளாங்குதவும்மூர்த்திகள்பாதத்தணிமலர்தூஉய்த்
தெருளாய்ப்பணிந்தவர்தீவினைதீர்ந்துசிறந்தசெல்வப்
பொருளார்ந்தழகுபுகழ்சேர்ந்தரசுபொருந்துவரே. (௫௪)

என்றாங்கருளியசூதனைமாதவரேத்தினராய்
நன்றாம்புரந்தரன்முன்னேயரக்கவடிவாநணி

நின்றனெனத்திருவாய்மலர்ந்தாயந்நிலையினின்று
பின்றவிகழ்ந்ததுமுற்றும்பகரெனப்பேசுவனே. (௬௫)

௮. படலம் - ௫௪ க்கு திருவிருத்தம் ௮௱௫.

முசுகுந்தன் முகம்பெற்ற படல முற்றிற்று.

---

## ௫௰௫ - வது இந்திரன் சாபநீங்கு படலம்.

அனையிலாதகுழவியிதென்னவுமம்புயல்
வானமிலாத்தருள்விரிவான்பயிரென்னவுங்
கனிவுலாமுயிர்போகியகாத்திரமென்னவு
மனனிலாதுவிணுடுவனப்புவறந்ததே. (௧)

உரலடிச்சுவைதசேரயிராவதவும்பலே
றாசகன்றனனணிமுசுமுகத்தண்ணலு
மொருவனுற்றனனென்னினிச்செய்வதென்றும்பர்கள்
பருவரற்கடற்பட்டகணொந்துபதைத்தனர். (௨)

அன்னகாலையினாரதனங்குவந்தண்மினா
னென்னைநீயிர்துயருறலும்பொழிலேந்தலை
மன்னுநீயவரக்கவுருத்தெறுமாறுசெய்
தின்னினீவனெனவிசைத்தவ்வுழியேகினான். (௩)

அருளியாறுகடுங்கவரியரியுண்டுபண்
விரிவதாகியசோலைசுலாமிமவெற்பக
மருவிமாலையுங்காலையும்யாமமும்வைகலுந்
திரியுந்தீயவரக்கன்முனாதன்சென்றனன். (௪)

புன்கண்மிக்கதனக்குணவக்கமுன்புக்கதென்
றின்பமுற்றெதிரிந்திரனாநகத்தின்வயிற்
றன்கரத்திற்கரகபயப்படத்தாக்கினா
னின்புறத்தருமைந்தெழுந்தும்மகத்தெண்ணியே. (௫)

ஈசனோர்மனுவெண்ணியநீர்முகத்தெற்றனு
மாசின்மேல்வருமுந்தடிபிந்தடியாக்கினான்

# இந்திரன் சாபநீங்கு படலம்.

காசமேவுமயக்கவறிவுகழிந்தனன்
றேசுசேர்சடைநாரதன்செயறேர்ந்தனன். (௬)

மன்பின்வாவெனநாரதனேகலுமிந்திர
னன்பினுதொடர்கன்றினைடார்ந்துதொடர்ந்தனன்
றென்கைலாயகிரிதிருக்குறச்சேர்தலுந்
தன்பினுகவாறணைந்தானப்புரந்தரன். (௭)

பார்த்துநாரதனெங்கினிப்போக்கெனப்பாணியா
லார்த்துமூர்த்திகண்மூவரமர்கரைத்தோணிமீ
தீர்த்தங்காழ்க்கிபிடவுடனிந்திரனேர்கெடப்
போர்த்தசாபவரக்கவுருப்பொரிந்தோடிற்றே. (௮)

வேறு.

துயின்றெழுந்தெனச்சுரர்தம்பிறை
வயின்றொடர்ந்தவடிவதுமாறலும்
பயின்றமுன்னைப்படிவமுமாகமு
மியன்றநல்லறஞாறிவெய்திற்றே. (௯)

நாமுறைந்ததெவணிவணண்ணிடப்
போமதற்கிடைபோந்ததென்மனன்றுளந்
தாமருண்டுதவன்றிருத்தாட்டுணை
மாமலர்க்கண்மணிமுடிதீட்டியே. (௰)

திவவியாழ்வடித்தின்னிசைதேக்குகைத்
துவதவாவிவண்டுன்னினைசொல்லெனா
வுவகைபேவியநாரதனும்பர்கோ
விவையதாமெனவெய்தியதோதுவான். (௰௧)

அகிதவுட்டிரனுமவுண்ணன்றெறப்
புகுவதற்கிடமின்றியிமயம்போ
யகமறுத்தபிருகுவருளிய
மகவெழிற்காமால்கொடுபற்றினாய். (௰௨)

அதற்கருந்தவன்சாபத்தாக்கறு
பிதத்திரிந்தனைதேவரெலாமுளம்

பகைத்தான்முகுந்தற்பழிச்சலும்
வகைத்தனன்றிறல்வாளவுணன்றனை. (௰௩)

மன்னனாய்முகுந்தனைமரவான்
மின்னனாள்புரணிநகைதயின்வெட்குறூ
வன்னனேகியிவ்வாறுபடிந்ததாற்
றுன்னினன்மனுடப்புகழ்த்துமுகம். (௰௪)

அண்டர்துன்பமறவரசேயினைக்
கண்டுபல்வரைகானகப்பாவுநீத்
தொண்டிரைத்திருத்தோணியுயர்புனற்
கண்டினைப்பப்புரிந்தனன்காண்டியால். (௰௫)

அவுணனாகியசாபமகன்றபைந்
சுவணமாமுருத்துன்னினியென்னனுந்
தவனங்கோளையுஞ்சாசரமுழ்கினான்
கவளநான்மருப்புக்கரிக்காவலன். (௰௬)

அறிவிலேனைப்பொருட்படுத்தாய்க்குமென்
னிறைமைமேவநிறுத்தியவெந்தற்கும்
வறியனேன்செய்கைமாறுமொன்றுண்டுகொ
லறவனேயென்றடிபிணர்த்தாழ்ந்தனன். (௰௭)

திரைவிராவியதோணித்திருநதி
விரியுநால்வழிமீட்டும்படிந்தனன்
கரியமால்சிவஞ்சோதன்கழறொழு
தரியபூசனையன்பினுணுற்றற்கே. (௰௮)

வேறு.

தந்திரியாழ்கைவைத்ததவனெடுதளிக்குட்சென்று
பைந்துழாய்மாலையான்முன்படியளந்தருள்பாதத்துஞ்
சந்தமாநிருத்தஞ்செய்தோன்சரணத்துப்பதுமந்தங்கு
மந்தவேதன்காற்பாலுமலர்கடுப்பணிந்தன்பாக. (௰௯)

இந்திரையிலங்குமார்பவிமையமானிருக்கும்வாமச்
சுந்தரகலைமான்கொங்கைதோயுமெண்டோட்சேர்போத

வெந்தனைப்புரந்திங்காட்கொளிறைவர்காளென்னப்போற்றி
யந்தரத்தடைந்துதேவராயமைசெயரசாண்டானல். (௨௰)

செப்புமிக்கீர்த்தித்தாடிச்சிவனையன்றிருபாற்போற்றி
யொப்பில்பொன்றுராடையுண்டிபூவொளியீந்தோர்சே
ரப்பெரும்பலனுர்சொல்வார்நாரதனடைந்துபூசித்
துப்பெறுசிறப்பைசூதன்சொல்லுவானுறுமோருக்கே. (௨௧)

ஆக படலம் ௰௫ - க்கு திருவிருத்தம் ௮௱௧.

இந்திரன் சாபநீங்க படல முற்றிற்று.

## ௰௬ - வது நாரதன் பூசித்தபடலம்.

வாரணபாதத்தவன்மகிழ்வாக
நாரதனுக்குமுன்னணைவினைல்ல
பூரணதென்கயிலாயபொருப்புச்
சீரணுகித்தெரியாசையன்சென்றான். (௧)

வில்வமுநொச்சியுமேதகுகங்கையு
மல்கியசெஞ்சடைவானவன்பாதல
மெல்லையெதிர்ந்ததுமேத்திசைத்தின்பாய்
வல்லைவணங்கிவழிக்கொடுசென்றான். (௨)

கமுகுபர்தாழைகள்கண்ணிவளங்கள்
சமைதருகொங்கெனற்றண்ணடைசார்ந்தான்
சிமயநெருங்கியதென்கயிலாயந்
தமையிருவிழியொடுகண்டனன்றாழ்ந்தான். (௩)

விழிவழிபொழியெழிலானந்தவெள்ள
மொழுகுபுமருமமெலாநனைந்துகள
விழுமியபண்டிரண்டொருவடிவின்பிற்
றழுவினவனதவன்றடமிவர்கின்றான். (௪)

வேறு.

ஏவரும்வணங்குமொருமூவரெனவெண்ணி
யாவலடைமாமாயனைத்தும்வழிபட்டாங்

கோவறவுதிர்க்குமலரும்பர்சொரியொண்பூ
மேவவருவண்டுகள்விலக்குமெழில்கண்டான். (௫)

வெற்பினடிகாணவிழைவிண்டுபலர்கேழற்
பொற்புருவுகொண்டகழ்குடைந்துபுகல்போலச்
சுற்றுறநிறைகந்தமதுதோண்டியயில்வுற்று
நிற்குமெழிலெய்துகுழுநேர்நெடிதுகண்டான். (௬)

நடுவனுயிர்சாயவடைபாலனுயிர்நண்ணக்
கடிதினருள்செய்தகளகண்டனரிபோத
னுடையவடிவாம்வரையினுற்றவெமையாரே
கடிபவரெனக்களிகொளுங்கரிகள்கண்டான். (௭)

ஆளியொடுமெய்ம்மைநிகராகவரன்மெய்மேன்
மேவுவனவல்லவுரிவிட்டவினமென்னத்
தாவியெழுமுள்ளமகிழ்கொண்டுதனியார்த்தே
வாவுபுலிசிங்கமிபமாவருவகண்டான். (௮)

பாணியலதேகமறியாதுகலைபாதம்
பூணுறுமயனுப்பவயல்போதறெறியாது
நாணியெனவெங்கவயநற்கரடிகாட்டா
தானுவுருமுற்றும்விளையாடுதகைகண்டான். (௯)

வெற்புருவமீதும்விடலின்றிவிடநாகப்
பொற்றெரியலுற்றபொலிவிற்பொருவிலார
நற்றருவிடைக்குடிகொளுஞ்சுடிகைநாகம்
விற்பரவமேவிவிளையாடுவனகண்டான். (௰)

அண்ணன்முனணிந்தவடகத்தணிகளென்ன
வெண்ணில்புலிசிங்கமிபமென்றுரைசெயீதின்
வண்ணவுரியுந்தலைவெண்மாலிகைகளென்னத்
தண்ணருவியாறுபலதானடைவகண்டான். (௰௧)

நீள்பனைநெடுங்கையிபநின்றுபொருபோது
தாள்படவுடைந்தகழைதந்ததரளத்தொண்
டூள்சுதைவிபூதிபலதூயவயிரக்கல்
வாள்விடுமெலும்பினணிமாலைபலகண்டான். (௰௨)

இருசெவிதமக்குறையுளென்னவினிதெய்தப்
பொருவிலெழில்யாழிசைபொங்குவதுபோல
விருவிளையுங்கதிர்சுகங்களலகீரும்
வரையருகெலாமரிகள்பாடுவனகண்டான். (௰௩)

அற்றமகல்கைக்கணமராசமுலையொப்பச்
சுற்றுமொளிதுற்றுவளர்சோதிமாழுங்கைப்
பற்றுதுடிமிக்கொலிபயப்பதெனவேட
ரெற்றுபறைபொற்றையிடையெய்துவதுகண்டான். (௰௪)

இன்பிரியும்வன்பிறவியென்னும்வரையேறும்
வன்பெரியதுன்பமலையேறவருமெய்ப்பும்
பின்பொருவநன்குகுளிரும்பிரிதிறெங்கா
றன்பொருவிலண்ணலருடன்னில்வரல்கண்டான். (௰௫)

பீதிதருவெம்பிறவிபோவருள்பெற்றோர்
போதவொளிகெட்டுவிடவுட்புகுதலாது
வாதனைசெய்வன்மலம்விலங்கியெனமஞ்சு
மீதுசிகரத்துமுடிமேவுவதுகண்டான். (௰௬)

வேறு.

செப்புமித்தகைத்தாய்ச்செறிவளமெலாந்திவவியாழ்முனிகண்ணுற்
றெப்பில்யோகியருள்ளமாதாரமூவிரண்டையுமொரீஇயப்பால்
வைப்பிலாயிரஞ்சேயிதழ்த்தாமரைவைகுசோதியைச்சேர்ந்தாங்
கப்பொன்மால்வரையாறெலாங்கடந்துபோயணிமுடியருகானான்.

உளமொடுங்கியோகத்திறற்சோதியையுறுபவர்க்கவணெம்மான்
றளமலிந்தகாட்சிலம்பொலிதந்தெனத்தாவிவிண்டொட்டோங்கு
வளமலிந்தவாம்வரையருகுறச்சுரர்வானதுந்துபிதன்னோ
டளவநன்றுமும்மூர்த்திகடோத்திரத்தார்ப்பினான்மகிழ்வானான்.

அங்கூபானதிதென்னதிதோணியென்றறைபெயரமைமூன்றுந்
துங்கமாநதிதோய்ந்தலர்தூசிடைதுவக்கிநான்முறைசோதி
பொங்குநீற்றணிபூண்டுநித்தியகடன்பொற்புறவினிதாற்றிச்
செங்கண்மாலரன்போதனென்பவருறைதிகிரியின்முடிசேர்ந்தான்.

சேர்ந்துசுற்றெலாநோக்கலுமடி முதற்சேர்தருகிரியெல்லா
மார்ந்தபீடமாயதன்மிசைநெடுகியவசலநல்லணிமுற்றுஞ்
சார்ந்தமூர்த்தமாய்த்தோற்றலுமஞ்சியித்தனிவரைமுடியின்கட்
போந்துபோற்றலெவ்வாறெனவுருகியுட்புகன்றெதிர்போந்தானல்.

ஒப்பில்காந்தநேருஞ்சிபோன்மூவர்வாழோங்கலின்றிருமுன்னர்ச்
செப்பநாரதன்சிந்தைசென்றருண்மலைபுகத்திருக்கிழிநீர்கா
ரொப்பமார்பகநனைப்பமெய்புளகெழவுரையெலாந்தடுமாற
வப்பெமானரியயன்றிருவடிபணிந்தன்பெனார்கலியாழ்ந்தான். (௨௧)

அதிகபோதுதூணமெனக்கிடந்தனனநந்தமகத்தார
வெதிரின்மேலெழுந்திருகரங்களைச்சிரத்திருத்தித்தென்கைலாய
பதியின்மேவியபரந்தாமசெம்பதுமவாசனபோற்றி
மதியிலேற்கருள்புரிந்ததற்புதமெனவழுத்திப்பூசனைசெய்தான்.

தேவர்விஞ்சையர்சாரணர்சித்தர்கடிருந்தெழிற்றவத்தோர்கண்
மேவிநித்தமும்வழிபடுமூவர்கண்மேம்படுபுகழெல்லா
நாவினிற்புகல்பாவொடுபொருந்துறநல்லெழான்முறைவீக்கி
யோவிலன்புறவேழிசைவழாவகையுவப்பினேத்தினன்மன்னே.

கட்டுபொற்சடையவிழ்ந்துபின்சரிதரக்காதணிகுழையாட
வொட்டுவற்கலைநட்பத்தன்னுளமெழுந்துவகையின்முனரோடச்
சட்டுமும்மணிநயமணியத்தமுத்திவிண்டடவியதனிக்கோயிற்
கட்டுணைப்படத்தாழ்ந்தெழுந்தகமிகக்களிகொளவடுத்தானல். (௨௪)

வேறு.

எழுமொளிமுத்தநாற்கோட்டிபம்பலமருங்குமொய்ப்ப
விழுமியமதவெள்ளத்திராயிரங்கோட்டுவேழஞ்
செழுமணிப்புவனப்பொற்றேர்சேர்த்தியகலினப்பாய்மா
தழுவுபொற்படிகணீண்டவாய்தலின்முன்னர்ச்சார. (௨௫)

கப்பணம்பிண்டிபாலங்கழுக்கடைமுசலஞாங்க
ரொப்பருமழுத்தண்டாழியுயர்ந்தவச்சிரமொண்சூலஞ்
செப்பருமெழுவாள்பாசஞ்சிலைகுயஞ்சுரிகைசெங்கை
வைப்புறுகணங்களெண்ணிலாதவாய்மருங்குமொய்ப்ப. (௨௬)

படகந்திண்டிமந்தடாரிபணைகிணைதக்கைமொந்தை
துடிவளைபதலைகோடுசல்லரிபம்பைசொல்லு
மிடமருநின்றெண்ணில்லாவிரட்டொலிபெட்டுத்திக்குங்
கிடுகிடென்றதிரவாரிகிளரொலியடக்கிவிஞ்ச. (௨௭)

வேறு.

காந்தாரம்பைரவிதேவக்கிரியைசீராகங்கௌசிகஞ்சீர்
சார்ந்ததாமலகரிவேளாவளிமாளவிகௌடிதன்னியாசி
கூர்ந்தகேதாரகிரிநாராயணிகுண்டக்கிரியைகூர்ச்சரிபங்காளந்
தீந்தேனெனத்திருச்செவியிற்சேர்வதிறலவர்சேவித்துப்பாட. (௨௮)

பாண்டரங்கங்கொடுகொட்டிகாபாலமெனும்பரமசிவன்முக்கூத்து
மாண்டருநற்குடைகொட்டிபெருங்குடைவிருவகையுமோர்பா
லீண்டவினையருடமல்லுமரக்காலல்லியமெனுமீரிரண்டுகூத்துங்
காண்டரவவ்வாலயத்துக்கட்டெரிந்தோருருகியுளங்களித்தங்காட.

வடிவமைமைப்பங்கணைக்கிழவர்தமக்குரியபேடுமுறைவழுவாதாடக்
கடையமயிராணிசெயமலர்மாதுபாவையுளங்களிகொடாட
வடியயிற்கட்குமரிமரக்காறழுவத்துடிமேயழாமாதராட
நடனமிடுமரமகளிர்நாணவளவகமடனநன்கங்காட (௩௰)

வானமரூர்வசியரம்பைதிலோத்தமைமேனகையொழுங்கில்வந்து
[நின்று
தேனமர்பூஞ்செங்கைவழிவிழியும்விழிவழியுளமுஞ்செல்லவாடக்
கானமர்பாமுனிவரர்களாரணநான்கையுமுறையிற்கசிந்தங்கோத
வீணமிலாத்தந்திரியாழ்த்தும்புருநாரதர்கள்பலரினிதுபாட. (௩௧)

எத்தனைபோவிந்திரர்களெத்தனைபோசந்திரர்களிரவிதேவ
ரெத்தனைபோவெத்தனைபோவுருத்திரர்களிமையவர்கள்கருடர்சித்த
ரெத்தனைபோவெத்தனைபோகந்தருவரெத்தனைபோவிருடிமார்க
ளெத்தனையாமெனத்தெருத்தலைக்ககத்துப்புறத்துபடர்ந்தேத்திப்
போற்ற. (௩௨)

குண்டையாடிசாந்தாற்றியாலவட்டங்கவரிகொடிக்குழாங்கண்மொய்ப்ப
நெடிதோடுமொருகோடிதூணிறுவுமண்டபத்துவடியமாலும்
வடிவேறுபொடிபூசுவானவனுமரைமலரில்வைகுவானுங்
குடியேறியரிதாங்குதவிசினிடைக்கொலுவிருக்குங்கோயில்

வேறு.

எட்டுமைந்தாபிமையந்திட
கெட்டுடற்படிநீட்டிடு
னொட்டியங்கைநகையுச்சியி
லட்டிமுன்னுறவாகினான். (௩௪)

வந்தவந்தமின்மாசனச்
சந்தசந்தடிதான்றடாது
நந்திமூவர்முனாதா
முந்துகென்னமுன்முந்தினான். (௩௫)

அன்னவாகனனானரி
யின்னர்நேர்முனியெய்தலு
மன்னமொன்றடைந்தாயெனத்
தன்னையின்றெனச்சாற்றினான். (௩௬)

சூலமுண்டவனம்புயன்
ஞாலமுண்டருணாரணன்
கோலமுண்டனன்கண்கோடு
சீலவொண்டுதிசெப்புவான். (௩௭)

வேறு.

பிறையுங்காளத்தரவுஞ்சடையிற்பிரியாதணியும்பெரியாய்சரண
மறைவன்சிறகர்க்கருடன்புயமேல்வருவாய்மலராண்மருளாசரணஞ்
செறிவன்பகைமான்குரலுஞ்சுவைசேரிசையும்பிரியாச்செவியாய்
[சரணம்
பறிவண்படமுந்துளபத்தொடையும்பண்பாயணியும்பகவாசரணம்.

கமலத்தவிசேறியவாசரணங்கலைமாதுறைநாவகனேசரணஞ்
சிமயத்திறல்விற்கரனேசரணந்திருநீறணிசேர்தேகாசரணஞ்
சமபத்தலறுங்கரிமுற்குறுகித்தானருள்கைசெய்தலைவாசரண
மெமையெப்பொழுதுந்தொண்டாக்கியசீரியையுந்திரிமூர்த்திகளே
சரணம். (௩௮)

பெண்ணாயாணாயுமையாயானைப்பிரியாவுருவாம்பெரியாய்சரண
மண்ணீர்வானாய்வளியாயனலாய்மருவிப்பொருவாமாலேசரணங்

கண்ணேர்கமலாலயமீதுறைவாய்கனைநான்மறையங்கொடியாய்சர
[ணந்
தெண்ணீரடைச்செகதென்கயிலைத்திரிமூர்த்திகளேசரணஞ்
[சரணம். (௪௰)

வேறு.

எனநாரதமாமுனியேத்தநு
மனுமாலொன்வேதனுமிகமகிழா
வெனவேண்டுவதிசைசெயினேமொனத்
தனிமூவர்கடாடொழுமோதுவனால். (௪௰௧)

சேணார்திரிமூர்த்தியெழிற்றிகிரி
மாணார்தரவைகரமாலயவுந்
தாணேர்சததந்தரிசிக்கவர
மாணனருள்வீரெனவவரறைவார். (௪௰௨)

யாழ்கைவிரறைறவரலாயமிர்திற்
சேழ்வைகியவின்னிசைசெய்கிழவ
வாழ்விங்கடைவாரடைவார்வாரீ
தாழ்வென்பெறவென்றவர்தந்தனரால். (௪௰௩)

எனவன்னவரீவரமெய்தியெழின்
முனிவன்னவர்சேவடிமுடிதொடவீழ்ந்
தினிதின்னுலகின்வயினேகினனற்
றனிமன்றருமன்கதைசாற்றுவனால். (௪௰௪)

ஆக படலம் ௰௬ - க்கு திருவிருத்தம் ௯௰௫.

நாரதன்பூசித்த படல முற்றிற்று.

## ௰௭ - வது தருமபுத்திரப் படலம்.

உயர்தவர்விதுரன்முன்னோன்பாண்டுவென்றுரைபேர்பெற்ற
செயிரகல்வேந்தனீன்றதருமபுத்திரனுஞ்செல்வ
னிமையெழில்விசயன்வீமனகுலன்சாதேவனென்னும்
புயனிகரிளைஞரோடுபோந்தவன்பொய்யிலாதான். (௧)

பொன்னுலகாளன்போல்வானாசிறைக்கலைதேர்பொற்பாற்
பன்னகாதிபனையானான்காத்தலிற்பாப்பின்மெத்தை
துன்னுமாலொப்பான்றேகச்சோதியிற்சோதிபோல்வா
னன்னநேராகப்பாவமறுத்தறமகத்திற்கொண்டான். (௨)

வன்மையான்மேருவொப்பான்மலர்மகத்துச்சீதந்
தன்மையாற்கலைமேலோங்குந்தண்குலக்கடவுளொப்பான்
றண்மையால்வேதமொப்பான்சாய்ந்தாப்பொறுமையென்னு
நன்மையாலகழ்வார்த்தாங்குநானிலந்தன்னையொப்பான். (௩)

பொருளினானளகையாளிபோல்பவன்றருமம்போக்கா
வருளினாலனையீன்பாவையருட்கடைக்கண்ணேயாவான்
மருவலார்தம்மைவாட்டும்வலிமையாலன்றுள்பாங்கர்ப்
பெருமனோர்முறுவலொப்பான்பேரிசைத்துவசம்பெற்றான். (௪)

அலககல்சேனைதன்னையார்கலியன்றனோர்பால்
விலகலாநடுவொற்றென்பானமேனியநடுவெனப்பா
னிலகவிர்கொடையரன்பெச்சுமிருநிதிதன்னையெய்வான்
பொலிபுயாசலப்பூந்தாரான்றருமபுத்திரப்பேர்பூண்டான். (௫)

செல்வமுஞ்சிறப்புமீடாச்சீர்த்தியுந்தவமுந்தேயாக்
கல்வியுமொழுக்குமேலாங்கருணையுமறிவுநாணு
மொல்கலிறருமனீயுமொண்சுதனென்றுலன்றேன்
பல்பெருமையையும்பேசப்பங்கயனானுமாமோ. (௬)

அன்னவனிராசசூயமாதியவனேகயாகந்
தன்னைநூனெறியினாற்றித்தானங்களனேகமாக
முன்னைவேதியருக்கீந்துமூவுலகமுங்கொண்டாட
மன்னுமாமகுடஞ்சூட்டிமனுமுறையரசுசெய்தான். (௭)

தருமத்தின்றலைமேலோங்கச்சந்ததிசாருசார
வருமிந்தைபாவமாறவைதிகசைவமல்கத்
திரைதத்துகடல்சூழ்ஞாலஞ்செழிக்கச்சிற்றரசரெல்லா
மொருமித்துத்திறைவந்தியவ்வரசாளுநாளில். (௮)

அலககணிதியல்வெற்புமலைக்கடற்படையுநாடும்
பொலிதிருநகரும்பூணும்பொறியகல்புயங்கசேது

நலனிலாச்சூதால்வெளவநல்வழுக்கடவுளீன்ற
திலகனுந்தருமராசன்சென்றனன்றீம்வெங்கானம். (௯)

அனைடுவவதாருஞ்செய்தாசுதிர்வடமீனன்ன
வினியகற்பினையபாஞ்சாலியென்னுநங்கையோடு
மெனவிசைக்கினுந்தட்டாதவிளையவர்நால்வரோடுங்
கனியிருட்கானந்தன்னிற்கட்டபட்டிருக்குநாளில். (௰)

அரவவெங்கொடிகொடியோனளவகல்வஞ்சமாற்றப்
பருவரற்பாவையாழப்பட்டுமுன் னுரைமறநொந்து
தருமமூர்த்தியையுஞ்சற்றுந்தவிர்தராந்தகவிலின்றூற்
பெரியவர்பெருமைமுற்றும்பேசிடவல்லார்யாரே. (௰௧)

உனைவனவுள்ளம்போழுமுயர்துயரீந்தோர்மாட்டுங்
கனவினுஞ்சினம்வந்தெய்தாக்கலியப்பொறைகைக்கொண்டான்
றினகரன்கரமுட்செல்லாத்தியமுட்கானந்தோறுந்
தனதுயிரளையதம்பிமாருடன்றங்குநாளில். (௰௨)

மங்குலைக்கிழித்துமேற்போம்வார்கொடிகுழாங்கொண்மாடந்
திங்களிற்றிகழுஞ்செல்வத்துவாரகையரசுசெய்யும்
பங்கயக்கண்ணன்குந்திபாலனுந்தருமராசன்
றங்கியதாயதீயதழல்வனந்தன்னில்வந்தான். (௰௩)

வந்தவக்காலைகாலைவான்வருமிரவிகண்ட
செந்தளக்கமலப்போதிற்றிருமுகமலர்ச்சிசேர
முந்துறவணங்கிப்போற்றிமுகமனங்கியம்பியப்பாற்
சந்தநற்றவிசிந்தன்னைதனிலெழுந்தருளச்செய்து. (௰௪)

தருமந்தானனேகசம்வற்சரந்தவப்புரிதன்மைத்தா
லரவிந்தாக்கத்தாயுன்றன்றரிசனையடையலானேந்
தெருமந்தாரணியந்தன்னிற்றிரௌபதாதேவியோடு
மருமந்தாமனுசரோடுயடைந்ததுமிகநன்றுமே. (௰௫)

## வேறு.

என்றங்கின்மொழிபியப்பியப்பாலெழிற்றருமன்
மன்றலந்துழாய்மாலைமான்மாமுகநோக்கி

யென்றனுநெற்செல்வமுநகரமுமிழந்து
கன்றுகின்றதுன்பென்றுகொல்கழிவதோகாணேம். (௧௬)

அரவகேதனனடிக்கடியெங்களுக்காக்கும்
பெரியவேதனையெத்தனையென்றியாம்பேச
றெரிதிநீயெனச்செப்பித்தன்றிறலினையவரோ
டருகுமேவியபோதரியறன்மகற்கறைவான். (௧௭)

நடுவனல்கியநந்தனவறிவகற்றுக
னுடையதுட்டர்பாலிலக்கும்சிறுபகலுறைவா
ணடுவுநல்லறச்செய்கையுநன்குடையவர்பா
லடையும்வெந்துயர்வருமையுநிலையிலவாமே. (௧௮)

கங்கையைச்சடைக்கணுடைக்கணுதற்கடவு
ளங்கழற்றொழுமாற்றலானுணதறந்தாற்று
லிங்கடர்த்திடுமிடரெலாமொல்லையிலெகித்
தங்குநல்வளமென்றுளநேதற்றுவசாற்றி. (௧௯)

குருகுலத்திருவரைவருகொற்றவரெல்லாம்
புரியுநற்றவமுற்றுமிங்கோருருப்பொருந்தித்
தரையுதித்ததொத்திலங்கியதராபதியான
தருமனன்முகங்கணணான்கணோக்கிச்சாற்றுவனால். (௨௰)

வாரிதிக்கொணிமாற்றுமாமுரசகேதனவோர்
காரியத்தினைக்கழறுவாங்கேட்டிதென்கயிலை
சாருமத்திரிமூர்த்திகடாட்டுணைப்பூசை
நெறிவித்தலத்தரசுகைகூடிடுநிசமே. (௨௧)

வேறு.

இலகுலையழல்கால்வைவேலேந்தியசெங்கைச்சிங்க
நலமலிசெங்கோல்கோடாநளமகாராசனென்பான்
வலிமலிகலியைவாட்டிபாற்றலன்றன்கைவாங்கும்
பொலிவளநகருநாடும்பொருந்திப்பூதலத்தையாண்டான். (௨௨)

பருப்பதச்சிறகரீர்ந்தபாய்முனைவயிரச்செங்கை
மருப்பொருநான்குகொண்டமதமலைமகவான்மேனாட்

செருக்களத்தரக்கர்வெற்றிசேர்ந்துளசேரப்பெற்ற
தருத்திருநாடுமீட்டுத்தனியரசாட்சிசெய்தான். (௨௩)

விண்டொடுமூன்றுமூர்த்திவெற்பினைமேவியன்னோர்க்
கண்டடிபணிந்துபோற்றிக்களித்தெழிற்பூசையாற்றிப்
பண்டரசாளப்பெற்றபார்த்திபர்தம்மையெண்ணி,
விண்டிடவேண்டிற்கற்தபப்பற்பலவேண்டுமென்றே. (௨௪)

என்னைப்பண்ணிட்டகேட்டவுதிட்டிரனிளையாரோடும்
வன்னப்பொன்னுடைமாலைவழங்கெனவிடைவாய்ந்தாரா
பன்னப்புட்கருடன்சேவாரோகணரமாவ்வெற்புத்
துன்னப்புக்கனர்மால்வாரித்துவாரகாபுரிபுக்கானல். (௨௫)

அறன்மகனனுசரோடுமளவிலாவாறுங்குன்றுஞ்
செறிதருவனமுந்தீர்ந்தப்பாற்றிரிமூர்த்திவெற்பை
நெறிதனிலெதிரநோக்கிநெஞ்சகங்குழைந்துபோற்றிக்
குறுகியங்கருகாந்தோணிக்குளிர்நதிவிதியினாடி. (௨௬)

பூதிநற்பூதியப்பாற்பொற்புறவணிந்துபின்ன
ராதியைந்தெழுத்துமட்டாக்கரமுமங்கடைவினெண்ணி
மீதியைவிண்ணைமண்ணைமெல்லடியளவுசெய்த
சீதரனென்னநீண்டசெம்பொனாலயத்திற்சென்று. (௨௭)

உலகெலாம்வளமுற்றுய்யவுப்பர்களுவகையூற
வலகிலாவறவர்வாழவறந்தலையெடுப்பநாளுந்
தொலைவிலாவரமென்மேலுஞ்சுரந்தருள்செய்யுந்தூய
தலைவராஞ்சம்புதாமோதரனயன்றிருத்தாடாழ்ந்து. (௨௮)

எழுந்துகைசிரமேற்கூப்பியிளைஞர்களொடுஞ்சூழ்வந்து
தொழுந்தொறும்புளகந்துன்னவானந்தத்தோயநோக்கம்
பொழிந்திடவயன்மால்சய்புவெனப்புகழிருப்பேர்பூண்டங்
கெழுந்தருளிறைவர்சீர்சேரத்தெடுத்திசைக்கலுற்றான். (௨௯)

ஆரணத்தொகைகட்கெட்டாயாரணத்துவசம்பெற்றாய்
வாரணத்துரிமேற்போர்த்தாய்வாரணந்தனைமுன்காத்தாய்
பாரணம்விடமாய்க்கொண்டாய்பாரளந்தருள்பாதத்தாய்
தாரணிதுளவமார்பாசம்பரிதாதாபோற்றி. (௩௰)

திருவுறைமார்பாபோற்றிசிவையுறைவாமாபோற்றி
யரவணியணிந்தாய்போற்றியரவிறையணையாய்போற்றி
மரைமலருறைவாய்போற்றிவாணிமின்மருணபோற்றி
பரமவைகுந்தாபோற்றிபராபரசிவனேபோற்றி. (௩௧)

முளரியங்கண்ணபோற்றிமுளரியங்கண்ணபோற்றி
தளமரைத்தவிசாள்சரர்மென்றாலுடையவனேபோற்றி
களமலிகளனேபோற்றிகளங்கனிக்காயாபோற்றி
வளைதனுவரையாய்போற்றிவளர்தனுவானேபோற்றி (௩௨)

பாற்கடற்றூரவெற்புப்பதுமவாதனத்தைப்பார்க்க
மேற்படுமிடமென்றுள்ளம்விழைந்துறைசிவவிதாதா
மாற்றிருமாலேநுங்கண்மலரடிக்கடியனுமென்
றூற்கொடுந்திக்கத்தக்கசத்திசற்றேனுமில்லேன். (௩௩)

புரிதருபூசையேற்றுபுன்கண்வாரிதிவீழெம்மைக்
கரைதெரிவுறுத்தியேறக்கருணைசெய்தருள்வீரென்று
திருமுனர்நின்றுசெப்பிச்செவ்வியவருள்பெற்றேகி
மருவலர்ச்செயித்துமண்டலாதிபத்தியம்வாய்த்தானல். (௩௪)

மறைபுகழ்தென்கைலாயவரைத்திரிமூர்த்திதங்க
ளாறுமலரடிகள்போற்றிநடுவன்சேய்சரிதை
முறுநறுங்காதைகேட்டோருண்மையும்பொறையுஞ்சீருந்
திறமையுமடைந்துவெற்றிசேர்ந்தரசாட்சிசெய்வார். (௩௫)

ஆ படலம் ௰௭-க்கு திருவிருத்தம் ௯௱௰.

தருமபுத்திரப் படல முற்றிற்று.

## ௰௮-வது புராணங்கேட்குமகிமைப் படலம.

செப்புமித்தலத்துத்தீர்த்தமேம்பாட்டைச்சேடனுஞ்செப்பிட்
[முடியா
தொப்பிலித்தலத்துமூர்த்திமான்மியத்தையோதும்வல்லமையெவர்க்
[குண்டா

முப்புவனமும்வந்தேத்துமித்தலத்தற்புதங்களுக்கோமுடிவில்லை
திப்பியத்தலத்துத்தமச்சிறப்பனந்தந்தேருதிர்செழுந்தவமுனிவீர்.

இத்தலத்துளநன்னதியினிற்படிந்துமித்தலத்தெழிற்றவமிழைந்து
மித்தலத்தீசனரியயற்பணிந்துமிலங்குமாராதனைபுரிந்து
மித்தலத்திறைவர்மந்திரதியானமியற்றியுந்தானங்களீந்து
மித்தலத்திலங்குநல்லறப்புரிந்துமித்தலவலந்தினஞ்செய்தும். (௨)

வெற்றியும்பதமும்வீடும்பல்வளமும்விஞ்சியபோகமுமேவு
நற்றவர்தொகையுந்தேவர்கடொகையுநவிலுவதெங்ஙனமனந்தங்
கொற்றவர்குழுவுமற்றவர்திரளுங்கூறிடவேண்டுமேன்முடிபெங்
குற்றிடுமவர்தங்காதையுமனந்தமோதவல்லபமெவர்க்குண்டே. (௩)

எல்லவுமெல்லையுறவகுத்தெடுத்திங்கிசைக்குதுமெனவிராசீவ
னெல்லைவல்லமைநாப்பலபடைத்தோதினும்பலகற்பமங்கொருவு
மல்லல்பற்பலவாய்நிறைதிரிமூர்த்திமலைத்தலக்காதைகளெல்லா
மல்லியவண்ணனானவைமுற்றுமறிகுவாருந்தவத்தவரே. (௪)

ஆகலாற்றிரிமூர்த்திப்பருப்பதத்தினழகமைகதையறிவரையி
லோதினேமிந்தச்சிறப்பமைபுராணமுரைத்தவருவகையாய்க்கேட் [டோர்
காதினுமெழுதக்கழறினோரெழுதுகண்ணியரன்னவர்க்குதவி
யீதலாற்றினவரிவர்பெறும்பலனிற்சிறிதெடுத்தியம்புவாங்கேட்டிர்.

வேறு.

விண்ணவர்குழுவும்பூதமைந்துமேலானகாட்சிப்
பண்ணவர்திரளுமுய்யப்பகர்திரிமூர்த்திவெற்பி
னண்ணியசிவன்மால்வேதனற்புகழோதுகாதைப்
புண்ணியபுராணமோர்காற்புகன்றிடிற்புகழ்ந்துகேட்கில்.

மந்திரமணிநன்கானமருந்தின்மாமுடல்விஞ்சும்
வெந்திறற்பிணிகளோடுமேன்மையும்புகழுமெய்யு
முந்துநல்லறமுமாசான்மொழியுமாயுளுமொழுக்குஞ்
சந்தமன்னறிவுஞ்செல்வங்கல்வியுந்தானுண்டாமால். (௭)

உண்ணுதற்குயுரைக்கொன்றபாவமுமயலார்க்குற்ற
பெண்ணினையணையவெண்ணும்பாவமும்பிறங்குசோறுங்

தண்ணெனுஞ்சலமுமாதர்தம்மையுந்தாவிச்செல்லு
மண்ணலம்பரியும்விற்றபாவமுமனலார்பஞ்சாம். (அ)

மாலயன்சிவனைநாளும்வணங்கிடாப்பவமுமன்னோர்
சீலாற்றொண்டர்சேவைசெயாததீப்பவமுந்தெய்வக்
கோலவெண்ணீறுமண்ணுமணிதராக்குற்றத்தாலே
சாலவந்தெய்துபாவமெல்லவுந்தங்காதேகும். (௯)

உரைதிரிமூர்த்திவெற்பையொப்பதோர்தலமுமொண்சீர்
பெருகுமும்மூர்த்திக்கொப்பாமூர்த்தியும்பெரும்பாவங்கள்
கருகருட்டோணிக்கொப்பாந்தீர்த்தமுங்கழறிலிந்த
வொருதிரிபுவனத்துள்ளுமில்லையொண்டவரேயோர்திர். (௰)

ச்சைபெறுஞ்சௌநகாதிதாபதர்தங்கட்கன்பு
மிகுமெழிற்சூதன்மூன்றுமூர்த்திவெற்புப்புராண
மகமகிழ்ந்தோதிபாசியமறைந்தருள்வியாசவாசான்
புகழ்புகுபாதப்போதுபோற்றித்தோத்திரஞ்செய்தானால். (௰௧)

வேறு.

அங்கையாமலகத்துங்கவங்கனியிலழகியதென்கயிலாய
பங்களாகரயாமான்மியமுழுதும்வழுத்திடக்கேட்டமாதவர்க
டங்குமாதாத்தாற்சூதனைப்பூசைதான்புரிந்திருகரங்கூப்பி
யிங்குநீயுரைத்தவருமறைப்பொருள்கேட்டெம்பவமிரிந்தனமெனரூ

அருந்தவத்தாசேயடைந்தவர்க்காக்குமையனேயரனரியயனே
பொருந்துதற்பாமென்றுணர்ந்துபூசிக்கும்புண்ணியவுத்தமப்பொரு
[ப்பேயே
வருந்துவெம்பிணியையாற்றுசற்குருவேமாசறுகீர்த்திவாரிதியே
மருந்துறழ்வசனச்சூதமாதவனேயெனத்துதித்துவகைவாய்ந்தாரால்

வேறு.

அருமறைவாழ்கவேதனரியரனையர்வாழ்கத்
திருபரைகலைமாதென்னுஞ்செல்வவன்னையர்கள்வாழ்கத்
திரையறைதோணிபாறென்னுறெனுந்தீர்த்தம்வாழ்கப்
பொருவருந்திரிமூர்த்திப்பேர்ப்பொருப்பெழில்பூத்துவாழ்க.

அத்திரிமுனிவன்வாழ்கவனசூயைபண்ணைவாழ்
வுத்தமச்செல்விபூருபொண்டனிககருப்வாழ்க
முத்தமிழ்வாழ்கமூவர்முளரியந்தாட்கட்டொண்டு
வைத்தவராகிப்போற்றுவார்களனைவரும்வாழ் (ருரு)

ஆக படலம் ௬அ - க்கு திருவிருத்தம் கூசா ரு
புராணங்கேட்குமகிமைப் படல முற்றிற்று.

---

திருச்சிற்றம்பலம்,
திரிமூர்த்திகடிருவடிகளே சரணம்.
திரிமூர்த்திமலைப் புராணம்
முற்றிற்று.

# பிழை திருத்தம்.

| பக்கம். | பாட்டு. | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| ௰௯ | ௫௮ | ௩ | ணிரை | ணிறை |
| ௸ | ௯௰ | ௧ | விவள | விள |
| ௸ | ௬௩ | ௪ | ங்கடகை | கடங்கை |
| ௩௨. | ௨ | ௨ | வெற்றினி | வெற்பினி |
| ௪௨. | ௰௮ | ௨௩௪ | | குதவு-மெது-விதி |
| ௪௯ | ௬௭ | ௪ | றதுரு | றநுரு |
| ௫௬ | ௪௫ | ௧ | யாற்று | யாற்றுறு |
| ௫௭ | ௪௯ | ௩ | தாரு | தாகு |
| ௬௫ | ௱௰௨ | ௨ | பவங்கப் | பவங்க |
| ௬௬ | ௨ | ௧ | பயபிணோராணி | மணியபிராணி |
| ௭௫ | ௰௭ | ௩ | திருளோ | திகுளோ |
| ௸ | ௨௩ | ௨ | சிலப்புபத் | சிலப்புபப்பத் |
| ௭௮ | ௪௨ | ௩ | நயசெனி | நயசெயனி |
| ௭௯ | ௪௮ | ௪ | லாலா | லாசிலா |
| ௮௰ | ௫௯ | ௧ | நற்றவமோ | நற்றவமே |
| ௸ | ௸ | ௧ | ரத்தினமோ | ரத்தினமே |
| ௸ | ௸ | ௧ | பாக்கிசமோ | பாக்கிசமே |
| ௸ | ௸ | ௨ | வைபவமோ | வைபவமே |
| ௸ | ௸ | ௨ | மாநில | மாணில |
| ௸ | ௸ | ௩ | திடற்கென் | திடவென் |
| ௮௨. | ௭௨ | ௧ | படைக்ஙர | படைக்ஙை |
| ௯௰ | ௨௫ | ௧ | பிச்சைரு | பிச்சைதரு |
| ௯௧ | ௩௩ | ௧ | மெண்ண | யெண்ண |
| ௱௪ | ௧ | ௨ | பொகுவி | பொருவி |
| ௱௰௧ | ௪௫ | ௪ | நாடொரு | நாடொறு |
| ௱௰௩ | ௬௧ | ௨ | றன்னே | றனே |
| ௸ | ௬௩ | ௧ | விடுந் | விடுத் |
| ௸ | ௬௩ | ௩ | ணகுறை | நறை |
| ௱௰௪ | ௩ | ௩ | நால்ல் | நல் |
| ௸ | ௬ | ௪ | னெறி | னெறி |

# பிழைதிருத்தம்.

| பக்கம். | பாட்டு. | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| ௱௰௫ | ௮ | ௪ | கமல் | கமழ் |
| ௸ | ௰ | ௧ | ணிரிமை | ரின்மை |
| ௸ | ௰௨ | ௨ | தெழூந் | தெழூத் |
| ௱௰௪ | ௰௪ | ௪ | தொண் | றுண் |
| ௸ | ௰௭ | ௧ | பாச | பாக |
| ௸ | ௰௯ | ௨ | முண்டா | முண்ட |
| ௱௰௭ | ௨௧ | ௪ | தின்றி | னின்றி |
| ௸ | ௨௪ | ௩ | லுண்ணு | லுண்ணு |
| ௱௰௮ | ௩௨ | ௨ | வ்திதி | வ்விதி |
| ௱௰௮ | ௩௩ | ௩ | மலர்து | மலர்த்து |
| ௸ | ௩௪ | ௧ | யானிவச | யானிசை |
| ௱௰௯ | ௩௫ | ௪ | தேற்ற | தேட்ட |
| ௱௨௰ | ௫ | ௧ | ரிடத | நிடத |
| ௸ | ௮ | ௩ | பூவணை | பூவணை |
| ௱௨௪ | ௨௪ | ௨ | நல்லல | நல்ல |



திருமூர்த்தி சுவாமிகள்.